3034

ओम् तत् सत् परब्रह्मणे नमः

नव सन्यासि कृत

# 'प्रतीक उपासना - शयन उद्बोधन स्तोत्र माला।

इतम्

श्री काशिकानन्द ज्ञानाचार्य स्वामिनः प्रकासकः

तिरुप्पूवण मठः॥

ஒன்பது துறவியர்கள் பாடிய

# திரு எம் பாவை - திருப் பள்ளி எழுச்சி

## என்னும் அருட் பா மாலை.

இது

திருப் பூ வணம், வேதாந்த மடம்,

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சார்ய சுவாமிகள் அவர்களால்

அச்சியற்றப் பெற்றது.

விலை ரூபாய் ஒன்று] 1957 [காபி ரைட்

...ப வருடம் வைகாசி மீ 28 உ

...கட் கிழமை, வெளியீடு.

T03034
R001G07

உ சிவமயம்

ஓம் தத் சத் பரப் பிரஹ்மணே நம:



## முக வுரை.

மாந்தர்கள் உஜ்ஜீவித்தற்கு. உலகில் உயர்வுடையோர் க்தி ஞானம் என மூன்று மார்க்கங்களை உயர்வாகக் : அவற்றுள், இக் கலியுகத்தில், பக்தியும், ஞானமுமே, க் கேட்டு அநுஷ்டிக்கத் தக்கன வாம்,

ற்றுள்ளும், பக்தியே, உத்தம மத்திம அதம அதிகாரி ருக்கும், பரோக்ஷ ஞான வாயி லாக, அநர்த்த நிவிர்த்தி வாப்தி யாகிய மோக்ஷம் அடைதற்கு நல் வழி யாகும். க்தியினை, மூ. விதம் என்றும், நவ விதம் என் தீக அகங்கிரகம் என இரு விதம் என்றும், பல பிரித்துக் கூறுவர். அந்தப் பிரதீகமே, பிரகிருதி— ளத் திரிந்தது போல, பதிகம் எனத் திரிந்தது, அது பிரதிமா என்பது, பாவை என்று திரிந்தது என்று வேண்டும்.

னம் கொள்ளாக்கால், பதிகம் என்னும் சொல், து என ஆகி, இகரம் தோன்றி, சமஸ்கிருத 'சதகம் என்பன போன்று, கப் பிரத்தியயமும், மகர ஒற்றும் தனற்கு நியாயம் இல்லை' பிரகிருதம் - பிராகிருதம் - - பகுதி என்பன போன்று, பகுதியில் உள்ள, 'கு' பதி ஆகி, "கம்" வந்து, பதிகம் என ஆகி யிருக்கிறது, காலத்துக்குப் பின், பதிகம் பாவை ஆகி, அதனைக் குறித்

துப் பாடும் பாட்டு, பாவைப் பா - பாவைப் பாட்டு என்று ஆகி வந்திருக்கிறது, 'சூத்திரப் பாவை' என்பதில் உள்ள, 'சூத்திரம்' என்னும் கயிற்றை அறிவிக்கும் பதம் சம்ஸ்கிரு பதமே,

முன்னர் வைக்கும் உருவ மூர்த்தியைப் புகழும் தோத்திரக் கவிகளுக்கு, பிரதீக உபாசனைத் தோத்திரம், பக்தி ஸ்தோத்திரம், பக்திப் பாடல், வழிபாட்டுப் பாடல் என வழங்கிவந்தனர். கடவுளையோ, குருவையோ, பிரதிமை உருவங்களையோ, குழந்தைகளையோ, எதிரில் வைத்துக் கொண்டு, நிர்க் குண சொரூப மாகப் பாடும் பாக்கள் இவ் வாறய தாம். பாவை நோன்பை, "விரதம்" என்பதும் இதற்குப் பொருந்தும்.

இந்தப் பாவை நோன்பை - பாவை விரதத்தை, பெண்கள் தான், மார்கழித் திரு ஆதிரை நாளில், வைகறையில், நீர் ஆடி, இல்லங்களிலோ, ஆலயங்களிலோ, வேண்டுங் கணவர் கிட்டும் ஆறு, (பிரதீக உபாசனையே) முதல் முதலில் செய்தனர். பெண்கள் எப்போதும் பர தந்திரர்கள் ஆதலின், ஆண்கள் எப்போதும் சுதந்தரர்க ளாதலின்,

ஆதலின், பெண்கள் ஆணை விரும்புவது போல, கடவுளையோ குருவையோ, தனது நாயக னாக வைத்து, ஜீவனைப் பெண் ஆகிய நாயகி யாக வுருவகப்படுத்தித், தோழியிடம் கூறுவதாகப் பாடும் பிரதீக உபாஸா தோத்திரப் பாட்டுக்களே, திரு எம் பாவைப் பாட்டு—திருப் பாவைப் பாட்டுக்க ளாகும், ஆண்டாள் பெண்ணாகவே இருந்து, ஆ ணாகப் பகவானை அடைய வேண்டும் என்று விரும்பிப் பாடியது இயற்கை. மாணிக்க வாசக சுவாமிகள், ஆ ணாக இருந்தும், ஜீவ னாகிய தன்னைப் பெண் ணாகப் பாவித்து இறைவனை நாயக னாக அடைய வேண்டும் என்று பாடியதும், தத்துவ ராய சுவாமிகள், ஆ ணாக இருந்தும், ஜீவ னாகிய தன்னைப்

பெண் ணுகப் பாவித்து, குரு மூர்த்தியை, நாயக ணுக அடைய வேண்டும் என்று பாடியதும் செயற்கை. பக்திக்கு ' சதி,பதி ' உருவத்தில். அதிக அன்பு ரசம் ஒழுகுவதால், காம ரசம் முத லியவற்றைப் பார்க்கிலும், (சகாபாவம்) தோழமை, (தாச பாவம்) அடிமை, (சத் புத்திர பாவம்) நன் மகன் தன்மை (சன் மார்க்கம்) நல்வழி யாகிய பேற்றைப் பார்க்கிலும், சதிபதி—(நாயக - நாயகி பாவ) பக்தி உயர் வுடைய தாம், அதனுல், கடவுளும், சக்தியும், ஆணும், பெண்ணும் ஆகத் திகழ்கின்றனர், ' சயாந உத்போதநம்' என்னும் பள்ளி எழுச்சிப் பா என்பது. இறைவனையோ, தேவி யையோ, குருவையோ, நித்திரையினின்றும் எழுப்பித் தனக்கு அநுக்கிரகம் செய்யு மாறு வேண்டப்படுவதாகும்.

இந்தப் பாவைப் பா — வெண்பா — ஆசிரியப் பா - வஞ்சிப் பா - கலிப் பா என்னும் நால் வகைப் பாவில், கலிப் பாவில் பாடினர். இது வெண் தளையால் வந்த இயல் தாவு இணைக் கொச்சகக் கலிப்பா ஆகும். கொய் சகம் கொச்சகம் என்று ஆயிற்று. இப்போது, தென் ஞட்டில், பெண்கள் கொசுவம் என்று வழங்குகின்றனர். கொய்சகம் கொச்சகம் கொசுவம் என்பது, இப் போது, முன் கொசுவம் என்றும். பின் கொசுவம் என்றும் இரு வகை அநுட்டாநத்தில் இருக்கினறது.

ஆகவின், பிரதீக உபாசனைத் தோத்திரங்களும், சயநோத் போதந ஸ்தோத்திரங்களும், தமிழ் மொழியில், திரு எம் பாவை என்ற பாவைப் பா என்றும், திருப் பள்ளி எழுச்சி என்றும் வழங்குகின்றனர்: இது அநாதி யாகவே வேத கால முதல் நடந்து வருவ தாகும்.

இக்தப் பள்ளி எழுச்சிப் பாவை, விருத்தப் பாவில், எண் சீர்க் கழி நெடில் அடி ஆசிரிய விருத்தப் பா வாகப் பல வித ராகத்தில் பாடினர்.

மார்கழியில் மழை யின்மையின், மழையை விரும்பிப் பாடு வது முக்கியம். ஏனையவற்றையும் உடன் கூறுவது இயல்பு.

பகவத் கீதையில் கிருஷ்ண பகவானும் 10வது விபூதி யோக அத்தியாயத்தில். 35வது சுலோகத்தில்,

"பிருகத் சாம ததா சாம்நாம் காயத்திரீ சந்தசாமகம்
மாசாநாம் மார்கசீர்ஷோஹம் ரிதூநாம் குசுமாகர: ‖ .35"

தமிழ் கவி 22வது "பெண்க ளிற்புகழ்தி ருசொன் மேதை பொறை திண்மை பேசுகினை வென்னவே, எண்ப குத்தஎழு வோரு நானிருது வாறில் வந்தஇள வேனில்நான், நண்ப நல் பெரிய சாம நானுரிய சாம மேழினுந லத்தினுன், மண்க ளிப்பவரு திங்க ளிற்புகழ நின்ற மார்கழியு மற்றுநான்," என்று மார்சழி மாதத்தினை உயர்வாகக் கூறியிருக்கின்றார்கள் என்பதை உணரலாம்.

தாலாட்டும், குரவைப் பாவும், இவை போன்றனவே. நாக்கின் அநுகரண ஒலி யாம். ஆண்கள் பெண்களை அடைவதற்கு இவ் வாறு விரத உபாசனை இருந்த தாக இல்லை. மடல் ஏறுதல் மட்டும் இருந்த தாகத் தெரிகிறது. கன்னிப் பெண்கள் தான், ஆணை அடைவதற்கு, வைகறையில் நீர் மூழ்கிச் சுத்தராய்ப் பிரதீக உபாசனை செய்தனர்.

விதவையும், விதுரனும், பின்னர், நற் கதி அடைவதற்கு, விரத உபாசனைகளை அநுஷ்டிக்கின்றனர். தவன் இல்லாதவள் விதவை ஆவள். துரா இல்லாதவன் விதுரன் ஆவன்.

இவ் வாறு, திரு எம் பாவையும், திருப் பள்ளி எழுச்சியும், நமது குரு மூர்த்தி யாகிய திருக்களர் ஸ்ரீ வீர சேகர ஞான தேசிக மூர்த்தி களின் பேரில் செய்ய வேண்டும் என்னும் விருப்பம் உண்டாக,

பல துறவிகள் செய்தால், பல விதக் கருத்துக்கள் அமையும் எனக் கருதிப் பல துறவிகளிடம் கூற, அதற்கு நம்மைச் சேர்த்து ஒன்பதின்மர் இசைந்தமையின். ஒன்பது பெயர்கள் பாடிய திரு எம் பாவை பாட்டையும், திருப் பள்ளி எழுச்சிப் பாட்டையும், ஒன்று சேர்த்து அச்சிட்டு, அரங் கேற்றி வெளியிடல் நலம் எனக் கருதினமையின், ஒன்பதின்மர் பாட்டையும் ஒன்று சேர்த் தச்சிட்டிருக்கின்றோம்.

அறிஞர் பலரும் குற்றம் களைந்து குணம் நாடி இன்புறு மாறு செய்வார்கள் என்று குருவின் திரு அருளைச் சிந்திக்கின்றனம்.

திரு எம் பாவை-திருப் பள்ளி எழுச்சி செய்தவர்கள்.

1. காசிகாநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகள், வேதாந்த மடம், திருப் பூ வணம்.

2. நடேச சுவாமிகள், ஈசாந்ய மடம், திரு வண்ணு மலை. (தற் காலம் காரியா னூர்)

3. சித. நீல கண்ட சுவாமிகள். கோ. சித. மடம், சிதம் பரம். (தற் காலம் விதேக முக்தர்)

4. சபா பதிச் சுவாமிகள், மௌந சாமி மடம். சிதம்பரம்,

5. மகா-கோவிந்த சாமிகள், (பால் சாமி மடம் தஞ்சாவூர், தற் காலம்)

6. மகா-அத்வைதாநந்த சுவாமிகள்—(குன்றி மணிச் சாமி மடம், திரு சிராப் பள்ளி தற் காலம்)

7. அருண கிரி நாத சுவாமிகள் நாராயண தேசிகர் நிலையம் குளப் பாக்கம் சென்னை.

8. நாராயண சுவாமிகள். மதுரை தமிழ்ச் சங்கத்து பண்டிதர், கோ. சித. மடம், சிதம்பரம். (தற் காலம் திரு வை யாறு)

9. ஷண் முகாநந்த சுவாமிகள். நீல கண்ட சாமிகள் மாணவர். (தற் காலம் மதுரை)

இவர்கள் திரு எம் பாவை—திருப் பள்ளி எழுச்சி இயற்றிய நவ ரத்ந மணிகள் ஆவார்கள்.

---

## பதிப் புரை

நமக்கு, நம் குரு மூர்த்தி யாகிய திருக் களர் ஆண்டவர் என்னும் ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக ஸ்வாமிகள் மீது, மாணிக்க வாசக சுவாமிகள்—ஆண்டாள்-தத்துவ ராய சுவாமிகள் போன்று, திரு எம் பாவை - திருப் பள்ளி எழுச்சி-பாட வேண்டும் என்று எண்ணம் உண்டாயிற்று. அங்ஙன மாயினும், பல பேரைக் கொண்டு பாடச் செய்வது நலம் எனத தோன்றிற்று. அவ் வாறே, ஆற்றல் உடைய துறவியர் பலரைக் கேட்க, அவர்கள் சம்மதம் இன்றி ஆட்டுக் கடாக்கள் முட்டும் முறை போன்று பின் வாங்கினர். அவர்களிடத்துப் பாடும் ஆற்றல் மறைந்து அடங்கிக் கிடந்ததனை வெளிப்படுத்தியவுடன், நமது வாக்கை மறுக்காமல், முதல் எண்ணிக்கையில் செய்தவர்கள், சிதம்பரம் கோ. சித. மடம், சிதம்பர ஞாந தேசிக ரவர்கள் மாணுக்கர், இலக்கண இலக்கியம் வேதாந்தம் முறை யாகத் துறைபோக அறிந்த நீல கண்ட சுவாமிகள் ஆவார்கள். இவர்கள், நம்மிடத்தும் தர்க்க சங்கிரகம் அன்னம் பட்டீயம் முதன் முறை யாகப் பாடம் கேட்டவர்கள். இரண்டாவ தாகச் செய்தவர்கள். சிதம்பரம், கோ. சித. மடம், சிதம்பர ஞாந தேசிகர் அவர்கள் மாணுக்கர், சித. நாராயண சாமிகள் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பரிக்ஷையில் தேறி, சம்ஸ்,கிருதத்தில் வியாகரண தர்க்க வேதாந்த முறையாகத் துறை போகக் கற்றவர்கள். மூன் றவது செய்தவர்கள், கோவிலூர் மடம் மகா தேவ ஞாந தேசிகர் மாணுக்கர். கோவிந்த சுவாமிகள், செய்யுளியலோடு வேதாந்தம் முறை யாகக் கற்றவர்கள். நான் காவது செய்தவர்கள்; கோவிலூர் மடம். மகா தேவ ஞாந தேசிகர்

மாணாக்கர்—அத்வைதாநந்த சுவாமிகள். சங்கீத பண்போடு வேதாந்தம் முறை யாகக் கற்றவர்கள். ஐந் தாவது, சென்னை குளப் பாக்கம் நாராயண தேசிகர் மடம் மணவாள சுவாமிகள் மாணாக்கர், தேசியக் காங்கிரஸ் வாதி, இலக்கண இலக்கியம் முறையாக வேதாந்தம் கற்றுச் செய்யு ளியற்றும் ஆற்றல் வாய்ந்த, அருண கிரி நாதர், போன்ற அருண கிரி நாத சுவாமிகள் ஆவார்கள். ஆறவ தாக்கச் செய்தவர்கள். சிதம்பரம், கோ. சித. மடம், நீல கண்ட சுவாமிகள் மாணாக்கர், இலக்கண இலக்கியம் தர்க்கம் வேதாந்தம் முறை யாகத் துறை போகக் கற்று, வேதாந்தத் தமிழ் வாசக சாலையில் ஆசிரிய ராக இருந்து பிரசங்க வல்லமை உடைய ஷண் முகாநந்த சுவாமிகள் ஆவார்கள். ஏழாவ தாகச் செய்தவர்கள். சிதம்பரம் கோ. சித. மடம், சுப்ப ராய ஞான தேசிகரவர்கள் மாணாக்கர், இலக்கணம் இலக்கியம் புராணம் வேதாந்தம் சம்ஸ் கிருத மொழி தெள் மொழி முறை யாகத் துறை போகக் கற்று, திரு வண்ணு மலை ஈசாந்ய மடாதிபதியா யிருந்த, விரக்த சீல ராகிய சாந்தி ஆசிரமத்தில் வசிக்கும் நடேச சுவாமிகள் ஆவார்கள்: எட்டாவ தாக்ச் செய்தவர்கள், நாம் மிக வேண்டியதற்காகச் சிரமப் பட்டு, குறளைப் பிரமாணமாக வைத்து முறையாகச் சுவையுறச் செய்து இன்புறு மாறு, வேதாந்தம் தர்க்கம்—சிதம்பரம் நாவலர் பள்ளிக் கூடத்தில் இலக்கண இலக்கிய முறை யாகத் துறை போகக் கற்ற, சிதம்பரம், மௌந சுவாமிகள் மடம், செல்லப்ப சுவாமிகள் மாணாக்கர், சபா பதிச் சுவாமிக ளாவார்கள். அவர்கள் என்றும் நமது அன்புக்கும் நினைவிற்கும் உரியவர்கள்.

முத லாவது நாம் தான் செய்தோம். நாம் கோவிலூர் மடம் வீர சேகர ஞான தேசிகர் மாணாக்கர். மதுரைத் தமிழ்ச் சங்கம், திரு நாராயண ஐயங்கா ரவர்கள் இடம் இலக்கணம் தர்க்கம் முறை யாகக் கற்றோம். வாரணாசியில் சம்ஸ்கிருத மொழியில் வியாகரணம் தர்க் கம் சாங்கியம் யோகம் வேதாந்தம் முதலிய நூற்களைக் கற் றோம். காரை மா நகரில் வேதாந்திகள் ஜயக் கொடி! நாட்டி னோம். ஐம்பது வருஷமாகப் பிரசங்க மாரி பொழிகின்றோம்.

அநேக நூல் மொழி பெயர்த்தும், அநேக நூலுக்கு உரை யெழு தியும், அநேகஞ் செய்யுள் செய்தும், நூறு நூல் கர்த்தா— பர சமய பஞ்சாநநர். மண்டலேசுவரர். திரி பாஷா பண்டிதமணி முதலிய விருதுகளையும் பெற்றிருக்கின்றோம், எழுபத் திரண்டு வயதினையும் அடைந்திருக்கின்றோம்.

ஆதலின், இவ் அருமை வாய்ந்த ஒன்பதின்மர் செய்த நூலை, திருப் பூ வண மடத்தில் இருந்து, பொருட் செலவு செய்து அச்சிட்டும், ஒன்பதின்மர் உருவப் படங்கள் தயார் செய்தும், செகத் குரு, ஸ்ரீ சங்க பகவத் பாதாச்சாரிய சுவாமிகள் உருவப் படம் கோவிலூர், ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாந தேசிகர் உருவப் படம் திருக் களர், ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிகர் உருவப் படம் மூன் றையும் சேர்த்து, பன்னிரண்டு படங்களும் அச்சிட்டுத் தயார் செய்திருக்கின்றோம்.

அரங் கேற்று விழாக் காலத்தில், ஒன்பதின்மருக்குப் பட்டா டையும், செப மாலையும், திருப் பூ வண மடத்துச் செலவி விருந்து செய்யப்படுகின்றன.

இவ் வாறு, குரு கைங்கரியம் எனக் கருதி, திருப் பூ வணம் மடத்தி லிருந்து புத்தகம் - படம் - பட்டாடை, ஜப மாலை யாவும்- சேர்ந்து ரூ. 1000 ஆயிரத்துக்கு மேல் செலவு செய்து, நல்ல முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதைப் பணி வோடு தெரிவிக்கின்றோம்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

இங்ஙனம்,

புத்தக உரிமையாளரும், முன்னின்று இயற்றியவருமான

க்ரசிக்ரநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகள்,

திருப் பூ வணம்.

ஹேவிளம்பி ஞு வைகாசி மீ

श्री जगत् गुरु शंकराचार्य वर्याः ।



ஸ்ரீ ஜகத் குரு சங்கராச்சார்ய வர்யர்.

मुक्ति राम लिंग ज्ञान देशिक स्वामिकल् ।
कोविलूर् मठम् ।



முக்தி ராம லிங்க ஞாந தேசிக சுவாமிகள்,
கோவி லூர் மடம்.

वीर शेखर ज्ञान देशिक स्वामिकल् । तिरुक्कळर् ।



வீர சேகர ஞாந தேசிக சுவாமிகள், திருக் களர்.

நடேச சுவாமிகள். ஈசாந்ய மடம், திரு வண்ணா மலை காரியா னூர்.



नटेश स्वामिकल् । ईशान्य मठम् । तिरुवण्णामलै । कारियानूर् ।

काशिकानन्द ज्ञानाचार्य स्वामिकल् ।
तिरुप्पूवणम् मठम् ।



காசிகானந்த ஞானாச்சார்ய சுவாமிகள்,
திருப் பூ வணம்.

சபா பதிச் சுவாமிகள், மௌந சுவாமிகள் மடம், சிதம்பரம்.



सभापति स्वामिकल्। मौन स्वामिकल् मठम्। चिदंबरम्।

நீல கண்ட சுவாமிகள், கோ. சித. மடம், சிதம்பரம்.



नीलकण्ठ स्वामिकल्। को. चिद. मठम्। चिदंबरम्।

गोविंद स्वामिकल्। कोविलूर् मठम्। एकांबरकुप्पम्।



கோவிந்த சுவாமிகள், கோவி லூர் மடம், ஏகாம்பரக் குப்பம்.

अद्वैतानन्द स्वामिकल्। कोविलूर् मठम्।
कुन्रिमणि स्वामि मठम्। तिरिच्चिराप्पल्ली।



அத்வைதாநந்த சுவாமிகள்,
கோவி லூர் மடம், குன்றி மணிச் சாமி மடம்,
திரிச் சிராப் பள்ளி.

நாராயண சுவாமிகள், கோ. சித. மடம், சிதம்பரம், திரு வை யாறு.



नारायण स्वामिकल् । को. चिद. मठम् । चिदंबरम् । तिरुवैयारु ।

அருண கிரி நாத சுவாமிகள், நாராயண தேசிகர் நிலயம், குளப் பாக்கம்.



अरुणगिरिनाथ स्वामिकल् । नारायण देशिकर् निलयम् । कुळप्पाक्कम् ।

षणमुख अय्या । मदुरै ।



ஷண் முக ஐயா, மதுரை.

श्री नट राजः



ஸ்ரீ நட ராஜர்.

## திரு அண்ணாமலை நடேச சுவாமிகள் இயற்றிய
## திரு எம் பாவை விஷயக் குறிப்பு.

1. திருக் களர் ஆண்டவருக்குச் செய்ய வேண்டிய மூக் கரண வழிபாடு.

2. திருக் களர் ஆண்டவர், அவதாரம்.

3. ,, ஆண்டவர், வித்தியாப்யாசம்.

4. ,, ஆண்டவர், குருவை அடைந்து சிரவணாதிகள் செய்தல்.

5. ,, ஆண்டவர், சிதம்பரத்தை அடைந்து சபா நாயகரை தரிசித்து, மவுந சாமி மடத்தில் இருத்தல்.

6. ,, ஆண்டவர், கோவி லூர் குரு ஸ்தாநத்திற்கு எழுந்தருளி, ஆசாரி யராக வீற்றிருத்தல்.

7. ,, ஆண்டவர், வேங்கட முநிவர் முதலாயினோர்க்கு அநுக்கிரகம் செய்தல்.

8. ,, ஆண்டவர், அண்ணாமலை ஞாந தேசிக சுவாமிகள் முதலாயினோர்க்கு அநுக்கிரகம் செய்தல்.

9. ,, ஆண்டவர், சென்னை சுப்பைய ஞாந தேசிக சுவாமிகளுக்கு அநுக்கிரகம் செய்தல்.

10. ,, ஆண்டவர், நாராயண முநிவர்க்கு அநுக்கிரகம் செய்தல்.

11. ,, ஆண்டவர், மஹா தேவ ஞாந தேசிக சுவாமிகளுக்கு அநுக்கிரகம் செய்தல்.

12. ,, ஆண்டவர், காசிகாநந்த ஞாநாச்சார்ய சுவாமிகளுக்கு அநுக்கிரகம் செய்தல்.

13. ,, ஆண்டவர், கருணாநிதிக்கு, சமாதி ஆலயத் திருப் பணி செய்தல்.

14. ,, ஆண்டவர், கோவி லூர் கொற்றவா ளீசர் ஆலய மடாலயத் திருப் பணி செய்தல்.

15. ,, ஆண்டவர், கோவி லூர் கொற்றவா ளீசுரருக்குக் கும்பாபிஷேகம் செய்வித்தல்.

16. ,, ஆண்டவர், சிரிங்க கிரி ஸ்ரீ சச்சிதாநந்த சிவாபிநவ நிருசிம்ம பாரதி சுவாமிகள் ஆசீர்வாதம் பெறுதல்.

17. ,, ஆண்டவர், திருக் களர், சிவாலயத் திருப் பணி செய்தல்.

18. திருக் களர், பாரிஜாத வநேசுரர்க்குக் கும்பாபிஷேகமும், பிரஹ்மோத்சவ காலத்தில், திருக் களர் ஆண்டவர் விதேக கைவல்யமும்.

19. ,, ஆண்டவருக்குச் செய்யும் கை மாறு.

20. ,, ஆண்டவர் ஸ்ரீ பாதாதிகளின் வணக்கத்துடன் திரு எம் பாவை முற்றுப் பெறுதல்.

திரு எம் பாவை விஷயக் குறிப்பு முற்றிற்று.

## பாட்டு முதற் குறிப்பு—கவி.

பூவார் பொற்பமர் அருணு சலனுர்
உவாச்சந் திரன்தில்லை போற்றிப்பொன் னம்பலவன்
ஓயா உண்ணு எந்தாய் திவஞ்செய்யும்
பூதேவர் தேசிகா சிதம்பரம் எங்கும்
நம்பா உன்னற் கரிது சேவிற்
செஞ்சடை சிவப்பிர காசத்தைப் போற்றியே.

---

## சிதம்பரம், மௌந சாமி மடம், ஸ்ரீ சபா பதிச் சுவாமிகள் செய்த, திரு எம் பாவை 20க்கு திரட்டிய திருக் குறள் 20.

1. கற்றதனல் ஆய பயன்என்கொல் வால்அறிவன்
நல்தாள் தொழா அர் எனின். திருக் குறள் அதிகாரம் 1 குறள் 2

2. நெடும்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். அதி. 2 குறள் 7

3. உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்புக்கோர் வித்து. அதி. 3 குறள் 4

4. அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல. அதி. 4 குறள் 9

5. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. அதி. 5 குறள் 2

6. தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. அதி. 6 குறள் 5

7. பெறும்அவற்றுள் யாம்அறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. அதி. 7 குறள் 1

8. அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. அதி. 8 குறள் 10

9. விருந்து புறத்ததாத் தான்உண்டால் சாவா
மருந்தெனும் வேண்டற்பாற் றன்று. அதி. 9 குறள் 2

10. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம். அதி. 10 குறள் 3

11. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்,
எண்ணின் தவத்தான் வரும். அதி. 27 குறள் 4

12. மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். அதி. 28 குறள் 8

13. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். அதி. 35 குறள் 8

14. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. அதி. 35 குறள் 10

15. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. அதி. 36 குறள் 6

16. சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். அதி. 36 குறள் 9

17. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. அதி. 40 குறள் 1

18. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றிற்கும் ஈயப் படும். அதி. 42 குறள் 2

19. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். அதி. 52 குறள் 7

20. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து. அதி. 65 குறள் 5

திருக் குறள் முற்றிற்று.

திருப் பூ வணம் மடம், ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகள் இயற்றிய நூல்கள் பதிப்பித்தன.

| | | |
|---|---|---|
| 1. | வேதாந்த பதார்த்த மஞ்ஜுஷா. வசநம். ஹிந்தி மொழி பெயர்ப்பு. ரூ. | 2—50 |
| 2. | விசார சாகரம். வசநம். ஹிந்தி மொழி பெயர்ப்பு. ... | 2—25 |
| 3. | வியாச தாத்பரிய நிர்ணயம். வசநம் சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. ... | 0—50 |
| 4. | வேதாந்த சித்தாந்த முக்தாவலி, வசநம் சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. ... | 0—50 |
| 5. | நைஷ்க் கர்ம்ய சித்தி, வசநம் சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. ... | 0—50 |
| 6. | ஹரி மீடே, ஹரிதத்வ முக்தாவலி, சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. ... | 0—75 |
| 7. | வேதாந்த பரிபஷை, வசநம் சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. ... | 0—44 |
| 8. | ஸ்வாராஜ்ய சித்தி, வசநம் சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. ... | 0—25 |
| 9. | ஈசாவாஸ்ய உபநிஷத், சங்கர பாஷ்யம், வசநம் சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. ... | 0—25 |
| 10. | மண்டல பிராஹ்மண உபநிஷத், ராஜயோகபாஷ்யம், வசநம் சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு | 0—25 |
| 11. | வேதாந்த சஞ்ஞா, வசநம் சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. ... | 0—13 |
| 12. | கதா சரித் சாகரம், வசநம் கதை சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. ... | 2—25 |
| 13. | நாநா ஜீவ வாதக் கட்டளை, சத்யார்த்தப் பிரகாசிகை உரை. ... | 2—00 |
| 14. | கீதா சாரத் தாலாட்டு, லகு சந்திரிகை உரை. ரூ. 2—00 15. பஞ்சதசி கவி ... | 0—63 |
| 16. | மகா ராஜத் துறவு, மநப் பிரசாதிநி உரை. ரூ. 2—00. 17. பகவற் கீதை கவி (545) ... | 1—25 |
| 18. | பக்தி (வைராக்ய) சதகப் பத உரை பொழிப் புரை. ரூ. 1–50. 19. பிரஹ்ம கீதை கவி ... | 0—38 |
| 20. | வைராக்ய தீப பத உரை பொழிப்புரை ரூ. 0-50. 21 சீடாசாரம் பால போதிநி உரை ... | 0—50 |
| 22. | பகவத் கீதை 15வது அத்தியாயம் சம்ஸ்கிருதம் தமிழ் கவி உரை மூர்க்க சதகம் பத உரை | 0—50 |
| 23. | திருக் களர் வீர சேகர சரிதம் வசநம் ரூ. 1-00. 24. மந்திரோபதேசம் வசநம் ... | 0—25 |
| 25. | கீதா சாரத் தாலாட்டு குறிப்புரை ரூ. 0-25. 26. வேதாந்த சாஸ்திர ரத்நாவலி 9சேர்ந்தது கவி | 3—00 |
| 27. | தாந்திரீக த்வைத சைவ கண்டநம் (சூட்டுக் கோல் கட்டாரி புச்சம்) ... | 1—00 |
| 28. | வாசிட்டம் கவி 2055 ரூ. 2-25. 29. கீதாத் திரயம் கவி ஈசுவர கீதை பகவற் கீதை ... | 3—00 |

உ சிவ மயம்.

ஓம் தத் சத் பரப் பிரஹ்மணே நம:

ஒன்பது துறவியர்கள் பாடிய,

# திரு எம் பாவை-திருப் பள்ளி எழுச்சி

## என்னும் அருட் பா மாலை.



இது

திருப் பூ வணம், வேதாந்த மடம்,

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகளால்

அச் சியற்றி, அரங் கேற்றி, வெளியிடப்பட்டது.

ஹேவிளம்பி ௵ வைகாசி மீ 28௳ திங்கட் கிழமை.

யுனிவர்சிட்டி பிரஸ், மதுரை.

## திரு எம் பாவை - திருப் பள்ளி எழுச்சி இயற்றிய ஒன்பதின்மர்

(நவ துறவியர்கள்)

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகள் கவி | 32 |
| 2. | ,, நடேச சுவாமிகள் ... | 39 |
| 3. | ,, நீல கண்ட சுவாமிகள் ... | 32 |
| 4. | ,, சபா பதிச் சுவாமிகள் ... | 32 |
| 5. | ,, கோவிந்த சுவாமிகள் ... | 32 |
| 6. | ,, நாராயண சுவாமிகள் ... | 33 |
| 7. | ,, அத்வைதாநந்த சுவாமிகள் ... | 32 |
| 8. | ,, அருண கிரி நாத சுவாமிகள் ... | 33 |
| 9. | நீ. ஸ்ரீ ஷண்முகாநந்த சுவாமிகள் ... | 31 |
| | ஆகப் பாக்கள் | 296 |

---

# திருக் களர், ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிகர் மீது

திருப் பூ வணம் - வேதாந்த மடம்,

திருக் களர்,

ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக சுவாமிக ளவர்கள்

மாணுக்கர்

ஸ்ரீ காசிகா நந்த ஞா நாச்சார்ய ஸ்வாமிக ளவர்கள்

இயற்றிய

# திரு எம் பாவை - திருப் பள்ளி எழுச்சி

என்னும் அருட் பா மாலை.

சிவமயம்.

# திரு எம் பாவை.

### விநாயகர் வணக்கம்

செய்ய வீரநல் சேகரச் செம்மல்மேல்
உய்ய வேண்டி உஞற்றுநல் பாவைதான்
வைய கம்புகழ் வண்ண முடிந்திட
ஐயன் மாமுகன் ஐங்கரன் போற்றுவாம்.

## திரு எம் பாவை.

சீர்அமைந்த வானோர்கள் தேறும் விடியல்எனப்
பேர்அமைந்த மார்கழியில் பெட்புடனே வைகறையில்
நேர்அமைந்த சான்றோர்கள் நீர்படிந்து தூய்மையுடன்
தார்அமைந்த மாமலரைச் சாத்திப் பணிகின்றார்
கார்அமைந்த பூம்குழலாய் கண்விழியா தேஉறங்கல்
ஏர்அமையு மோவிழிப்பாய் எம்வீர சேகரனைப்
பார்அமைந்த சித்தியுறப் பாடித் தொழுதுநின்று
நார்அமைந்த நெஞ்சமுடன் நாம்தொழுவோம்
எம்பாவாய். 1

ஆதித்தன் வானவெளி ஆர்வதன்முன் தூக்கம்அற்றுச்
சாதுவர்க்கம் யாறிழிந்து தட்பம்உற வேகுளித்துப்
பேதம்அற எங்கும் பிறங்கும்எழில் நல்குருவைச்
சோதிமறை யாவையுமே தொட்டறியா தேகலங்கும்
ஆதிநறும் கொன்றை அலர்துளபத் தார்அணிவோய்
பூதி புனையும்எங்கள் புண்ணியனே என்றுதொழ
மாதே வளருதியோ மாமுநிவீ ரேசனைநாம்
போதம் உறத்தொழுவோம் போதுகநீ எம்பாவாய். 2

தெய்வத் திருமறைகள் சென்றறியா தோலமிடக்
கைவைத்த சான்றோர்கள் காலைநறும் நீர்ஆடி
மெய்வைத்த நம்குருவின் மேலாம் அடிபரவி
உய்வைத் தரத்துதிக்கும் ஓங்கும்ஒலி எங்கும்உற
மைவைத்த பூம்குழலாய் மற்றறியா தேதுயில்வாய்
செய்வித்தும் செம்சாலி தேங்கும் திருக்களரில்
பைவைக்கும் பாம்பணியும் பண்ணவன்வீ ரேசன்அடி
பொய்வைக்கும்மாயைகெடப்போற்றுவம்வாஎம்பாவாய்.

அஞ்ஞானம் மூட அலைந்து திரிந்திடும்என்
பொய்ஞ்ஞாலம் அத்தனையும் போக்க நினைந்தருளிச்
செம்ஞாயி றென்னத் திகழும் திருஅருளால்
பொய்ஞ்ஞாலம் வல்லே புறம்கொடுப்ப ஏற்றிவைத்த
மெய்ஞ்ஞான நல்விளக்கை மீதொளிரச் செய்துமிக
எஞ்ஞானமும்கடந்த இன்பவடி வத்தைஒளிர்
விஞ்ஞானம் ஆக விளக்கியவீ ரேசன்சீர்
எஞ்ஞான்றும் நெஞ்சுருகி ஏத்துவம்வா எம்பாவாய். 4

அல்லல் பிறவி அறுப்பதற்கா உள்இருளை
நல்லகன்மம் ஒன்றும் நலியாது பூதஇருள்
வெல்லும் படையால் விலகுமோ எல்விளக்கால்
நில்லா தழியும் நிலைமைபோல் ஞானத்தால்
இல்லை எனச்செய்தல் ஏலும்எனத் தொண்டருக்கு
மெல்லக் கடைவிழியால் வீச்சித் துணர்வளிக்கும்
நல்லல் திருக்களர்எம் மாமுனிவீ ரேசன்சீர்
சொல்லித் துதிப்பத் துயில்எழுவாய் எம்பாவாய். 5

சோதிமறை ஆறங்கம் தோன்றத் துருவிஎன்றும்
மேதை உறுவோர் வியப்பவீ ரேசகுருத்
தாதா உரைத்திடவே தத்துவமெ லாம்கடந்து
நீதான் தனியாக நித்தம் இருப்பதனைப்
பேதாய்நீ கேட்டிருந்தும் பேதுற் றயர்ந்தனையே
பாதாளம் ஏழினுமோ மேலும் பறைசாற்றி
ஓதும் அவன்உரையை ஓம்பிப் பவம்துடைக்க
நாதன்அவன் நல்தாளை நாம்தொழுவோம் எம்பாவாய். 6

சாதனங்கள் நான்குநனி சார்ந்தவகை தான்அறிந்தே
வேதநம் செய்தளிக்கும் வித்தகனும் வீரேச
நாதனைநம் ஆசை நவைமரத்தின் வேர்களைந்து
சோதனைகள் செய்துநலம் தோற்றுவித்த பெம்மானை
மாதம் பலவினும்சீர் மன்னிமிளிர் மார்கழியில்
வாதனைகள் இல்லாமல் வாய்ஆர வேபுகழ்ந்து
பேதம் கழன்ற பெரும்பொய்கை நீர்ஆடி
ஏதம் கழற்ற எழுந்திருப்பாய் எம்பாவாய், 7

வேலைசுல வும்தடமண் விண்வாயு தீஅறல்விண்
கோலும் மதிஇரவி கூடும்உயிர் எட்டுவித
ஆலயங்கள் உள்ளே அமர்வீர சேகரனை
நால்ஆகும் வாயானும் நாரம் துயில்வோனும்
மேல்ஆன சூள்உறவு விண்டறியா தேகலங்கி
மாலாக நிற்க வளர்ஒளியை நல்குருவை
ஏலா இளம்கிளியே எய்யா துறங்கிடுதல்
சாலாது நீஎழுவாய் சாற்றுவம்நாம் எம்பாவாய். 8

பொன்னும் பிறஎவையும் பொள்ளென் றருள்வதுடன்
தன்னையுமே சார்வார் தமக்களிக்க வல்லவனை
அன்னைஎனத் தொண்டர்தமை ஆதரிக்கும் தண்அளி
மன்னவனைச் சங்கரனும் மாதவனை ஒப்பானைத் [கொள்
தென்னைபலா கந்தி செழிக்கும் திருக்களரில்
பின்னம்அற நிற்கும் பெரியோனை வீரேசத்
தென்னவனை நல்குருவைத் தென்கழனி யூர்ப்பதியை
வன்னக் கரும்குயிலே வாழ்த்துவம்வா எம்பாவாய். 9

தண்ணீரும் காவேரி தான்எனவே சான்றோர்கள்
உண்ணீர்மை கொண்டுபுனல் ஓயா அதின்மூழ்கி
மண்ஆர் அமுத வளம்ஆர் திருக்களரில்
தண்ஆர் அளிவீர சேகரன்சீர்த் தாள்பணிந்தார்
உண்நோய்கள் எல்லாம் ஒழியவகை செய்வதற்கிங்
கெண்ணாது வாளா எவனோ துயிலுகின்றாய்
பண்ஆர் மடமொழியே பாரில் அவன்அருளாம்
தெண்நீர் படிவோம் தெளிந்தெழுவாய் எம்பாவாய். 10

கொள்ளைகொள நெஞ்சமதைக் கூடும்அழ காரினும்என்
கிள்ளைஎனச் சொற்கள் கிளக்கினும்என் நல்களர்வாழ்
வள்ளலைநம் வீரேச மாமணியைத் தான்பரவி
ஒள்ளியசீர் அன்புடனே உற்ற அடியவர்க்குப்
பொள்ளல்உடல் மூன்றுப் பொருந்தும்இரு பத்தேழும்
எள்ளும்வகை யான்என் றிறுகும் முடிச்சவிழத்
தெள்ளுபுலக் கைகொடுத்த தேவனைவாழ்த் தாதொழியின்
கொள்ளும் துயில்நீங்கிக் கோதாய்வாழ்த் தெம்பாவாய் 11

மாகாய மூன்றுமே மாண்டொழியும் என்றுசொலி
ஆகாய ரூபமென ஆக்கியவீ ரேசன்சீர்
வாகாய நாம்பாடி வாழ்த்துதொறும் வாழ்த்துதொறும்
போகாய கண்களின்நீர் பொள்என்று போய்உகவே
தீகாயும் நல்மெழுகு போலமநம் சேர்ந்துருகும்
ஓகோ உரைநாவும் உள்ளும் உடம்பும்எலாம்
பாகாம் எனஇனிக்கும் பன்னும்அவன் சீர்பாடச்
சேகோயும் நீர்த்தடத்தில் சென்றாடாய் எம்பாவாய். 12

பெண்உருவை நெஞ்சில் பிறங்கவிடான் வீரகுரு
நண்ணும் உமைஉ ருவை நன்குமநம் நீங்கவிடான்
கண்ணும் கருத்துமாக் கொண்டவனைப் பாடிஅன்பர்
உண்நெக்கு நிற்பவிழி யோடுநீர் தாரைகொளக்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்குகின்றாய்
கண்ணிற் கினியான் கழலின் புகழ்பாடின்
எண்ணில் பிறவிவரா வந்தாலும் எய்ப்படையோம்
அண்ணல் அவன்புகழை ஆதரித்தோ தெம்பாவாய். 13

வண்ணக் கிளிமொழியார் மாமையழ கெப்பொதும்
உண்நெக் குருகியிட ஓவியத்தும் பாராதான்
எண்ணின் நமைஅவன்தான் ஏன்றுகொளான் என்றெண்
கண்ணைப் பிசைந்து கவலைமேல் கொள்ளாதே [ணிக்
அண்ணல் பரசிவன்போல் அன்பர்க் கெளியவன்காண்
தண்ணளியால் வந்ததிருத் தாய்மார்க்கு மெய்ஞ்ஞாநக்
கண்அளித்து வீடருளும் கண்ணியக்கொள் வீரேசப்
புண்ணியனை நீஅணுகிப் போற்றிடுவாய் எம்பாவாய். 14

தார்மேவித் தாரணியில் தன்னைத் தரவல்ல
நார்மேவும் வீரகுரு நாதன்இவன் பார்ஆரும்
தேர்மேவு பிஞ்ஞகனே தேரின்என உள்கசிந்து
சீர்மேவும் அன்பர்எலாம் தேர்ந்துநனி வாழ்த்துகின்றார்
ஏர்மேவும் முத்தியினை எய்திப் பிறப்பகற்றப்
பார்மேவி நல்தவங்கள் பண்ணுதலும் வேண்டாவே
கூர்மேவும் மைவிழியாய் கொஞ்சுதுயில் விட்டவனை
நேர்மேவி வாழ்த்திடுவாய் நேர்ந்திடலாம் எம்பாவாய். 15

நாதன் திருக்களரான் நங்கள்வீ ரேசகுரு
ஏதம் வராதளித்து எம்தமையும் உள்கொண்டு
போதமதைத் தந்திரண்டு பற்றையுமே போக்கினன்காண்
மாதரசே கீதைபுகழ் மார்கழியில் நீர்மூழ்கிப்
போதலரும் போதினில்அப் புண்ணியனைப் பாடுவையேல்
வாதனைகள் மூன்றும் வறுத்தவிதை ஆகிவிடும்
சோதிமயம் ஆகத் துலங்கிடுவாய் அன்னவனை
காதலொடு பாடிக் கசிந்துநிற்பாய் எம்பாவாய். 16

வண்டொலிக்கும் சோலைமிக மன்னும் திருக்களரில்
பண்தழைக்கும் பாஞான சம்பந்தர் பாடல்பெறும்
திண்தடந்தோள் பாரிசா தேசுரர்க்குக் கோயிலதைக்
கண்டிரதம் ஐந்தியற்றிக் கண்டவர்கள் தாம்வியப்புக்
கொண்டமையக் கும்பாபி டேகம் குயிற்றித்தேர்
மண்டிவர ஈசரையே வைத்திழுக்கும் நேரமதில்
**திண்தேர்** நிலைக்கமகா தேவஎன வீரேசக் [ வாய். 17
கொண்டல்முத்தி கொண்டவிதம் கூறுகநீ எம்பா

நம்மையும் ஓர்பொருளா நாடி நமவான
பொய்மைஉடல் ஆவிபொருள் போதும்எனக் கொண்டு
மெய்மைஆ நந்தஉரு மேவ நமக்களித்த [தன்
செம்மை அருளாளன் தெய்வ சிகாமணியாம்
தம்மை அறிந்தவர்க்குத் தாமாய் அமர்ந்தகுரு
இம்மை மறுமைஎலாம் ஏகபரம் என்றருள்வோன்
பொய்ம்மை அகலப் பொலியும் நறும்சோதி [வாய். 18
ஐம்மைகொளும் வீரேச அண்ணலைப்பா டெம்பா

வாழைஎனும் புல்லில்உறும் மட்டைஎலாம் நீக்கிநடுக்
காழ்அமைந்த தண்டைக் கதுவல்என மேல்மேலாச்
சூழுகின்ற கோசம்எலாம் சூழ்ந்தொதுக்கத் தோன்று
பாழினையும் நீக்கப் பயில்கிரினான் ஆவன்என [கின்ற
ஆழும்அந்த நல்உணர்வும் அற்பம்என விட்டகமே
பேழைப் பிரமம்எனப் பேசும்நெஞ்சும் தான்நழுவ
வாழ்கவொன்று என்றுரைத்த மன்வீர சேகரனை
ஏழு பவம்தொலைய ஏத்திடுவோம் எம்பாவாய். 19

தேவர்எலாம் போற்றும் திருக்களர்வீ ரேசன்தாள்
ஆவலொடு பாடி அடைந்தடியம் என்றைக்கும்
ஓவல்இன்றி வீணே உழன்று கவல்மநத்தைத்
தாவாப் பிரமத்தே தான்நிலைக்க வேவைத்துத்
தேவர் எனஉலகர் தேற நிலைத்துநின்றல்
சாவும் பிறப்பும் தவிர்ந்த சொருபமதா
ஆவதுமெய் என்ன அறிந்தவன்தாள் பாடியுறப்
பூஅலரும் பொய்கைபடிந் தாடுகம்வா எம்பாவாய். 20

பாவலர்கள் நாளும் பதமலர் போற்றிநிற்க
நாவலர் மெய்மைதன்னை நன்குரை செய்காநன்றே
தேவர்கள் உள்உவப்பத் திங்கள்மும் மாரிபெய்க
காவலர் பூமிதன்னைக் காக்கவே தாந்தம்எங்கும்
ஓவுதல் இன்றிஎன்றும் ஓங்குக மெய்யுணர்வை
ஏவரும் கொள்ளவந்த எங்கள்வீ ரேசன்நல்ல
பூஅடி வாழ்கஇன்பம் பூத்திட என்றுரைத்து
நாவினல் வாழ்த்த நயந்தெழுவாய் எம்பாவாய். 21

திரு எம் பாவை முற்றுப் பெற்றது.

---

திருப் பள்ளி எழுச்சி, (பூபாள ராகம்)

எண்சீர்க் கழி நெடில் அடி ஆசிரிய விருத்தம்.

சூரியன் கிழக்கினில் தோன்றினன் நள்றே
தூயநல் மாமலர் விரிந்தன துதைந்தே,
ஆரியன் திருஅடி பழிச்சினர் அடியார்
அகிலமும் விளங்கவே யறைந்தன மறைகள்
காரியம் காரணம் அன்றிஇன் றெனவே
கண்டனர் களிப்புறக் காட்சிய தாகத்,
தேர்இயல் திருக்களர் திகழுநல் குருவே
திருஅடி தரப்பள்ளி எழுந்தரு ளாயே.

வேரிஅம் கமலமோ விரிந்தன இரவி
விரைந்தனன் பறவைகள் விரைந்தன விசும்பில்,
பேரியல் பிறப்பதை ஒழிப்பது போலப்
பிலத்தினில் சென்றன நாகங்கள் எல்லாம்,
கூரிய நின்திரு வாக்கியம் கொண்டே
கோதறு தத்துவ மசிப்பொருள் தேர்ந்தோம்,
நேர்இயல் திருக்களர் வீரசே கரனே
நின்பதம் தொழப்பள்ளி எழுந்தரு ளாயே. 2

ஊறியல் உடல்களாம் மூன்றையும் தள்ளி
உன்உரு அறிவென உணர்த்திய நாளும்,
மாறியல் பின்றிய மக்களுக் கருளி
வல்இருள் அகற்றிய மாசறு மணியே,
ஆறியல் பங்கமும் அளவிடற் கரியாய்
அருணனும் விசும்பிடை அடைந்தனன் நன்றே,
பாறியல் பின்றிய வீரசே கரனே
பதம்தரத் திருப்பள்ளி எழுந்தரு ளாயே. 3

சீர்தரும் திருஅருள் தனைப்பெறக் கருதிச்
சிறப்புறும் அடியவர் சங்கமொ டடைய,
ஏர்தரும் மறைகளின் முடிவினைக் கொள்ள
இங்குவந் தனைகொல்என் றிசைத்திடத் தொழவும்,
ஆரிய அடிமலர் தலைமிசை வைத்தே
ஆவியோ டாக்கைகொண் டாட்கொளும் குருவே
வீரசே கரதவ விடிந்தது பிறப்பு
விளிவுறத் தொழப்பள்ளி எழுந்தரு ளாயே. 4

திருஉறை கோவிலூர்த் திருப்பதி மருவிச்
செகம்எலாம் புகழ்ந்திடத் திருக்களர் வந்து,
எருக்கணி பாரிசா தேசுரர் தமக்கும்
எங்கள்தாய் ஆகிய அமிர்தவல் லிக்கும்,
பெருநகர் அமைத்தநல் பெருமையைப் பாடிப்
பெருந்தவப் பெரியர்நின் திருமுனர் அடைந்தார்,
திருக்களர் வீரசே கரகுரு தேவே
திருஅடி தரப்பள்ளி எழுந்தரு ளாயே. 5

திங்களும் மழுங்கிடத் திநகரன் புகுந்தான்
செப்பரும் சீவர்கள் திமிரம தொழிய,
மங்கள ஆரியன் எனவந்து பெயரும்
வடிவும்இ லாதசெம் சொரூபம தருள,
மங்கையர் மகவுபொன் மயக்கம தொழித்தே
மண்இடை மனிதனாய் வந்துநல் வளத்தால்,
பங்கமில் திருக்களர் உறைவீர குருவே
பதம்தரத் திருப்பள்ளி எழுந்தரு ளாயே. 6

ஊரண நாபியின் உவமைகொண் டிந்த
உலகினைத் தோற்றிநின் றழிதரச் செய்தும்,
ஆரணத் தமர்ந்திடும் ஐக்யமா வாக்கியம்
அவன்இவன் என்பதை அறிகெனத் திநமும்,
காரண போதம தளித்திடும் குருவே
கண்டுன தடிதொழத் தவத்தினர் புகுந்தார்,
ஏர்அண உருவனே எழில்பள்ளி இரிந்தே
எழில்வீர சேகர எழுந்தரு ளாயே. 7

நங்கையர் நவில்மொழி நன்றெனக் கருதி
நாட்களை அவத்தினில் கழித்துற வாடி,
இங்கியல் வழிஅறி யாதுழல் வேனை
இறைவீர அடிசிரம் இருத்திக்கண் பார்த்தே,
பொங்கும்ஓர் இயல்பாகப் பொருந்துவ தாம்மா
புறம்பிற பலஇயல் பொருந்துவ என்றே,
சங்கைய தறச்சொலி எனைத்தனி ஆளத்
தரைவரு வோய்பள்ளி எழுந்தரு ளாயே, 8

தாரகம் ஆயதோர் பிரமத்தை அறியத்
தயக்கம தின்றிய சமயமீ தெனவே,
நாரகம் கொண்டுனை நம்பிவந் தடைந்தேன்
நாயக வீரசே கரதவ நாயேற்கு,
ஆரண முடியினில் அமர்தரும் அதனை
அறிந்தினல் ஒழிவின்ப அடைவினை அடையத்,
தாரணி தனில்ஒரு விரகினைத் தரவே
தயைவீர குருபள்ளி எழுந்தரு ளாயே. 9

நூல்பல கல்எனும் நோன்மைகொள் உரையை
நோக்கிலேன் சான்றவர் இனத்திரு எனும்ஓர்,
வாலிய உரையையும் மதித்திலன் ஐயோ
மாமறைப் பொருள்உறும் வழிஅறி வேனே,
தாலம தனில்உயர் தருவீர குருவே
தத்துவம் தெரிவகை சார்ந்தெமக் கருளிக்,
கோலிநல் வயல்வளம் கொழிதிருக் களர்ஊர்க்
குலபதி திருப்பள்ளி எழுந்தரு ளாயே. 10

திருப் பள்ளி எழுச்சி முற்றிற்று.

**திருக் களர் ஆண்டவர் என வழங்கும் கோயி லூர்,**
**ஸ்ரீ வீர சேகர ஞான தேசிக ஸ்வாமிகள்,**
**திருப் பள்ளி எழுச்சி—திரு எம் பாவை என்னும்**
**அருட் பா மாலை.**

*இவை*

**திரு வண்ணு மலை, ஈசாந்ய மடம், காரியா னூர்,**
**ஸ்ரீ நடேச சுவாமிகள் அவர்களால் பாடப் பெற்றவை.**

திரு ஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொ டுனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

**கோவி லூர் வன்னி விநாயகர் வணக்கம்.**

வன்னிநிழல் ஐங்கரதே வன்பதநெஞ் சேசென்னி
துன்னிநிழல் செய்யத் துதி.

**கோவிலூர் ஆண்டவர் மங்கலம்.**

முத்திரா மேச முநிவரரை உள்ளமே
நித்தமுபா சிப்பாய் நெகிழ்ந்து.

**பரமேஷ்டி ஆசாரியர் மங்கலம்.**

கருணு நிதிபொற் கழலிணையை நாடு
தெருணுளும் ஓங்கிட நெஞ் சே.

### பரமாச்சார்யர் மங்கலம்.

பள்ளி எழுச்சிமுற்றப் பல்கால் பணிந்திடுவாம்
தெள்ளியவீ ரேசுரரைச் சிந்தனைசெய்—தொள்ளிய
பாவலர்கொண் டாடும் பரமாம் நல்லறிவு
மேவ நமக்கு விரைந்து.

### ஆசாரியர் மங்கலம்.

சுப்பரா யப்பெயர்கொள் சோதிமகா தேவரையாம்
எப்பொழுதும் சேர்வமித யத்து.

### அவை அடக்கம்.

கங்கையைத் தாங்கிய கலசமும் வழிபடத்
தங்கிய தாமெனத் தகவிலென் மொழியுமே
வீர சேகர விமல மெய்ஞ்ஞாந
தேசிகன் புகழொடு திகழ்தலின்
திருந்திய புலவரால் விரும்பவும் படுமே.

### திருப் பள்ளி எழுச்சி.

போற்றிசெய் அடியவர் உளந்தனில் புகுந்து
பொய்யிருள் கடிந்துயர் போதவின் புருவைத்,
தோற்றுதல் செய்துபின் மனவிடர் எல்லாம்
தொலைத்திடு சுடருருக் கருணைநல் நிதியே,
தேற்றிய ஞானமெய் அடியவர் பயிலும்
திருக்களர் வீரநல் தேசிக மணியே,
ஈற்றினை மேவிய திரவிருண் முழுதும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

ஆதவன் குணதிசை அணுகினன் தூய
அன்பர்தம் மனதினில் அறிவுத யம்போல்,
மாதவர் அனைவரும் வந்தனர் திருமுன்
மலர்ந்தன கமலங்கள் குவிந்தன குமுதம்,
சீதள முகமுடைத் தேவர்கள் புகழும்
திருக்களர் வீரநல் தேசிக மணியே,
ஈதலை உடையவர் மேற்றிரு வுளஞ்செய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 2

பூங்குயில் கூவின புலர்ந்தது புனிதப்
பொய்கையில் ஆடிடப் போயினர் பலரும்,
நீங்கின தாரகை நீத்தவர் உளத்தே
நிர்க்குண சிவமென நிகழ்ந்தனன் கதிரோன்,
தீங்குகள் அகற்றுநல் தீர்த்தங்கள் பயிலும்
திருக்களர் வீரநல் தேசிக மணியே,
ஈங்குறை அடியவர் பணிசெய நின்றார்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

கூவின கோழிநல் வாவியில் அறுகால்
குமுறின தாமரை நறவுகள் பருகி,
மேவிய மாதவ மெய்த்துரு வாச
வித்தகர் முதலிய விமலர்கள் பரவச்,
சேவினில் வருசிவன் உமையொடு மேவும்
திருக்களர் வீரநல் தேசிக மணியே,
ஏவலர் தருபொருள் உடல்உயிர் கவரும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

பறவைகள் இயம்பின இயம்பின சங்கம்
பண்பொடு வாத்தியம் பலமுழங் கினவே,
அறவர்கள் அனைவரும் அன்புடன் எதிர்வந்
தணுகினர் சிரசிலஞ் சலியொடு ஞானத்,
திறவுடை அறிஞர்கள் செயலறும் நிலைசேர்
திருக்களர் வீரநல் தேசிக மணியே,
இறவினில் அடியவர் இதயம்வந் தொளிரும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

திவ்விய வடிவுள தேவர்கள் பதமும்
சிறிதெனக் கண்டுளம் தெளிந்துள துறவோர்,
தவ்வறு பலமலர் மாலைகள் தொடுத்துச்
சாத்தநிற் கின்றனர் சந்நிதி யதனில்,
செவ்விய வலம்புரிக் களிறுருத் திரர்சேர்
திருக்களர் வீரநல் தேசிக மணியே,
எவ்வமில் அடியவர் ஏத்திடு கின்றார்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

பொற்புடை வீணையர் யாழினர் மீட்டும்
போர்தவு ளத்தொடு பொருந்தினர் ஒருபால்,
மற்சரம் ஆதிய அகன்றுள துறவோர்
மருவினர் திருவடித் தெரிசனம் கருதிச்,
சிற்சபை நாயகன் திருவருள் மேவும்
திருக்களர் வீரநல் தேசிக மணியே,
இற்செறி அடியவர் அடிதொழ நின்றார்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 7

அங்கையில் பலிகவர்ந் தாசைகள் அகற்றி
அமர்ந்துள துறவிகள் அடைந்துசந் நிதியில்,
மங்கலம் தருமுயர் வடமொழி யதனில்
மருவிய் துதிபல புரிகுவர் ஒருபால்,
திங்களை அணிந்துள சிவனெழுந் தருளும்
திருக்களர் வீரநல் தேசிக மணியே,
இங்கென தல்லலை அறுத்தருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 8

மூவர்கள் அருண்மொழி முழங்குவர் ஒருபால்
முத்தியே வடிவாகி நிற்பவர் ஒருபால்,
மேவரும் வாதபு ரீசுவரர் அன்பர்
விமலர்தம் வாசகம் விளம்புவர் ஒருபால்,
தேவனும் தேவியும் இருந்தருள் புரியும்
திருக்களர் வீரநல் தேசிக மணியே,
யாவரும் இன்புற மேவிய மேனி
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

சாந்தியை அடைகுரு கூர்ச்சட கோபர்
தந்திரு வாய்மொழி சாற்றுவர் ஒருபால்,
மாந்தர்கள் பற்பலர் தத்துவ ராய
மாகுரு வாய்மொழி வழங்குவர் ஒருபால்,
சேந்தனை அருளிய சிவனெழுந் தருளும்
திருக்களர் வீரநல் தேசிக மணியே,
ஈந்துள மகிழ்பவர் இறைஞ்சிடு கின்றார்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 10

திருப் பள்ளி எழுச்சி முற்றிற்று.

# திரு எம் பாவை.

## மங்கலம்.

சித்தமே உள்ளுருகிச் சிந்தித்து வந்திப்பாய்
அத்தர்வீ ரேசர் அடியிணையைச்—சித்தப்
பிரமமந்த நங்குரவர் பேதையேங் கட்கு
வரமருளப் பாவைமுற்ற வந்து.

—

பூவார் திருக்களரில் பொற்புடனே மன்னியசீர்த்
தேவாதி தேவாய்த் திகழ்வீர சேகரனை
மேவாத மாநுடர்போல் வீண்காலம் போக்காதே
நாமொர ஓதி நலம்பலபெற் றுய்குதியால்
சாவாப் பிறவாத் தனிமுதலே என்றுநினைந்
தோவா துளங்கரைந்தவ் ஒண்பொருளாய் நிற்குதியால்
பாவாணர் போற்றும் பரமகுரு பாதமலர்
மேவாத் தொழுதுபணி மேவுதியால் எம்பாவாய். 1

பொற்பமர் வைசியர் மேவும் புதுவயலில்
கற்பமர் அம்மையுமை ஆற்றும் கடுந்தவத்தின்
நற்பயனாய் வந்தமெய்ஞ் ஞாந தினகரனைச்
சிற்பரனார் தண்ணளியைச் சேர்வீர சேகரனை
உற்பவமீ றில்லாத உண்மையறி வாநந்த
தற்பரத்தை அன்பருக்குத் தந்தருளும் சற்குருவாம்
கற்பகத்தைப் பாடிக் கசிந்துதுரு வாசமுநி
அற்புதஞ்செய் பொய்கைபுகுந் தாடேலோர் எம்பாவாய்.

அருணா சலனார் அருந்தவச் செல்வன்
கருணா கரன்றமிழ்க் கல்வியில் தேர்ந்தோன்

தருணவத் தைக்கண் தரையாசை யோடு
பொருணு ரியராசை நீத்த புனிதன்
தெருணுடு வோர்க்குச் சிறந்த குருநாதன்
மருணுடா தவ்வீர மாதவனைப் பாடி
இருணமம் போயிற் றெழுந்தான் இரவி
அருணுடிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 3

உவாச்சந் திரன்போல் ஒளிர்சிதம்ப ரேசன்
தவாக்கரு ணுநிதி தாண்முடிமேற் சூடிச்
சிவாக்கொழுநன் சிற்பிரம செம்பொருளைக் கேட்டுத்
திவாத்திங்கள் ஆண்டுபல சிந்தித்துத் தேறிக்
குவாற்பல் விடயம் குமைத்துணர்வு வங்கத்
தவாப்புணரி நீந்திய அண்ணல்வீ ரேசன்
செவாய்க் கருங்கண் செவ்வீநம் சிந்தைசேர்
துவாப்பதும பாதம் துதியேலோர் எம்பாவாய். 4

தில்லைப் பதியில் திருவளர்சிற் றம்பலத்தே
தொல்லைப் பிறவித் துயருயிர்க்கு நீக்குதற்
கெல்லையிலாப் பேரொளி ஈசனுர் செய்நடநம்
வல்லையிற்போய் ஆண்டுசில மன்னித் தரிசித்து
நல்லாய் மவுநமடம் நண்ணினவீ ரேசுரனை
அல்லல் பசிக்கங்கை யேற்றுண் டடியருளக்
கல்லைக் கரைக்கும் கனசித் தனையெல்லாம்
வல்ல இறைவனைப் பாடேலோர் எம்பாவாய். 5

போற்றிப்பொன் னம்பலவ ணரருளும் பொன்மொழியை
ஏற்றுச்செல் வஞ்சேர் எழிற்கோவில் ஊர்மடத்தில்
வீற்றுக் குருவாய் இருந்தவீ ரேசுரனைக்
காற்றுப் புனல்விண்மண் காய்தீ இரவிமதி

தோற்றுமுயிர் எட்டுவிதச் சூழலெலாம் ஆகநன்று
தோற்றித் தனிநின்ற சுத்தசுயஞ் சோதியைப்
போற்றிப் பணிந்து புகழ்ந்துருகிப் பாடித்தேன்
ஆற்றுப் புனிதநீர் ஆடேலோர் எம்பாவாய். 6

ஓயாப் பிறவி எடுத்தலுத்தோம் ஒண்ணுதால்
மாயாப் பொருளை மகத்தை உலகத்தில்
தோயாச் சுடர்மணியைத் தொன்மைப் பரம்பொருளை
வாயாற்கா யத்தால் மனத்தால் பணிசெய்த
வீயாத் தவச்செல்வர் வேங்கடனூர் ஆதியர்க்குத்
தாயாகித் தண்ணளியால் தந்தவீ ரேசுரனைக்
காயாம்பு மேனிக் கடவுளென்றே பாவித்தால்
சாயாத் தனிவீடு சார்ந்திடுவோம் எம்பாவாய். 7

உண்ணு உவரி உமையம்மை போற்றிகழ்ந்து
நண்ணு உலகோர் நலங்கருதிப் பன்மலையைத்
தண்ணூர் அருண்மழையைச் சற்குருநம் வீரேசர்
அண்ணு மலைவெள்ளி அங்கிரியில் பெய்ததுபோல்
எண்ணுமல் எங்கும் எழிலிமழை பெய்திடுக
கண்ணூர் இரவி கதிரால் கடிந்ததிருள்
விண்ணோரும் ஆட விரும்புமது புட்கரிணித்
தெண்ணீர் புகுந்துகுடைந் தாடேலோர் எம்பாவாய். 8

எந்தாய் அருளென் றிறைஞ்சிப் பணிசெய்த
சிந்தாத தெள்ளறிவொ டன்புசெறி சுப்பைய
நந்தா முநிவருக்கு ஞானமருள் சற்குரு
செந்தா மரைக்கயஞ்சேர் தேம்பொழில்கள் பூத்துமலர்ப்
பைந்தேன் உகுத்திடும் பல்வளஞ்சேர் கோவிலூர்ச்
சிந்தா மணியாய்த் திகள்வீர சேகரனூர்

கொந்தார் நறுங்குழல் கோதாய் குணம்பரவி
அந்தா மரைக்குளநீர் ஆடேலோர் எம்பாவாய். 9

திவஞ்செய்யும் நாரா யணதெய்வ நாவாய்
தவஞ்செய்யும் நாரா யணதா பதர்க்கீங்
தெவஞ்செய் பவாம்புதியின் ஏற்றுமீ காமன்
அவஞ்செய் துழலும் அடியோங் களையும்
சிவஞ்செய் அடியரில் சேர்த்தமா தேவன்
பவஞ்செயஞ் ஞானமாம் பானுட் கிரவி
சுவஞ்செய்யும் தூயகுரு வீரேசன் பாடி
நவஞ்செய்யும் பூம்புனலில் நன்றுடாய் எம்பாவாய். 10

பூதேவர் போற்றும் புகழான் முனிவரருக்
கேதேவ தேவன் இசைத்துளவின் பப்பொருளை
மாதேவர் கேட்ப மலர்ந்ததிரு வாய்வீரன்
ஏதே வரினும் இடர்கருதா நெஞ்சுரத்தான்
சாதேவர் தங்களைச் சற்றும் கருதாதான்
மாதேவ என்றீ சனையழைக்கும் மாண்புடையான்
தீதே வலிந்தொழிக்கும் செம்பொன் பதம்பாடிப்[ வாய்,11
போதேயும் பொய்கைகுடைந் தாடேலோர் எம்பா

தேசிகா காவென்று செம்பொன் பதம்பணிந்த
காசிகா நந்தர்க் கருளும் கடைக்கண்ணன்
மாசிகா விற்றவழும் மாண்புடைய கோவிலூர்
நாசிகா நாட்டஞ்செய் நற்றவத்தோ ருக்கரசு
பேசிகா மூச்சொடுங்கு பெற்றியார் உள்ளொளிரும்
தேசிகா முத்திரபல் போகா தியில்விரத்தர்க்

கோர்சிகா மாணிக்க மாயொளிர்வீ ரேசுரனே
நேசியா தின்னம் துயிலுதியோ எம்பாவாய். 12

சிதம்பரமே ஆன சிதம்பரே சற்கு
விதம்பெறும் கோவிற் பணிசெய் விமலன்
பதம்பெறு வோர்க்குச் பதுமநிதிச் செல்வன்
திதம்பெறு ஞாநியர்க்குச் சீரிய நட்பு
நிதம்பெறுவோர் ஆடும் நிருமல தீர்த்தன்
இதம்பெற நிற்கின்ற எங்கள்வீ ரேசன்
முதஞ்செய்யும் பாதமலர் முன்னித் துதித்தே
இதஞ்செய்யும் பொய்கைநீர் ஆடேலோர் எம்பாவாய். 13

எங்குநிறை செம்பொருளே எய்தினவர்க் கீவதொடு
தங்குகன்னி நாட்டுத் தனவணிகர் தந்தபொருள்
அங்கமறி வாநெல்லை அம்மைகொற்ற வாளீசர்
தங்குதிருக் கோவில் தகுபணியில் தாபதர்சேர்
துங்கமடத் துப்பணியில் துன்றிப் பயன்படுமா
றிங்களித்து நன்றுவக்கும் எம்வீர ஞர்முகம்போல்
செங்கமலம் பூத்துச் செருத்துத் திகழ்ந்தனவால்
தங்காயம் மாதவனுர் தாட்புனலா டெம்பாவாய். 14

நம்பா அருளென்று நாடித் திருநெல்லை
அம்பா தவஞ்செய் அழகார் சமிவநத்துத்
தம்பாதம் அன்பருக்குத் தந்தகொற்ற வாளீசர்
கும்பாபி டேகம் குயிற்றுவித்துத் தன்னடிசேர்
எம்போல்வார் மாட்டும் இரங்கும்வீ ரேசுரனே
நம்பாதார் உள்ளம்போல் நண்ணும் இருளிரிய
வம்பார் கமல மலர ரவியுதித்த
தம்பார் மதுநதியில் ஆடேலோர் எம்பாவாய், 15

உன்னற் கரிதாய் உயர்ந்த சிருங்ககிரி
மன்னித் திருந்திய மாதவத்தோர் பேரரசு
தன்னைச் சமிவனத்தே சாலப் பரிந்தழைத்து
முன்னிப் பணிந்தாசி பெற்றமுது மாதவனை
அன்னச் சுமையில் அபிமானம் பாற்றியுயர்
தன்னைத் தெரிவித்த சற்குருவீ ரேசுரனைப்
பொன்னொத்த மேனிப் புராரியென்றே பாவித்தால்
இன்னல் கடலில் விழோமேலோர் எம்பாவாய். 16

சேவில் பதஞ்செய் திருக்களரின் மேவுசிவன்
கோவில் பணியில் குருபரனூர் உள்ளம்போல்
மேவிக் கதிரோன் விரைந்துதயம் செய்தனனால்
ஆவிக் கமுதை அடியோம் உளக்கரும்பை
நாவிற் கினிய நலஞ்செய் பழச்சுவையைத்
தேவில் திகழ்வீர சேகரனும் தேசிகனைப்
பாவித் துளமுருகிப் பாடிப் பளகறுக்கும்
ஆவிப் புதுப்புனலில் ஆடேலோர் எம்பாவாய். 17

செஞ்சடையார் அண்ணல் திருக்களர் ஆலயத்தில்
விஞ்சுபொருள் ஈட்டி விரிவாப் பணிசெய்து
குஞ்சிதபா தத்தருளால் கும்பாபி டேகமதைச்
செஞ்சப் புரிந்திறைவர் தேரதனில் உற்சவத்தில்
அஞ்சொலா ளோடு வரும்போ தரகர
நஞ்சுண்ட மாதேவ என்றழைத்து நாதர்தம்
கஞ்ச மலரடிசேர் கண்மணிவீ ரேசுரனை
அஞ்சொலாய் பாடிநீர் ஆடேலோர் எம்பாவாய். 18

சிவப்பிர காசத்தைச் சீரடியார்க் கீயும்
தவப்பிர காசனைத் தன்னடி யோமுக்கு

நவப்பிர காசத்தை நண்ணுவித் தல்லல்
அவப்பிர காசம் அகற்றும் குருவைத்
திவப்பிரகா சாதித் திருத்தக் கொளியுள்
சுவப்பிர காசமாம் தூயவீ ரேச
பவப்பிர காசனைப் பாடிநீ நிற்பாய்
சிவப்பிர காசமகா தேவனாய் எம்பாவாய் 16

போற்றிவீ ரேசகுரு புங்கவர்தம் பொற்பாதம்
போற்றியடி யார்க்கபயம் செய்கின்ற பொற்கரம்
போற்றியடி யார்க்கருளும் பொற்பாற்செந் தாமரைக்கண்
போற்றியடி யார்க்கருளும் புன்முறுவல் பூத்தவாய்
போற்றியடி யார்க்கருளும் புண்ணியவே தாந்தநூல்
போற்றியடி யார்க்கருளும் போதமாம் பாற்கரன்
போற்றியடி யார்காணும் பொன்னார் திருமேனி
போற்றிநீர் ஆடுதி மார்கழியில் எம்பாவாய். 20

போதக் குரிசில்வீ ரேசகுரு புங்கவர்சீர்
பாதக் கிவையர்ப் பணம்.

வாழிவீ ரேசுரர் நங்குரவர் மாதவர்
வாழியிறை சீர்பரவு வார்.

திரு ஞாந சம்பந்த சுவாமிகள் தேவாரம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திரு எம் பாவை முற்றுப் பெற்றது.

## திருக் களர்
## ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக சுவாமிகள் அவர்கள் மீது
## சிதம்பரம்—கோ. சித. மடம்
## ஸ்ரீ சிதம்பர ஞாந தேசிக சுவாமிகள் மாணுக்கர்
## ஸ்ரீ நீல கண்ட சுவாமிக ளவர்கள் இயற்றிய
## திரு எம் பாவை பாட்டும், திருப் பள்ளி எழுச்சி
## பாட்டும் ஆகிய அருட் பா மாலே.

விநாயகர் துதி—வெண்டா.

*முத்தியருள் வீர முனிவரனுஞ் சற்குருமேற்,*
*பத்தியொடு சொற்றிருவெம் பாவைப்பாச்—*
*சித்தியுறச்,*
*சித்தி விநாயகனற் சீரேத்திச் சிந்திப்பாம்,*
*சித்தம் சிதருமற் சேர்த்து.*

## திரு எம் பாவை.

சீர்கொண்ட தேவர்நாட் சேர்வை கறையாகும்
ஏர்கொண்ட மார்கழியில் எல்லோன் எழுமுன்னே
நீர்கொண்டு நல்லடியார் நீராடிக் கோயிலிலே
தார்கொண்டு நற்பூசை சற்குருவிற் காற்றுகிருர்
வார்கொண்ட பூங்குழலாய் வாளா துயிலாதே
நேர்கொண் டெழுவாய் நிமலனும் வீரகுருப்
பேர்கொண்ட பல்புகழைப் பேணித் துதித்துமிகு
நார்கொண்டு பூசித்து நாமுய்வோம் எம்பாவாய். 1

துன்னு பிறவித் துயர்க்கடலாழ் பல்லுயிரை
மன்னுலகில் மான்காட்டி மானேப் பிடிப்பதுபோல்
மின்னுஞ் சுயஞ்சோதி மேவுங் கருணையினல்
பன்னு மனிதவுருப் பற்றியே பேர்வீரன்

நன்னராட் கொண்டருளி ஞாநப் புணைநல்கி
இன்னலறு நன்முத்தி யின்கரையிற் சேர்த்தபிரான்
தன்னைத் தயாபரனைத் தாரணிந்து போற்றிடுவோம்
என்னே யுன் தூக்கம் எழுந்திராய் எம்பாவாய். 2

மித்தையாம் இவ்வுலகை மெய்யாக வேகாணும்
மெத்துமஞ் ஞாநமயல் மெத்தைமீ தேமிகவும்
சித்த மயக்கஞ் செறியத் துயிலாதே
சித்தியுறு நம்வீர சேகரனும் செங்கதிரோன்
உத்தமமெஞ் ஞாந ஒளியுந்தி வந்தமைகாண்
பத்தரஞ் ஞாநவிருள் பாற்றுமவன் பொற்கமலம்
ஒத்த அடிபரவி உய்ய விரைந்தெழுந்து
தெத்து கதவந் திறவேலோர் எம்பாவாய். 3

இன்னலறுஞ் சிஞ்ஞாசின் ஈறுதவ மாம்பாநு
மன்னு மொருபிரம வாரியருள் நீர்தடியத்
துன்னுமது சற்குருவாந் தூயமுகி லாயெழுந்து
மின்னிக் கருணைமழை மீறிப் பொழிவதுகாண்
அன்னவருள் வெள்ளத் தழுந்தப் படிந்தாடி
உன்னரிய ஞாந உயர்வீர சேகரன்றன்
பன்னற் கரியபுகழ் பாடிக் கசிந்துருகி
இன்னல் பிறப்பறுக்க இங்கெழுவாய் எம்பாவாய். 4

முந்தியஞ் ஞாந முதிர்கட் குடித்தமையால்
உந்து வெறிபிடிக்க உற்றுசைத் தேள்கடிக்க
வந்தகங் காரப்பேய் வன்பாய்ப் பிடித்தாட்ட
இந்திரியத் தீப்பொறிகள் ஈண்டிச் சுடவெங்கும்

நொந்து பதறி நொடியுந் தரியாமல்
குந்தி எழுந்தாடுங் கோர மனக்குரங்கை
நந்தவொழித் தந்நோய்கள் நல்லின்பத் தாரவைத்த
எந்தை குருபரன்சீர் என்னென்பேம் எம்பாவாய். 5

வெய்யா வரண விஷமுடைய அஞ்ஞானப்
பையரவு நம்மையெலாம் பண்டுநனி தீண்டியதால்
நையும் எமக்கு நலஞானம் ஆமருந்தைத்
துய்யமனம் சாதனங்கள் துன்னவநு பானமதாய்
உய்ய அருத்துவித்த உண்மை மருத்துவனும்
ஐயன் குருவீர அண்ணல் திருவடிச்சீர்
பொய்யாத பத்தியொடு போற்றி அருள்பெறவே
பைய எழுவாய் பரிந்தேலோர் எம்பாவாய். 6

பத்திப் பசும்பாலிற் பண்ணுபணிக் கற்கண்டும்
சித்தசுத்திச் சர்க்கரையும் சேர்சா தநநான்காம்
புத்த நறவுடனே பொற்சிரவ ணம்மநநம்
மெத்துநிதித் யாசநமாம் மேவுமிம் முக்கனிசேர்த்
துத்தமமா ஞானமெனும் ஒப்பிலமிர் தூட்டியெமக்
கத்தமியாப் பேரின்பம் ஆரஅருள் செய்தபிரான்
வித்தகனும் வீரகுரு வீறுபுகழ் பாடியுயச்
சித்தமுட னேயெழுவாய் தேர்ந்தேலோர் எம்பாவாய். 7

பொங்கும் ஒலியாதி பொல்லாப்பாம் பொவ்வொன்றும்
வெங்கலைமான் யானையொடு விட்டில்மீன் வண்டிவற்றை
மங்க வருத்திமுறை மண்டி அழித்தனவே
சங்கமுறச் சார்ந்திவைகள் தாக்க வெதும்புமெமை

சிங்கலறக் காப்பாற்றிச் சேர அவைதொலைத்துக்
தங்குபேர் இன்பளித்த சால்புமிகு வீரகுரு
துங்கக் கருணைநலம் சொல்வதெனே அன்னவன்சீர்
பங்கமறப் பாடிப் பணிவேம்வா எம்பாவாய், 8

எண்ணற் கரியானை எல்லாங் கடந்தானை
மண்ணவரும் விண்ணவரும் மாலுமய னும்மறையும்
கண்ணியெங்குந் தேடியே காணா தலுத்தமைகாண்
கண்ணார் அமிர்தாய்க் கருணைக் குருபரனாய்
நண்ணிநேர் வந்தருளி நம்மையாட் கொண்டபிரான்
தண்ணளியை என்னென்பேம் சார்பாக் கியமென்னே
எண்ணியவ் வீரன்சீர் ஏத்திப்பேர் இன்புறுவோம்
கண்ணே ! துயிலாதே கண்விழிப்பாய் எம்பாவாய். 9

எல்லையிலா ஈசுரனை ஈறில் கருணையனை
எல்லையுறக் குருவாய் ஏற்றவுருக் கொண்டானை
அல்லல் அறுத்தருளும் ஆர்வீர சேகரனைச்
செல்லாரும் சோலைத் திருக்களர்வாழ் தேசிகனை
எல்லோரும் நாடி இனிதவன்சீர் பாடிடுவோம்
எல்லையறக் கொண்டல் எழுந்து மழைபொழியும்
சொல்லு வளமனைத்துஞ் சூழும் நலனெய்தும்
நல்லாய்! இதுசெய்ய நாடியெழு எம்பாவாய். 10

பத்திப் பெரும்பயனைப் பத்தருக்குக் காட்டவெணி
வித்தகன்நம் வீரகுரு வீய்ந்தபல ஆலயங்கள்
புத்தப் புதிதாக்கிப் போற்றுகும்ப நீராட்டிச்
சத்திருக்க ளர்ப்பாரி சாதேசர் தேர்விழவில்

கத்தனட ராசன்முன் கற்பூர தீபங்கண்
டத்தருணம் அத்தன் அரகரமா தேவஎனும்
சுத்தநா மஞ்சொல்லிச் சோதி தனிற்கலந்த
சித்திரத்தை என்னென்று செப்புவேம் எம்பாவாய், 11

வேத விழுப்பொருளை வேண்டுமதி காரிகளுக்
கேதமறச் சொல்லி எளிதில் விளக்கிமிகு
போதமுறச் செய்துபந்தம் போக்கிப்பேர் இன்பளிக்கக்
கோதில் பரன்குருவாய்க் கொண்ட கருணையினல்
போதமர்தேன் ஆறுபாய் பொற்கோயி லூரின்கண்
சாதநமார் பக்குவரைத் தற்சார வைத்துணர்த்திப்
பாதகமில் ஞாநியராய்ப் பல்லோர்க்குச் சொல்லவுய்த்த
நாதன்வீ ரன்பெருமை நாம்புகழ்வோம் எம்பாவாய். 12

துன்னு மறதித் துயர்யானை பின்துரத்தப்
பன்னு சமுசாரப் பாழ்ங்கிணற்றிற் பாயக்கீழ்
மன்னு மரணதுன்ப மாசுணத்தைக் கண்டுபற்றும்
இன்னுயுள் வல்லிகடி எல்லியெலி கண்டகல்வாய்ச்
சின்ன வுலகின்பத் தேன்றுளிசே ரச்சுவைக்க
அன்னவர் பத்தையறிந் தார்ஞாந ஏணியளித்
தின்னலிலா முத்தியின்பத் தேற்றியருள் வீரேசன்
என்னருமா சான்கருணைத் தேதிணையோ தெம்பாவாய்.13

சேதநத்தை சேதநமாச் செப்பல்மா பாபமென
ஓதுசட விக்கிரகத் தோர்ஞானே சன்பாவம்
தீதிலதாக் கொண்டுமேற் செல்லா தவர்க்கிரங்கி
ஏதமிலாச் சீவசிவ சேதனங்கள் ஏகமென

வாதைதரு பேதமறு மாவாக்கி யப்பொருளின்
போதம் அளித்ததனுல் பொங்கின்ப வாரியருள்
நாதன் அருள்வள்ளல் ஞாநகுரு வீரேசன்
பாத மலர்ப்புகழைப் பாடேலோர் எம்பாவாய். 14

சுத்த சிவமே சுடர்ஞாந சூரியனே
மெத்தென் மனமதியே மேவு தயைமுகிலே
சித்தளிக்குங் கற்பகமே சிந்தைகொள்சிந் தாமணியே
புத்தியுளி ரத்திநமே பொற்குணநற் பூதரமே
சித்தார் தவராஜ சிம்ம யதீந்திரனே
நித்தபிர மச்சரிய நேரொழுக்க சானவியே
உத்தமநம் வீரேச உன் பெருமை பாடியுய
அத்தா! இரங்கியருள் ஆற்றேலோர் எம்பாவாய். 15

உன்னரிய வீரகுரு உற்றதிரு மேனியுரு
மன்னும் எழில்முகிலே வாழிஅவன் ஆலயத்திற்
கின்னடியர் கூட்டம் எழுதல்போல் வானெழுந்து
மின்னுமவன் கோயில் மிளிருவிளக் கென்னமின்னித்
துன்னவவண் ஊதுஞ் சுரிசங்கு போல்முழங்கிப்
பின்னுமங் குள்ள பெரும்பேரி போலிடித்துத்
தன்னிகரில் வீரேசன் தந்தருளா நந்தமழை
என்னப் பொழிக மழையேலோர் எம்பாவாய். 16

சொற்றபல நல்வளங்கள் சூழ்கோயில் ஊரிலுறை
கொற்றவாள் ஈசர் குலவுதிரு நெல்லைமுதல்
மற்ற இறையவர்க்கும் மாண்கோயில் கண்டபிரான்
குற்றமிலா நல்லடியார் கூடும் மடம்புதுக்கி

உற்றசிக்கல் ஆண்டவற்கும் ஒண்கோவில் ஆக்குவித்
நற்றவர்கள் போற்றும் நவையில் விராகவெற்பாய் [தான்
வெற்றியமர் ஞாநகுரு வீரன் புகழ்பாடப்
பொற்ரு மரைநீரிற் புக்கினிதா டெம்பாவாய், 17

தில்லைநட ராசனுக்குத் தேடருமி ரத்திநத்தால்
மல்லலுறச் செய்தோடு மாண்செவியிற் பூணவைத்துச்
சொல்லுபல கட்டளைகள் சூழவாங் கேயமைத்துச்
செல்லாரும் சோலைவளஞ் சேர்கோயில் ஊரிலுறு
நல்லடியார் பல்லோர்க்கு நாடோறும் வேதாந்தம்
சொல்லி உயர்ஞாநம் தோன்றப் பயிற்றுதற்கோர்
நல்ல பிரமசபை நாட்டியநம் வீரேசன்
எல்லார் புகழ்பாடி ஏத்தேலோர் எம்பாவாய். 18

எங்கும் சிவமொழிய இல்லையவன் தன்னுணை
இங்குநீ பார்ப்பவெலாம் இன்னிறைவன் தன்னுருவே
உங்குத் துயின்மயக்கில் உண்பித்த பிள்ளையைப்பின்
சங்கையற உண்டனையோ சாற்றுகென இல்லையென்பான்
பங்கவித்தை யின்மயலாற் பார்த்துமிலை என்பதென்னென்
றங்கெமக்கு ஞாநவிழி யார்த்துணர வேதெளித்த
துங்கக் குருபரன்றன் சொன்மனங்கட் கெட்டாச்சீர்
இங்கெடுத்து நாமுரைத்தல் எவ்வாருே எம்பாவாய். 19

என்னையாட் கொண்ட இறைவன் பதம் போற்றி
முன்னை வினைமுழுதும் மோசித்த தாள்போற்றி
கொன்னே திரிமநத்தைக் கொன்ற கழல்போற்றி
பொன்னரிய பாமாலை பூணும் அடிபோற்றி

மின்னிவிரி நற்புகழார் வீரன் சரண்போற்றி
நன்னெறியில் என்னையுய்த்த நாதனரும் கால்போற்றி
தன்னிகரில் ஞான தயாகுருபா தம்போற்றி
இன்னலொழி மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய். 20

திரு எம்பாவை முற்றிற்று.

# திருப் பள்ளி எழுச்சி.

காப்பு.

சீராரும் நல்வீர சேகரனும் மெய்ஞ்ஞான
ஏராரும் தேசிகன்மேல் இன்புலவர்——நேருமெழிற்
பள்ளியெ ழுச்சிப்பாப் பாடக் கணபதியை
உள்ளுவாம் உள்ளத் துவந்து.

போற்றியெங் கும்நிறை போதநற் பொருளே
புநிதநல் அடியவர் பொன்மநப் பொலிவே,
வேற்றியல் பின்றிய வேதாந்த வெளியே
வீங்கிருள் நீங்கிட விடிந்தது பொழுதே,
தேற்றுகா விரிவளத் திருக்களர்த் தேவே
திவ்விய சீர்வீர சேகரச் செல்வா,
ஏற்றமார் நின்புகழ் ஏத்திட வந்தோம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

திப்பிய வீரநின் திருச்சமு கத்தில்
சீரிய தொண்டினர் திரண்டுநின் றேத்த,

ஒப்பரு நின்பழ அடியவர் உளத்தே
உத்தம ஞாநசூ ரியனுதித் தனனே,
செப்புவி ராகாதி தேமலர் பூத்த
செய்வளம் மல்குநல் திருக்களர்த் தேவே,
இப்பிறப் பறுத்தெமக் கீறிலின் பருள்தற்
கெம்மிறை யேபள்ளி எழுந்தரு ளாயே. 2

உத்தம சாமமென் றோதுமா மறையில்
ஓதுதத் துவமசி உண்மைநற் பொருளே,
நத்துற வீரநீ நவின்றருண் முறையே
நாடிநின் றடியவர் நவிலுவர் ஒருபால்,
ஒத்துற உள்ளதை உள்ளுவர் ஒருபால்
உயர்மநம் ஓய்ந்ததில் உறங்குவர் ஒருபால்,
இத்திறன் அடியருன் அருள்பெற உற்றார்
எங்குரு வேபள்ளி எழுந்தரு ளாயே. 3

குற்றவஞ் ஞாநப் பகைபிடித் தென்னைக்
குறுகுடற் சிறையடைத் தைம்புலத் துட்டர்,
எற்றநா டொறுமிடர் இயற்றுத லாலே
எய்த்தறி வோயவங் கேகிமீட் டற்கே,
உற்றஞா நத்தினால் உயர்கதி ஈந்த
உயர்குரு வேயொளிர் ஓங்கருட் கடலே,
வெற்றிநல் வீரநின் விறலினைப் பாட
விரிசுட ரேபள்ளி எழுந்தரு ளாயே. 4

எங்கும் நிறைந்திறை இருத்தலி னானே
இங்குமுன் உளத்தமர்ந் திருந்திடு மவனைச்,

சங்கை அறவவண் தரிசித்தல் இன்றித்
தங்குவன் தளிதனின் மாத்திரம் என்றே,
அங்கலேங் தேதிரிங் தமைவறல் நன்ரு
அருமநச் சாட்சியாய் அமர்ந்திடு தேவரும்,
பங்கமில் ஆன்மனைப் பணியெனும் வீர
பரகுரு வேபள்ளி எழுந்த ரு ளாயே. 5

வெள்ளிய கடிதமேல் எழுதிடம் விட்டு
மேவுமப் பக்கமெ லாமையைப் பூசின்,
வெள்ளை எழுத்துகள் வேருய் விளங்கும்
வேறல அவைகளவ் வெண்கடி தம்மே,
கள்ளமா மாயைமை யாற்பிர மத்தில்
காணுமா உலகெலாம் பிரமநல் வடிவாய்த்,
தெள்ளத் தெரித்தநின் சீர்த்திறன் பாடச்
செயவீர னேபள்ளி எழுந்தரு ளாயே. 6

இறைவனைக் காணுதற் கலேந்துதி ரிங்தேற்
கிருப்புவி ளக்கமின் பவன்குறி என்றே,
அறைந்திடும் அருமறை அறிககு டத்தில்
அமர்ந்திடும் இருப்புவி ளக்கமின் பென்றே,
அறைவகண் கூடுனக் கல்லவோ அவைகள்
அச்சடக் குடத்தினுக் கிலேயிறை உருவென்,
றிறையுருக் காட்டிய நின்திறன் பாட
எழில்வீர னேபள்ளி எழுந்தரு ளாயே. 7

கருமுகில் படியவான் முகடுற வளர்ந்த
கவினிய சோலைசூழ் கோயிலூர் அதனில்,

பெருமைமிக் குள்ளமின் சந்நிதி அடைந்த
பெட்பமர் அளவிலா அடியர்கு ழாங்கட்,
குரியவை ராக்கியம் ஆதியா சாரம்
உயர்ந்த்ஞா நம்நலம் யாவையும் பழக்கித்,
திருமிகு முத்தியின் பருள்நினைப் புகழத்
தெருள்வீர னேபள்ளி எழுந்தரு ளாயே. 8

அருளமர் வீரசே கரநினை அடியார்
அன்பொடு வலம்வர ஆன்றன கால்கள்,
ஓருங்குகூப் பவேவளம் ஓங்கின கைகள்
உன்பெயர் சொலச்சுசி உற்றது வாயே,
தெருளுருக் காண்டலில் தெளிந்தன கண்கள்
திருவடி தீண்டலால் சிறந்தது சிரமே,
மருவுனை உனமருள் அற்றது மனமே
வரகுரு வேபள்ளி எழுந்தரு ளாயே. 9

துளியுமன் பின்றிய துட்டனும் என்னைத்
தூரவி டாமலே தொடர்ந்தருள் கொண்டு,
நளினமா வாக்கியப் பொருள்நனி தெரித்து
நவையுறஞ் ஞாநமொ ழித்துமெய்ஞ் ஞாநத்,
தெளிவொடு முத்தியின் பருள்குரு வீரா
சிந்தனை செய்துநின் சீர்சொலல் அல்லால்,
எளியனேன் செய்பதில் உதவியொன் றறியேன்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளி ளாயே. 10

திருப் பள்ளி எழுச்சி முற்றிற்று.

உ
சிவமயம்.

## சிதம்பரம், மௌந சுவாமிகள் மடம், ஸ்ரீ சபா பதிச் சுவாமிகள் இயற்றிய திரு எம் பாவை – திருப் பள்ளி எழுச்சி என்னும்

# அருட் பா மாலை.

விநாயகர் காப்பு—வெண்பா.

சித்தர் அருள்வீர சேகரனார் வன்னிவனத்
தத்தர் திருக்களர்நல் ஆண்டவர்மேல்—பத்திவளர்
பாவைப்பா முற்றஅருள் பாலிக்கக் கற்பகமாத்
தேவைப்பா தம்பணிவாம் தேர்ந்து.

---

சீராரும் வாலறிவன் சேவடிபோற் றார்பலவாம்
ஏரார்நூல் கற்றதனும் என்பயனல் என்றதனால்
ஆராய்ந் திறைவன் அருள்கை வரப்பெற்றும்
காரார் மிடற்றிறைவன் காமர் திருக்கோவில்
நாராரப் போற்று நலமிகுவீ ரேசன்சீர்
வாராரும் கொங்கை மடவீரிம் மார்கழியில்
நீராரும் பொன்னித் துறையதனில் நீர்படிந்து
பேரார்ப் போற்றிப் பிறங்கேலோர் எம்பாவாய். 1

கொண்டல்காள்! நிவிர் குறைதீரப் பொழிகிலிரேல்
தெண்டிரையுந் தன்னீர்மை தேயுமெனச் செப்புதலால்
வண்டார் பொழிற்களரின் மன்னுகுரு வீரேசன்
திண்டோளின் மேவு திருநீறே போல்விளங்கி

உண்டுவரி யன்னோன் ஒழிக்கும் உளத்திருள்போல்
விண்டலத்தின் கண்மேவி மின்னி மிகக்குடித்துப்
பண்டடியர் கட்கருணைப் பாலித்தல் போற்பொழிந்து
தண்டலையின் வெப்பந் தணித்திடுக எம்பாவாய். 2

மைம்மலியும் பூங்குழலாய்! வன்னி வனத்திருந்து
தம்மை யடைந்தார்முத் தாபம் தவிர்த்தருளி
மும்மை நலமருளு முத்தர் பெருமானை
செம்மை உளமாகுந் திண்தோட்டி யாற்புலனும்
வெம்மை செயும்வேழம் ஐந்தினையும் வென்றானை
அம்மை வரனென்னும் அந்நிலத்தின் வித்தாய
செம்மல் குருவீர சேகரனைப் போற்றிசைத்தே
மம்மர் ஒழித்துய்வான் வண்புனலா டெம்பாவாய். 3

தீதில் அறத்தான் திகழ வருமதுவே
ஏதில் புகழுடனே இன்பம் பிறஎல்லாம்
ஓதும் புறமென் றுணர்த்தும் உரையறிந்தும்
நாதன் திருவாரூர் நாவரசர்ப் போற்றுறந்து
பூதலத்து நீடும் புகழ்இன்பம் பெற்றானை
ஏதம் அறுப்பானை இணையில் திருக்களரில்
வேதம் விரித்தாற்கு மெய்ப்பணிகள் செய்தானை
மாதேநீ வாழ்த்துதற்கு வந்தருள்க எம்பாவாய். 4

தேசு மிகுவீர சேகரனை ஆட்சிதனில்
வீசு புகழ்ச்சனகன் என்ன மிளிர்பவனை
நேசத் துறவறத்தில் நிற்பார்க்கும் ஏனோர்க்கும்
மாசில் உணவுபொருள் மற்றவைநீந் தவ்வவரை

ஆசில் தமதறங்கள் ஆற்றச்செய் தில்வாழ்வான்
மூசும் இயல்புடைய மூவர் துணையென்னப்
பேசும் உரைகடந்த பெற்றியனை வன்னிவனத்
தீசனைநன் கேத்த எழுந்திடுநீ எம்பாவாய். 5

வையந் தனில்தெய்வ மாங்கொழுந னைத்தொழுதல்
செய்தே எழும்நியமத் தெய்வநிறை யுடைய
தையல் திருநெல்லைத் தாயின் திருவருளால்
வையம் செழிப்புறவே மாமழையை மன்னுவித்துத்
தெய்வந் தொழாளென் திருவள் ளுவர்மொழியைப்
பொய்மை யுறச்செய்த பூமானை எம்முடைய
கைவந்த ஞானக் கடலை மலையனைய
மையில் கருணையனை வாழ்த்துகநீ எம்பாவாய். 6

பொன்னனையாய்! இன்னம் பொழுது புலர்ந்திலதோ
மின்னனைய மாதர் மிகவிரைந்து வந்தனரால்
தன்னை யடையுந் தகுதி யினர்க்கெல்லாம்
தன்னை யறியத் தகுவவெலா முஞ்சாற்றி
மன்னும் அறிவறிந்த மக்கட்பே றத்தனுடன்
அன்னை தனக்கும் அமையச்செய் விப்பவனை
துன்னும் பிறவித் துயர்தீர் திருக்களரின்
மன்னைத் தொழுதேத்த வந்தருள்க எம்பாவாய். 7

மாசகன்ற நங்காய் மலர்ப்பூம் பொழிற்களரில்
தேசன் விழாவயர்ந்து தேரில் வரும்பொழுது
வாசங் கமழ்கொன்றை மாதேவா என்றுரைத்து
நேசமுடன் கைகூப்பி நின்றவர்தாள் ஒன்றியவன்

மாசகலும் அன்பின் வழிய து யிர்நிலையென்
வாச கத்தினுக்கே மருவு மிலக்கியமாம்
வீசு புகழ்வீர சேகரன்றன் மெய்ப்புகழை
பேசிப் பணியப் பெயர்ந்தெழுக ஏம்பாவாய், 8

நண்ணினர்க் கேற்றதிரு நாயகனை நல்விருந்து
மண்ணிற் புறத்ததா மாமருந்தும் வேண்டாத
புண்ணியனைப் போற்றுவோம் போதருவேன் என்றிசைத்
ஒண்ணகையாய்! நீதான் உறங்கல் தகுஞ்செயலோ [தாய்
விண்ணும் வெளுத்து விடியல் புகுந்ததுகாண்
பண்ணமையப் பைங்குயில்கள் பாடிப் பறந்தனவால்
தெண்ணீர்க் களர்வீர சேகரனைப் போற்றுதற்குத்
துண்ணென் றெழுந்துபுனல் தோய்ந்திடுவாய் எம்பாவாய்.

நத்தெறியும் பொன்னி நதிக்கே புகுந்தருளிக்
கொத்தலர்பூங் கோதைச் சுரும்பு குளிர்ந்தூத
அத்த வளையோ டலம்பு சிலம்பொலிப்ப
முத்த வடமும் முகவிளக்கா மென்குழையும்
மெத்த ஒளிவீச வீரேசன் தாள்பரவித்
தொத்தூர் குழன்மடவாய்! தோய்ந்து புனலாடி
அத்தன் முகத்தான் அமர்ந்தினிது நோக்கியகத்
தொத்தினிய சொல்வோன்சீர் ஓதுகநீ எம்பாவாய். 10

மின்னையுறழ் நுசுப்பாய் விரைந்து விழித்தெழுவென்
றுன்னை விளித்தோம் உறக்கம் விடுத்திலைநீ
மின்வீசும் விண்மீன்கள் மெல்ல மறைந்தனவால்
பொன்னொத்த செங்கதிரின் பொங்கொளியாய் விண்ண
மன்னும் விடியலது வந்துற்ற தீதறிந்தும் [கத்து

கொன்னேநீ பூவணையிற் கொஞ்சித் துயில்கின்றாய்
ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலுஞ்செய்
நன்னர்த் தவத்தனைநீ நன்கேத்து கெம்பாவாய். 11

தென்னா தெனாவென்று வண்டிரைக்குந் தென்களர்வாழ்
என்னாதா என்னாதா என்றே புலம்பிக்கொண்
டின்னும் துயில்விட் டேழாதே யிருக்கின்றாய்
அன்னாய்! அழகோ அருள்வீர சேகரனும்
மன்னை மனத்தது மாசாக மாண்டார்போற்
பன்னும் புனலகத்து நீராடும் பான்மையரைத்
துன்னா தொளிர்ந்தே துறவியர்கட் கோரரசாய்ப்
பன்னப் பெறுவானைப் பாடேலோர் எம்பாவாய். 12

வாரணங்கே! இன்னம் மறந்தே உறங்குதியோ
தீரத் துறந்தே தலைப்பட்டா ராய்த்திகழும்
வீரகுரு சேகரன்றாள் மேவி விடியுமுனம்
ஈரமனை மனத்தால் ஏத்திடுவேன் என்றிசைத்தாய்
கூரும் இசைவண்டு கூறுமொலி கேட்டிலையோ
சேரும் இளம்குயில்கள் தேமாவிற் கூவினவால்
சாரும் வினையகலத் தண்டமிழில் நாமவனைச்
சேரத் தொழுதிடுவான் தீம்புனலா டெம்பாவாய், 13

உற்றகலை எண்ணிரண்டும் ஒன்றும் மதிமுகத்தாய்
சொற்ற மறைமுடிவாம் தூய பெரும்பொருளை
பற்றுறுநல் அங்கைப் பழமாய்த் துலக்கிடுவோன்
பற்றற்றான் பற்றதனைப் பற்றிப் பிறபற்றை
பற்றா தொழிந்திடுநல் பண்பாளன் அற்றவர்கட்

கற்ற சிவனுறையும் ஆலவாய் அன்னையெனும்
கற்றைக் குழலுமையாள் சூமர்மீ நாட்சிதனை
உற்றே பணிபவன்சீர் ஓதுகநீ எம்பாவாய். 14

சிற்றிடையாய்! எங்கள் திருக்களரான் வன்னிவனத்
துற்றே அடியவர்தம் ஊறு தவிர்த்தருளும்
பெற்றி உடையான் பிழையனைத்தும் பேணுதோன்
கற்றீண்டு மெய்ப்பொருளும் காணச்செய் தன்போடு
மற்றீண்டு வாரா வழியருளும் வள்ளன்மைச்
சொற்றிறம்சேர் தூயோன் துணையடியை நாம்பரவி
வெற்றிதரும் ஞானத்தின் வீறதனால் அஞ்ஞானக்
கற்றைத்துணித்தொழிக்கக்கைதொழுவாய்எம்பாவாய். 15

கார்தவழு மாடக் களரில் விளங்கிடுநல்
ஏர்திகழு மாமணியை எம்வீர சேகரனை
சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி மற்றதனால்
சார்தருநோய் சாராதான் தன்னைத் தரணிதனில்
நார்மலியப் போற்ற நறுநுதலார் வந்துற்றார்
கூர்வேல் விழியாய்! குளிருக் குடைந்துறங்கேல்
சீர்மலியும் பண்பன் திசையனைத்தும் செல்புகழான்
தீர்வில் அருளாளன் சேவடிபோற் றெம்பாவாய், 16

பொற்றொடியே! நம்மைப் புதுவயலாம் ஊரில்வரு
சிற்பரனம் வீரகுரு சேகரன்றன் தாளடைந்தார்க்
குற்ற வுளநோய் ஒழிக்கக் கருணைசெய்வோன்
சொற்கோ எனநற் றுறவிற் கரசாவோன்
கற்ப கசடறக் கற்றுப்பின் கற்றவண்ம்

நிற்போன் அருள்புரியும் நெல்லை உமையாட்கும்
கொற்றவாள் ஈசர்க்கும் குலவு குடமுழுக்கைப்
பொற்புறச்செய் புண்ணியன்றன் பூங்கழல்போற்
றெம்பாவாய். 17

மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமான்தன்
செஞ்ஞாயி றொத்த திருமேனி யுங்கழலும்
எஞ்ஞான்றும் உள்ளத் திருத்து மியல்புடையோன்
அஞ்ஞான வல்லிருட்கு அஞ்சித் தமையடைந்த
சிஞ்ஞாசு கட்குச் செவியமுதீந் தில்லாத
அஞ்ஞான்று நல்லமுதும் ஆர்வமுடன் ஈந்திடுவோன்
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரான்
பொய்ஞ்ஞானம் போக்குமவன் பூங்கழல்போற்
எம்பாவாய். 18

நன்னுதலாய்! இன்னும் நலமே யுறங்குதியோ
அன்ன மொடுகேழல் அறியா தயர்வித்த
மின்னும் சடைப்பெருமான் மேவு சமிவனத்தில்
பொன்னம் பலக்குரவன் புந்தி மகிழ்தரவே
முன்னம் திருமடத்து ஐந்தாம் முறைத்தலைமை
மன்னி யிதனுல் இதைமுடிக்கு மற்றிவனே
என்னுமுளத் திற்கியைய இங்கமைந்த வீரகுருப்
பொன்னங் கழல்பரவப் போதுகநீ எம்பவாய். 19

போற்றி மறைமுடிவைப் போதிக்கும் பாதமலர்
போற்றி சரியை பொலிவிக்கும் பொன்மலர்கள்
போற்றி கிரியை புகுவிக்கும் பொற்பாதம்

போற்றியோ கத்திற் புகுந்துறங்கு தாள்மலர்கள்
போற்றி யருள்ஞான மாகியொளிர் பூங்கழல்கள்
போற்றி யொருசொல் புகலும் பதமலர்கள்
போற்றி அதைவெலுஞ்சொல் இன்மை யறிகழல்கள்
போற்றியா மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய். 20

## திருப் பள்ளி எழுச்சி.

அந்தமும் ஆதியும் அகல்பரம் பொருளே
அங்கையின் நெல்லியின் அறிவுறச் செய்தே,
சிந்தையில் திகழ்தரு திமிரம தகற்றித்
தேசுரு வாக்குமோர் சிறந்தசிற் பரனே,
பந்தம தறுமுளத் தடியவர் பலரும்
பள்ளிநல் தாமங்கள் கொண்டுறை கின்றார்,
மந்திர மொடுசெயும் பூசனை கொள்வான்
மன்னவ னேபள்ளி எழுந்தரு ளாயே, 1

இந்திரன் திசையினில் எழுந்தனன் இரவி
இருளகன் றுதயநல் ஒளிபரந் தெங்கும்,
தொந்தம தறுமுளந் தோன்றிடு பரம்போல்
தொல்லுல கப்பொருள் தோன்றிட உற்ற,
செந்தமிழ் மறையொடு மறையொலி யோவாத்
திருக்களர் உறைதரு தேசிக மணியே,
எந்தமை யாள்குரு முனியென இலகும்
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே 2

கின்னரர் யாழொலி குழலொலி ஒருபால்
கிளர்ந்திடும் இருமறை முழக்கமும் ஒருபால்,
மன்னிய மணிகளின் இன்னிசை ஒருபால்
மத்தள துந்துபி பேரிகை ஒருபால்,
துன்னிய நாதசு ரத்தொடு தோன்றும்
துவக்குறு தவிலறை ஓசையும் ஒருபால்,
செந்நெலின் வயல்புடை சூழ்திருக் களரின்
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 3

சுவையுறு தோத்திரம் சொல்பவர் ஒருபால்
துணர்மலர்க் கொய்துடன் தொகுப்பவர் ஒருபால்,
நவையறு மலர்தொடுத் தணிபவர் ஒருபால்
நாறிடு புகையிட நண்ணுவர் ஒருபால்,
கவையுறு மாவினில் பூங்குயில் கூவும்
களர்நகர் வளமுற முளைத்தசெங் கரும்பே,
இவைபல பணிபுரிந் தீண்டினர் அடியார்
இன்னமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 4

பவமெனும் ஆழ்கடற் பட்டிடும் உயிரை
பயப்படல் காப்பமென் றருளொடு பார்த்தே,
தவமெனும் மரக்கலந் தனையுவந் துதவி
சமிவன மெனுங்கரை சார்தரச் செய்தே,
உவமையில் சிட்சையாம் உருளையிற் சுழற்றி
உவர்ப்புனல் எனுங்காம முதல்வெளிப் படுத்திச்,
சிவமெனும் உறவொடு செலச்செயும் ஞான
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 5

இப்பியி னிடையெழும் இரசதம் போல
இவ்வுல குயிர்முதல் எவைகளும் மயலால்,
தப்பறு சச்சிதா னந்தமாம் சிவத்தில்
சாருமம் மயலொழி தரிலொரு பொருளாய்,
இப்புவி தனிலறி பவர்க்கெளி தாக
இலகிடும் எனவருள் செயுங்குரு பரனே,
செப்புறு கமலங்கள் மலர்வயல் சூழும்
திருக்கள ராய்பள்ளி எழுந்தரு ளாயே. 6

குலனருள் தெய்வதம் கொண்டுறு மேன்மை.
குலவுமெய்ஞ் ஞானசற் குருமணி யேமெய்க்,
கலைபயில் தெளிவொடு கட்டுரை வன்மை
கவினநல் அடியவர்க் கருளுநன் னிதியே,
நிலமலை நிறுவைமென் மலரிவை நிகர்த்து
நிலவுல கந்தனில் நின்றிடு குருவே,
உலகியல் அறிவினொ டுயர்குணம் பலவும்
உற்றவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 7

வாலிதிற் காலமும் மன்னிய இடமும்
மகிழ்வொடு நோக்கியோர் சிறந்துழி மன்னி,
சீலமார் தெய்வதம் செவ்விதின் வாழ்த்திச்
செப்புறு பொருளைநற் சிந்தையுட் கொண்டு,
கோலமாய் விரைவதும் கோபமும் இன்றிக்
கொள்பவன் கொள்வகை அறிந்துளங் கொள்ளச்,
சாலவே ஞானநூல் நாடொறும் உரைக்கும்
சற்குரு வேபள்ளி எழுந்தரு ளாயே. 8

ஓமெனும் மறைமுதல் உறுமொழிப் பொருளை
உளமதில் தெளிவுற வுணர்த்துசற் குருவே,
தேமரு நான்மறை வாக்கியப் பொருளைச்
சிந்தையிற் றெளிவுறச் செப்பருள் அரசே,
காமரு முகில்தவழ் சோலைகள் சூழும்
களரெனும் நகருறை இனியதீங் கனியே,
பாமர நிலையொழித் தருளுருப் பண்ணும்
பண்ணவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 9

மணிமுடி கவித்துநன் னிலவுல கனைத்தும்
மாசற ஆட்சிசெய் வாழ்வையும் விடுத்தே,
துணிபொருள் இதுவென மெய்ப்பொருள் உணரும்
தூயநல் வேட்கையொ டுற்றனர் அடியார்,
அணிமலர் கொண்டுன தடிமலர்ப் போற்றும்
அன்னவர் உளங்கொள அருமறைப் பொருளை,
மணிமலர் வாய்திறந் தருளுதல் செய்வான்
மறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 10

திருப் பள்ளி எழுச்சி முற்றியது.

——:0:——

திருக் களர்

ஸ்ரீ வீரகேர ஞான தேசிக ஸ்வாமிகள் மீது

கோவி லூர் மடம்

ஸ்ரீ மகா தேவ ஞாந தேசிக ஸ்வாமிகளின் மாணுக்கரும்

ஏகாம்பரக் குப்பம் சிவாநந்த சுவாமிகள் மடத்

தலைவரும் ஆகிய,

ஸ்ரீ கோவிந்த சுவாமிக ளவர்களால் இயற்றப் பெற்ற

திரு எம் பாவை— திருப் பள்ளி எழுச்சி என்னும்

# அருட் பா மாலை.

விநாயகர் காப்பு — நேரிசை வெண்பா.

திருவாரும் தெய்வத் திருக்களர்வீ ரேச
குருவாரும் எம்பாவை கூற–உருவாரும்
தந்திக் கணபதியின் சந்ததா நந்தபதம்
புந்தியுற வைத்தேன் புகழ்ந்து.

சீராரும் விண்ணேர்கள் சிறப்பாரும் பூசனைகொள்
பேராரும் மார்கழியில் பேணுதயம் வந்ததுகாண்
நீராரும் வாவி நிறைந்த திருக்களராம்
ஊராரும் வீரேசன் ஓங்குதிருக் கோயிலுறும்
பாராரும் நல்லடியார் பாடுமொலி கேட்டிலையோ

ஏராரும் பண்புடையாய் இன்னும் துயிலுதியோ
நேராரும் போதமருள் நீதியனும் வீரேசன்
தாராரும் பாதமலர் தாள்பணிவோம் எம்பாவாய். 1

காலை உறக்குருகுங் கண்விழித்துக் கூவினகாண்
ஏலவுறு சங்கமெலாம் ஈண்டு முழங்கினகாண்
சால ஒளிப்படலம் சார முயன்றதுகாண்
தூல இருட்படலம் தூரத் தகன்றதுகாண்
சீலமுறும் பாங்குடையாய் சீதப் புனல்மூழ்கிக்
கோலத் திருக்களரார் கோமானும் வீரேசன்
மூலவிருள் ஓடவரும் முத்தியருள் பாதமலர்
ஞாலமுறப் பாடிநிதம் நாம்பணிவோம் எம்பாவாய். 2

வேதம் பரவுமிகு வித்தகனும் வீரேசன்
சீதம் தரும்சோலை சேரும் புதுவயலாம்
நீதம் பெறுமூரில் நேரருளால் தோன்றினேன்
போதம் திகம்திகழும் போற்றுமடி யார்க்கருளிப்
பேதம் துரத்துமிகு பேரார்ந்த கோயிலூர்
ஓதும் குருமரபிங் கோங்கிடவார் பீடத்தான்
நாதன் திருக்களரார் நல்லதிருக் கோயிலுளான்
பாதம் பணிந்துநிதம் பாடேலோர் எம்பாவாய். 3

போற்றும் சமிவநத்துப் பூம்பொழிலார் கோயிலூர்
சாற்றுகரு ணாநிதியாய்ச் சார்ந்தகுரு நாதனும்
தேற்று சிதம்பரமா தேசிகனைச் சேர்ந்துநிதம்
தோற்றும் பரஞானம் தோய்ந்து குருபீடம்
ஏற்று மாடாலயமும் ஏத்துகொற்ற வாளீசர்

ஆற்றும் திருநெல்லை ஆலயமும் போற்றவமைத்
தூற்றம் உறவருளும் ஓங்குகுரு வீரேசன்
மாற்றமறும் பாதமலர் வாழ்த்தேலோர் எம்பாவாய். 4

கோயிலூர் என்னும் குருச்சேத் திரமதனில்.
ஆயகுரு பீடத் தமர்ந்தடியார் உள்ளமுறும்
தூயசமம் ஆதியாய்ச் சொல்குணங்கள் ஆதரித்து
மாயை அகம் ஆதிகுணம் மாயவுப தேசத்தால்
நேயபர மார்த்தலை நேர்வித்தோர் அத்துவித
ஞேயபிர போதமெனும் நீங்கா அரசோடு
தோயுமின்ப வீடுமருள் தொன்மையனும் வீரேசன்
மேயபதம் பாடிமிகு வீடுறுவோம் எம்பாவாய். 5

ஆன தவத்தாற்றல் ஆர்ந்தமுநி தூர்வாசன்
பான மிகுதீர்த்தம் பாரிசா தத்தருவின்
கானம் இயற்றியதில் காணுமா காரணனும்
தான மிகும்பாரி சாதேசன் மாதேவி
ஞானத் தமிர்தவல்லி நாடுதிருக் கோயிலமைத்
தூனமறும் மாதவமார்ந் துற்றவிறை தாண்டவமும்
தீனமறப் பார்க்கும் திருக்களரார் வீரேசன்
வானவரும் ஏத்துபதம் வாழ்த்தேலோர் எம்பாவாய். 6

நாடுதிரு நாவரசர் நல்லதலத் தாண்டகமும்
தேடுமருட் சம்பந்தர் தேவாரப் பண்ணதுவும்
பாடுமிகு மாட்சிமையார் பாரிசா தேச்சுரனார்
கூடுங் திருக்களரார் கோயில் திருத்தீர்த்தம்
நீடுபூங் காமுதலாம் நேர்வனயா வும்புதுக்கி

ஈடகன்ற ஈசனருள் ஈண்டடைந்த வீரேசன்
ஏடவிழ்ந்த பூம்பாத ஏத்தித் திநந்தொழுது
வாடுமுளம் போக்கிநிதம் வாழ்த்தேலோர் எம்பாவாய். 7

வண்டலேக்கும் பூக்கள் வகைவகையாகக் கொண்டதிருத்
தண்டலேகள் சூழ்ந்திலகும் தண்ணூர் திருக்களரில்
பண்டமைந்த பண்பாளன் பாரிசா தேச்சுரன்றன்
தொண்டமைந்த கோயில் தொகையிரதம் ஐந்தியற்றிக்
கொண்டுகும்ப நீராட்டிக் கோலமிகும் உத்சவமும்
கண்டியற்றும் காலோட்டம் காணுமிறை தேரின்முன்
விண்டுமகா தேவளன வீடடைந்த வீரேசன்
மண்டுமிரு பாதமலர் வாழ்த்தேலோர் எம்பாவாய். 8

திங்கள் எனக்குளிரும் தெய்வத் திருநுதலான்
பங்கவினே பாசமடும் பார்வையுறும் நேத்திரத்தான்
சங்கையெலாம் போமாறு சாற்றும் திருவாயான்
துங்கமுறும் சீவபரர் தோய்ந்தென்றும் ஏகமெனும்
தங்குசிந் முத்திரையார் தாழாத் திருக்கரத்தான்
பொங்குமிடர் போக்கவரும் பூசனேயார் பாதமுளான்
இங்குநமை ஆட்கொண்ட இன்புருவாம் வீரேசன்
மங்கலமும் பாடிநிதம் வாழ்த்தேலோர் எம்பாவாய். 9

துன்னுமஞ் ஞானமெனும் தோடவிருள் ஓடவரும்
உன்னுமெய்ஞ் ஞானமெனும் உத்தமமாம் சூரியனும்
பன்னுமுப தேசமழை பற்றறுமெய் யன்பருறும்
இன்னல் அறப்பொழியும் ஏர்ஆர்ந்த மாமுகிலாம்
தன்னே அறியவரும் சந்மார்க்க சாதகர்க்குப்

பின்னம் அறப்போந்த பேரின்ப சாகரமாம்
முன்னும் திருக்களரார் மோநகுரு வீரேசன்
மன்னும் திருப்பாதம் வாழ்த்தேலோர் எம்பாவாய். 10

செம்மை விராகமொடு செய்யும் விவேகமார்ந்
திம்மைமுதல் ஆனவெலாம் இப்பியிலே வெள்ளியெனப்
பொய்ம்மையா ரோபமதால் பூணுபந் தத்துயராம்
வெம்மைதரும் வெள் ளியன்று மேவிப்பி என்னலென
மெய்ம்மையப வாதமதால் வீடெனுமா வின்பெனவே
தம்மையுடன் கேட்டல்உனல் சார்ந்தநுப வத்தார்ந்து
திம்மைவிடல் செய்விதியாம் தேரென்ற வீரேசன்
நம்மையருள் பாதமலர் நாம்பணிவோம் எம்பாவாய். 11

முஞ்சி எனும்புல்லில் மூடுமட்டை நீக்கியதில்
மிஞ்சு நடுவாணி மேவல் எனமறைக்கும்
பஞ்சகோ சங்களையும் பற்றறவே நீக்கியபின்
அஞ்சவுறும் சூநியமும் ஆந்மாவன் றென்றகற்றி
எஞ்சறிவாம் சான்றுநான் என்றறிந்த பின்னரது
கொஞ்சம் எனவிட்டுக் கூடும் அகம்பிரம
கஞ்ச மலர்ப்பாதம் கண்ணுறுவோம் எம்பாவாய். 12

பற்றும் இடத்தில் படுசுகங்கள் ஆனவெலாம்
உற்றமிகு துன்ப உருவாயும் அஞ்ஞாநம்
பெற்றுமா ரோபத்தால் பேரின்பாய்த் தோன்றுமிவை
அற்றழவே செய்வதுவாம் ஆங்காரம் ஆதியறச்
செற்றபவா தித்தவிடம் சேருனதா நந்தபதம்
குற்றமணு காப்பதமாம் கூடும் நனுச்சுழுத்தி

கற்றதனை நித்தியமும் காணென்ற வீரேசன்
கற்றவமார் நற்பாதம் நாம்பணிவோம் எம்பாவாய். 13

தூண்டுமஹா மூலமாம் தொன்மை அகக்கிரந்தி [மோ
வேண்டுமெனக் கொண்டாசை வேண்டாமென் றுலறு
பூண்ட புலன்களையும் போக்கறுத்தும் உள்ளிருந்து
மீண்டுமறு காலமவா வேண்டித் துயராற்றும்
ஆண்டுபல கோடியெலாம் ஆசாபோ கந்துய்த்தும்
மாண்டொழியா தாசைமிக மன்னித் துயராற்றும்
நீண்ட அகங் காரமறின் நீங்கும்என்ற வீரேசன்
ஆண்டபதம் பாடிநிதம் ஆடேலோர் எம்பாவாய். 14

ஆங்காரம் ஆர்கிரந்தி ஆன அவா மூலமதை
நீங்காவுன் ஞானமாம் நிச்சயத்தால் நீக்கிவிடின்
தீங்கான ஆசைஅறும் தெய்வீக முத்தியுறும்
சாங்காலம் சார்தல்அறும் சர்வகா மாப்தியுறும்
பாங்காகும் கேட்டல்உனல் பார்த்துத் தெளிதலினைத்
தேங்காத விக்கிரமாய்ச் சேர்மடமை யந்திரிபு
போங்காலம் ஆம்அளவும் போற்றென்ற வீரேசன்
ஓங்காரம் ஆம்பாதம் உற்றிடுவோம் எம்பாவாய். 15

சித்தமெனும் மத்தகயம் சீவன்நீ ஏவுமிகு
சத்துவசங் மார்க்கமதில் சாரா திராசதமாம்
குத்திரபுன் மார்க்கமதில் கூடிமிக ஓடுதலால்
சத்துருவாம் ஆங்காரம் சார்காமம் ஆதியெலாம்
மொய்த்து மயக்கிடவே மோதுமிகு சோகமெலாம்
நித்தமுற நேர்ந்திடலை நீக்கிடவுன் மெய்யுணர்வாம்

தத்துவஞா நாங்குசத்தைச் சார்என்ற வீரேசன்
வித்தகமாம் பாதமலர் வேண்டிடுவோம் எம்பாவாய். 16

தின்றுறங்கி ஈன்றுபரம் சேராது செத்திடலாம்
குன்றுமிவை ஐந்தொழிலும் கோமிருகம் ஆதியுறும்
புன்றொழிலாம் மானிடனாய்ப் பூண்டபிறப் பிற்குமிகை
ஒன்றுமில்லை ஆதலினால் உன்னை அறிந்துபரம்
ஒன்றி மரணமிலா தோங்குசுக வீடுறலே
துன்று கடமையெனச் சொல்லி அறிவளித்த
வென்றி உறுகுரவன் வீரேசன் சந்நிதியில்
சென்று பணிந்துபதம் சேர்ந்திடுவோம் எம்பாவாய். 17

சுத்தசி தாந்மாவாம் சூரியனெக் காலத்தும்
சாத்தாய் விளங்குவதாய்த் தானுதயம் ஆவதுவும்
அத்தமநம் ஆவதுவும் அற்றதனால் சந்திமுதல்
இத்தரையோர் நாளும் இயற்றும் கருமமெலாம்
மெத்தவுநாம் செய்ய விதிக்க நிலைத்திருந்த
கர்த்தவ்யம் தீர்ந்து கதியார்ந்தெக் காலத்தும்
நித்தியமாய் வாழும் நிலையருளும் வீரேசன்
வத்துவதாம் பாதமலர் வாழ்த்தேலோர் எம்பாவாய். 18

சுருதியுறு சம்பந்தத் தூயவறி வோர்க்கு
மருவலிலா விண்பூநேர் வாய்ப்பிலதாம் துச்சம்
வருயுத்தி சம்பந்தம் மன்னும் அறிவோக்குத்
தரும்இப்பி வெள்ளிஎனச் சாற்றலரும் மித்தை
மரியுலக சம்பந்த மத்தஅறி வோர்க்கு
இரிவறும்ஆ் மாஎனவே என்றும்அருச் சத்தாம்

மருள்மாயைத் தோற்றமெனும் மாண்பருள்வீ ரேச
குருவரன்தன் பாதமலர் கூறேலோர் எம்பாவாய். 19

சகம்புரக்கும் வீரேசன் சார்வடிவம் போற்றி
உகந்துயிர்மெய்ஞ் ஞானமுற உன்னுமுளம் போற்றி
திகழ்ந்துமகிழ் வெய்தவுறும் தெய்வமுகம் போற்றி
பகிர்ந்துவினை பாசமடும் பார்வையுரம் போற்றி
மகிழ்ந்துமா வாக்கருளும் வாய்வரமும் போற்றி
சுகந்தருசின் முத்திரையார் தூயகரம் போற்றி
புகழ்ந்துநிதம் போற்றியெனப் பூம்பதமும் போற்றி
அகம் தெளிந்து மார்கழிநீர் ஆடலோர் எம்பாவாய். 20

திரு எம் பாவை முற்றுப்பெற்றது.

—— : 0 : ——

# திருப் பள்ளி எழுச்சி.

———

விநாயகர் காப்பு — நேரிசை வெண்பா.

*சீரார் கணபதியைச் சிந்தை யுறப்போற்றி*
*ஏரார் திருக்களர்வீ ரேசனுறும்–பேராரும்*
*பள்ளி எழுச்சிதனைப் பாடினேன் அன்புடனே*
*விள்ளும் உலகுறவே வீடு.*

திருமிகு மார்கழித் தினகரன் உதயம்
செறியொளி புகுந்தது சென்றதிங் கிருளே,

குருகுகள் மிகமிகக் கூவின எங்கும்
கூடினர் அடியவர் குலவுசந் நிதியில்,
வரமிகு புதுவயல் வந்தவான் பொருளே
வானுறும் கோயிலூர் மன்னுமா குருவே,
திரமுறு நெறியருள் திருக்களர் வீர
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 1

குரங்கினை ஆட்டுதல் குவலயர் இயல்பாம்
கூடும்என் மனம்எனும் குரங்கினை ஆட்டல்,
வரம்பறும் முறையென மதித்துறும் அதனை
மாற்றிடத் திருவருள் வழங்குமா முதலே,
பரம்பர வேதநம் பகர்ந்தருள் இறையே
பற்றிடும் பவமறப் பார்த்திடும் குருவே,
சிரம்பெறும் அறிவருள் திருக்களர் வீர
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 2

அகம்எனும் பேய்எனை ஆர்ந்ததன் வசம்செய்
தாரையிற் சுழன்றிட ஆட்டுதல் கண்டே,
சுகமிகும் பரஉருத் தோன்றிடக் காட்டிச்
சூழ்அகம் அறும்நெறி சொல்லியாண் டவனே,
சகம்உயிர் இறைஎனும் சருவமும் தானாய்ச்
சார்ந்திடும் பூரண சான்றதாம் பொருளே,
திகழ்பர பதம்அருள் திருக்களர் வீர
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 3

கண்ணினைத் திறந்திடக் காண்பொருள் உளவாம்
கண்டகண் மூடிடக் காரிருள் உளதாம்,

பண்ணவர் பகர்பரம் பார்த்திடல் ஆமோ
பண்புற எனவுளம் பரிந்தவெங் தமக்குப்,
புண்ணிய பரநிலே புகன்றதைப் பார்க்கும்
போதமாம் விழியருள் புநிதமாம் குருவே,
திண்ணிய தெருள்அருள் திருக்களர் வீர
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 4

சத்தென்றும் சநிப்பறச் சார்ந்துள தசத்துச்
சநிப்பற என்றுமே சார்ந்தில தென்ருய்,
செத்ததென் றுலகினர் சேர்ந்தழல் எதற்கோ
சித்தருள் குருவரா செப்பெனில் கனுப்போல்,
புத்தியஞ் ஞாநத்தால் பொருந்துமா ரோபம்
பூண்டழல் அன்றியப் பொருள்களுக் குளவோ,
சித்தம்தேர் எனஅருள் திருக்களர் வீர
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 5

கழுத்தணி மறந்துபின் காணுதல் எனவே
கதிமிகும் உனதுருக் கண்டிடல் அன்றி,
வழுத்தயல் ஊர்உறு வகையுறல் அன்ரும்
மன்னுமம் முறைஉனே மாசற அறிந்தால்,
அழுத்திய துயர்அறல் அக்கணம் காண்பாய்
அநம்உணப் பசிஅறல் அற்றெனும் குருவே,
செழித்திடும் வரம்அருள் திருக்களர் வீர
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 6

பேதமும் தோன்றிடப் பீதியும் தோன்றும்
பிரிவறும் பரம்உறப் பீதியும் தோன்ரு,

ஓதிய பரம்எனும் உன்னைநீ அறிந்தால்
உள்ளகக் கிரந்தியோ டோங்கையம் வினைபோம்,
தீதுறு மரணமும் தீர்ந்தமிர் தாவாய்
தேர்ந்திடென் றுரைசெயும் தெய்வமா மணியே,
சேதநம் உறஅருள் திருக்களர் வீர
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 7

மெய்ப்பொரு ளாமுனை மேவலில் மறப்புன்
வீவதாம் நினைந்துறல் வேண்டுமுன் வாழ்வாம்,
அப்பொருள் மறத்தலால் ஆர்ந்திடும் மோகம்
ஆமதால் சநித்திடும் அகந்தையாம் அதனால்,
பொய்ப்பொருள் பந்தமாம் புகுமதால் துன்பாம்
புகன்றதால் மிருத்தியு புன்மறப் பெனவே,
செப்பிமெய் அருளிய திருக்களர் வீர
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 8

ஒருகண வாழ்வுநாள் உற்றிடக் கோடி
உறுநிதி கொடுப்பினும் உற்றிடா தெங்கும்,
வருகணம் இருப்பதோ மரிப்பதோ அறியாய்
மானுடப் பிறப்பிது மன்னுதல் எளிதோ,
விரிகணம் பலப்பல வீணுறக் கழித்தல்
விலங்கினத் தியல்பதாம் மேவுனை என்றே,
தெரிகுணம் அருளிய திருக்களர் வீர
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 9

விரிவுறு சகமெலாம் மேவுசத் ததுவாய்
விளங்குசித் துருவமாய் வேண்டுயர் சுகமாய்,

மருவிய பிரமமாய் மன்னுமா முதலே
மாமறை முடிவெலாம் மதித்தவான் பொருளே,
உரம்உறும் கோயிலூர் ஓங்குமா குருவே
உலகெலாம் அடிதொழும் உத்தம இறையே,
திருஉளம் உவந்தருள் திருக்களர் வீர
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 10

திருப் பள்ளி எழுச்சி முற்றுப் பெற்றது.

---

உ

திருக் களர் ஆண்டவர் என வழங்கும்
ஸ்ரீ வீர சேகர ஞான தேசிக ஸ்வாமிகள் மீது
திரு எம் பாவை – திருப் பள்ளி எழுச்சி என்னும்

# அருட் பா மாலை.

சிதம்பரம், கோ. சித. மடம், ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக
ஸ்வாமி களவர்கள் மாணுக்கர், திரு வை யாறு-
அறு பத்து மூவர் மடம், சங்கத்து-பண்டித,
ஸ்ரீ நாராயண சுவாமிகள் அவர்கள்
இயற்றியது.

விநாயகர்—காப்பு வெண்பா.

இன்பருளும் எங்கள் இறைவீர சேகரன்மேல்,
துன்பகலப் பாவைப்பாச் சொல்வதற்கு-அன்பகலா,
உள்ளத் திருக்கும் ஒருகொம்பார் உம்பலெனும்,
வள்ளலையே வாழ்த்திடுவேன் மன்.

வானவர்கள் வைகலுறும் வைகறையாம் மாகழியில்
வானவெளி என்றாழ் வரநினைக்கும் போதனில்
ஊனமழித் தொளிரும் உத்தமர்கள் நீர்முழ்கி
ஞானக் குருபரனை நன்றுதொழு தேத்துகின்றார்
ஏனோ கருங்குழலாய் இன்னம் துயிலுதியால்
ஆனாத் துயிலழுந்தாய் அண்ணல்குரு வீரேசக்
கோனை முனிவரனைக் கோதில் திருக்களரில்
மானத் தொழுதுநிற்போம் வண்புனலா டெம்பாவாய். 1

இந்தவுடல் முன்றும் இருந்தறிவோன் வேறெனவே
வந்தவுணர் விஞ்ஞானம் மாய்ப்பதுபோல் மார்த்தாண்டன்
சிந்த இருளனைத்தும் சேருமுனம் முன்னடைந்து
அந்தணனே ஞானத் தரசே அறவோர்கள்
சிந்தையினில் நிற்கும் செயவீர சேகரனே
நுந்தா தொளிரும் நுவலரிய பேரொளியே
எந்தம் அடிகேள் எனப்புகழ்ந்து வாயாரப்
பந்தணவும் கைமயிலே பாடுகம்வா எம்பாவாய். 2

தென்னாடு வாழ்தரவே சேரும் கழநிகர்
மன்னாக வந்தமுத்து ராமலிங்க மாமுனிவர்
பொன்னார் அடிக்கமலம் போற்றுபவர் பானெருங்கின்
இன்னல் மனத்தைவிட் டேகுதல்போல் பூதவிருள்
பன்னும் அலரிவரப் பாறுமெழில் போதினிலும்
என்னோ பதறாமல் நீதுயில்வாய் இப்பிறவி
போன்னே இனிவருமோ பொள்ளென் றெழுவீரன்
தன்னேர் இலாதகுரு தாள்பணிவோம் எம்பாவாய். 3

அன்பு ததும்பிநிற்ப ஆறு தகங்குழைந்து
என்புருகி வைராக வெற்பே இறையவனே
என்பேர் ஒளியேநல் இன்பே இருப்பென்று [ரெலாம்
மன்பிளக்க வானமதும் வாய்மொழிந்து தொண்ட
துன்பகல வீதிவலம் சூழுகின்றார் கேட்டிலையோ
என்பதுமை போல இளங்கிளியே நீகிடத்தி [கால்
பொன்போல் இருப்பினுமென் புண்ணியனை வாழ்த்தாக்
ஒன்பதுரு வீரனைநாம் ஓதுவம்வா எம்பாவாய். 4

கங்கையினும் மிக்கதிருக் காவேரி நீர்படிந்து
சங்கமங்கள் வீரேசன் தாடொழு தாவரணப்
பங்கமற மெய்ஞ்ஞானப் பாவந நீர்படிதல்
நங்காய் அறிந்திருந்தும் நன்று துயிலுகின்றாய் [தோம்
இங்கடியோம் வெம்பிறவி எத்துணையோ கொண்டலைந்
சங்கையறி வாயோநீ தாழா தெழுந்திடுவாய்
வெங்கலியின் போர்தொலைத்த மேலாம் பரனவனை
மங்களமார் பூப்பெய்தே வாழ்த்துவம்வா எம்பாவாய். 5

நித்தம் எனவுலகை நெஞ்சிறுத்தி இன்னல்பல
துய்த்தொழிந்தோம் ஐயகோ துன்பொழிவாம் இன்படைய
மத்தமதி வேணிமுதல் மற்றெவையும் மாற்றிவிழி
தத்துமணிக் கண்டிகையும் சார்நீறும் கற்றோய்த்து
வைத்தவுடை யும்புனைந்து வன்னிவனத் துற்றானை
முத்தனைவீ ரேசனையே முன்னின் றடியோம்யாம்
ஆத்தாநல் ஆரமுதே ஐயா மறைமுதல்வா
சித்தா எனத்துதிப்போம் தெண்புனலா டெம்பாய். 6

நாடாது செல்வம் நமக்கென்றும் தங்குமெனக்
கோடா அடங்காது கோதாட் டுறுபவர்போல்
ஏடி துயிலுதியோ இவ்வுலகம் மெய்யாமோ
வாடி வதங்குகின்றோம் வாட்டம் அறிந்திலையே
ஆடிமதி நெல்லையம்மன் அம்பிகைக்கு நல்விழவைக்
கூடியடி யார்களுடன் கொண்டாடும் வீரேசன்
தேடரிய செல்வனைநாம் சிந்தித்தே துன்பறவிங்
காடுதியால் நற்பொய்கை ஆய்மயிலே எம்பாவாய். 7

கோயிலூர் நெல்லையம்மன் கொற்றவாள் ஈசரிவர்
கோயில் வியப்பக் குயிற்றியதால் கோயிலூர்
ஆயதென மொழிய ஆக்குந் திறற்பெருமான்
தூய துறவடியார் சூழ்ந்துறையும் நன்மடமும்
தோயக் கயமும் துலங்குமணி மாளிகையும்
நேயமொடங் காற்றியசீர் நின்மலனைத் தொண்டருக்கு
மாயப் பிறவி மயக்கறுக்கு வீரனைநம்
நோயிகப்பப் பாடநீர் ஆடேலோர் என்பாவாய். 8

சிங்ககிரிச் சங்கரனும் தெய்நர சிங்கனைமுன்
இங்கமலக் கோயிலூர்க் கேல எழுந்தருள்வித்
தங்கம் குளிர அகங்குளிரப் போற்றவவன்
மங்களமார் பாவைந்தால் வாழ்த்தவவை பெற்றினிய
சங்கமங்க ளோடணியாத் தங்கியசீர் வீரேச
நங்குருவைப் பண்பா நலியா மலையேறித்
தங்குதலால் சீர்மைமிகத் தங்குமொழி கொண்டுபுகழ்
பொங்குமவ னைப்புகழப் போதுகநீ எம்பாவாய். 9

தென்புலியூர் அம்பலவன் சித்தம் திகழ்தரவே
மன்பொலியும் பூசகர்க்கு மன்னும் பசியவிய
இன்புளியார் கொஸ்த்தும் இருஞ்சுவையார் சம்பாவும்
அன்பளியோ டின்றும் அளிக்கவகை செய்வித்தோன்
பொன்பொழியும் நல்வணிகர் போற்றப் பவறங்கள்
துன்பொழியத் தண்ணளியால் தோற்றுவித்தோன்
[அல்வெல்லும்
முன்பொழியா ஞாந முதல்வன்வீ ரேசனைநாம்
அன்பொழியா தேதொழுநீர் ஆடேலோர் எம்பாவாய். 10

போதாய் கமழ்குழலாய் புண்ணியமார் இப்புனிதன்
ஈதாம் உலகிடையே எம்மைப் புரக்கவேன
ஓதுதுரு வாசன் உருவே றடைந்துவந்த
ஞாதா எனவுரைத்தாய் நாந்தொழுவோம் என்றுரைத்தாய்
மாதே மறந்தெவனோ வாளா துயிலுகின்றாய்
சாதவனை நம்வீர சேகரனைத் தண்ணளிகொள்
மாதவனை வாழ்த்தி மறைப்புளத்தில் போக்கவல
போதம் உறப்படிவாய் பொய்கையினில் எம்பாவாய். 11

வெய்ய கருக்குழிதான் வெம்புதுரு வாசமென்ற
ஐயன் மகிழ்தரவே ஆடலிறை ஆடுகின்ற
வையகத்தின் மேலா மதிக்கும் திருக்களரில்
பையரவை மேலணிந்த பாரிசா தேசுரர்க்கு
துய்ய மதில்புடையே சூழ்நகரம் நன்கமைத்து
வையமைந்தில் வைகாசி மன்னிவரச் செய்தவனை
மையமைந்த வாள்விழியாய் மன்வீர சேகரனைக்
கைதொழுது பாடிக் கவலறுவோம் எம்பாவாய். 12

பெண்ணுருவை ஓவியத்தும் பாராத பேராண்மைத்
திண்மை உறும்வீர சேகரனைத் தில்லைதனில்
தண்ணம் தமிழில் தனிசிறந்த கைவல்யத்
துண்மைப் பொருள்விரித்த உத்தமப்பொன் னம்பலனும்
எண்ணரிய பண்பமைந்த எந்தைக் கினியவனை
நண்ணும் அடியவர்க்கு நற்றாய்நல் தந்தையென
உண்ண உணவோ டுறமுணர்வும் ஊட்டிடவே
மண்ணில்வரு வானை வணங்குவம்வா எம்பாவாய். 13

யாக்கை நிலையாதே என்றும்நிலை யாதுசெல்வம்
பூக்கும் இளமைப் பொலிவழியும் பூங்குயிலே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனைக்
காக்குமெங்கள் காவலனைக் காண்பரிய பேரொளியை
நோக்கறவே நோக்கும் நுணங்குமதி மாதவர்க்குத்
தேக்குபர மாநந்தம் செய்வீர சேகரனை
வாக்குமனங் கட்கரிய மன்னவனை யாந்துதிப்பத்
தூக்கம் ஒருவிநின்று தூய்புனலா டெம்பாவாய். 14

ஊரண நாபியென ஓங்குலகிற் கோர்முதலாய்
நாரண நான்முகனாய் நற்றதவனாய் நிற்குமது
தாரணியோர் செய்தவத்தால் தண்ணடையார் வன்னி
பாரணவும் வீரேசப் பானுவெனத் தோன்றியினல் [வனப்
காரணமாம் அஞ்ஞானக் காரிருளைப் போக்கிவெற்றித்
தாரணியும் தத்துவனைச் சங்கரனை நற்களர்வாழ்
பூரணனைப் புங்கவனைப் போற்றுதற்காம் இப்பொழுதில்
நாரணிந்து நீர்மூழ்காய் நற்குயிலே எம்பாவய். 15

மாலைதனில் தோன்றரவு மானவிரிந் தோங்குலகம்
ஏலவெத ணைக்காணின் ஈங்ககலு மோவதுவே
தால மதிலுருவம் தாங்கிவந்து சாதநங்கள்
நாலுமுறக் கொண்டவர்க்கு நத்துமுடல் மூன்றாகக்
கோலுமைந்து கோசம் குலைக்கமிஞ்சும் நீதானே
தோலாச் சிவமெனவே தோற்றுவித்த மெய்க்குருவைக்
காலனைக்கா லாலுதைத்த கற்பகத்தை வீரேச
வாலறிவ னைத்தொழவே வாவேலோர் எம்பாவாய். 16

பற்றறுத்தார் போலப் பயின்றுன்முத் தோடமெலாம்
இற்று விடுமோ எழில்வினையால் யோகத்தால்
வெற்றிகொளும் ஞானத்தால் வேரறுமென் றேவிளித்துச்
சுற்றியுறை வாரெவர்க்குஞ் சொல்லி அவர்பிறவிக்
கற்றையெலாம் சுட்டெறிக்கும் காவலனை நாவலனை
நெற்றிவிழி மாற்றிவந்த நின்மலனைக் கோயிலூர்
நற்றவனை நம்வீர சேகரனை நாந்தொழுது
பொற்றொடியே இன்பம் பொதுளநிற்போம் எம்பாவாய். 17

போதம் மலரப் பொருள்கண் டுலகறியா
மாதவர்கள் வாண்முகம்போல் வண்பூ விரிபொழுதும்
ஏதும் அறியா திளங்குயில்போல் வாய்முடி
மாதே துயில்கொள்ளல் மானமோ துன்பனைத்தும்
மோதாது விட்டிடுமோ மோகத் துயிலெழுவாய்
ஓதுமடி யார்க்கதுவே நீயென் றுரைப்பவனை
நாதனைவீ ரேசனைச்சீர் நான்மறையா னைப்பணிந்து
தீதறுவோம் மெய்ஞ்ஞானம் சேர்ந்தேலோர் எம்பாவாய். 18

ஆயகலை அத்தனையும் ஆடியலைந் தாசறவே
தோயும் வகைபயின்றும் தோன்றப் பிறர்க்கெல்லாம்
வாய்சிறக்கச் சொல்லினுமென் மானே உனமதனைக்
காயும் கவலையறக் கண்டனமோ கண்டிலமே
காயமெ டுத்தலுத்தோம் கட்டறுத்து வீடடைய
நேயமின்றி நீயுறங்கல் நீதியோ கண்விழிப்பாய்
நாயகராம் தேவருக்கும் நாயகனும் வீரேசத்
தூய குருவைத் தொழுதிடுவோம் எம்பாவாய். 19

அண்ணல் வெளிவளியாய் ஆறுநெ ருப்பறலாய்
மண்ணாய்ப் பரிதிமதி வாழுமுயிர் தானாகிக்
கண்ணும் இவையெவைக்கும் வேறாய்க் கதித்தெழுந்தே
எண்ணற் கரிதாய் இருக்குமது மூவுடலில்
நண்ணுகரி யாம்நீயே நன்கறிவாய் என்றுரைத்து
உண்ணடுக்கம் செய்யுமிருள் ஓட்டவரும் வீரேசத
தண்ணளியா னைக்குருவைச் சார்ந்துதொழ மார்கழியில்
பெண்ணங்கே நீர்மூழ்கப் பேர்ந்தெழுவாய் எம்பாவாய். 20

சுத்தமதாய் மாயையொடு தோய்தலினால் நல்லிறையாய்ப்
பொத்துமுட லானுயிராய்ப் பூன்றநறும் சான்றாகி
நத்துமெண்ணம் யாவையினும் நண்ணும் சுடரொளியாய்ச்
சித்தம் உறும்பொருளில் சேர்பொருளாய் நின்றிலகும்
சத்ததனை அன்றியொரு சத்துமிலை பொய்வடிவாம்
வத்துவெலாம் மெய்யின் வடிவமெனக் கண்டிருப்பாய்
பெத்தம் அழியும் பெருகுமின்பம் என்றுரைத்த
அத்தன்வீ ரேசனமக் காண்டவன்பா டெம்பாவாய். 21

சித்தர்களும் வந்துதொழும் தென்கழநி ஊருறையும்
முத்துரா மேச முநிவரன்ருள் போற்றிநிதம்
சித்தம் சிவவடிவாச் செய்தவர்கள் தாள்போற்றி
உத்தமவே தந்தமவை ஓதுபவர் தாள்போற்றி
நத்தும்வை ராகமுற்ருர் நாரணிந்த உள்ளமதில்
தித்திக்கும் மன்வீர சேகரன்றன் நம்பிறவி
அத்தனையும் போக்கும் அமுதவடி போற்றியந்த
நித்தனையாம் போற்றநீர் ஆடேலோர் எம்பாவாய். 22

திரு எம் பாவை முற்றுப் பெற்றது.

# திருப் பள்ளி யெழுச்சி

விநாயகர் காப்பு—வெண்பா

வள்ளல் திருக்களரில் மன்வீர சேகரனுர்
பள்ளி எழுச்சிசொலப் பாவிக்கும் — உள்ளிருக்கும்,
பந்த மலத்துப் பரம்பொருளாய் நிற்கவருள்
தந்தமலைக் குரிய தாள்.

வாழியில் உலகிற்கும் மறைமுதல் எவைக்கும்
வாய்த்தமெய்ம் முழுமுதல் ஆகிய பொருளே,
ஊழ்தரும் அவத்தைமூன் றுடம்பையும் அறிந்தங்
கொட்டுதல் அறநின்ற ஒருதனிச் சிவமே,
சூழுமா வரணமென் துதையிருள் துகைக்கும்
தோமறும் உளத்தெணத் தறுபுலச் சுடரே,
ஏழுறு பிறப்பெமக் கறவீர குருவே
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

நத்தெறி கடலினில் ஞாயிறு சிவந்தே
நணுகிய திருளெலாம் தென்திசை அதினில்,
முத்துரா மலிங்கனம் முநிகுரு நாதன்
முளைத்தலும் கலியென ஒழிந்தது கண்டாய்,
ஒத்தடி யவரெலாம் உளத்தன்பு புனைந்தே
உன்றிருப் பணிசெய வுறுகின்றார் எமக்கும்,
சித்தம்வைத் தருள்தர வீரசே கரனே
திருக்கள ராய்பள்ளி எழுந்தரு ளாயே. 2

ஐம்புலச் சுவைதொடர்ந் தவரவர் சுவையை
அறிந்தெணின் அளவிடற் கரியநல் சுவையே,
நம்புறும் மறையெனும் அளவைகொண் டளக்க
நணுகிடும் ஒருதனி நவிலரும் திருவே,
எம்பொருட் டுருவுகொண் டதுநீயென் றிசைக்கும்
இருக்குரை இசைத்தினல் இறவுளத் தளியால்,
அம்புவி வருவீர சேகர முநியே
அருளிறை யேபள்ளி எழுந்தரு ளாயே. 3

தூய்மைசேர் உளந்தனில் துனைந்தெழும் அகண்டத்
துருவுறும் விருத்தியால் மறைப்பது தொலையத்,
தோய்தரும் பலமழுங் கிடத்தனி ஒளிரும்
துளக்கரும் பெருவெளி ஆகிய பொருளே,
வாய்மைகொள் மறைகளும் எதிர்மறை முகத்தான்
வழங்குவ தன்றிநேர் இதுவெனற் கரிதாய்ப்,
பாய்தரும் திருவீர சேகர பரமா
பண்ணவ னேபள்ளி எழுந்தரு ளாயே. 4

ஊன்கடந் துளங்கடந் துரைகடந் தொளிசேர்
உயிர்கடந் துறுகய றரவெனப் பயிலும்,
மான்கடந் தகங்கரம் பகுதியும் கடந்து
வயங்குறு பேரொளி நீயென எமக்கும்,
தேன்கடந் தினிக்குஞ்சொல் செவிகொளப் புகுத்தும்
செல்வசெம் திருவீர சேகர குருவே,
வான்கடந் துயர்தரு வளைதிருக் களரில்
வளர்பர மாபள்ளி எழுந்தரு ளாயே. 5

மாமறை முழங்கின முழங்கின வளைகள்
வாரணம் கூவின கூவின குயில்கள்,
தோமற வாயிலில் சரணநீர் தெளிக்கும்
தோகைமார் கைவளை சிலம்பின எங்கும்,
பூமலி வயல்வளம் பொதுடிருக் களராய்
புவனத்தில் உழல்கின்ற எமக்கினல் புலரச்,
சேமம துறுவீர சேகர ஞான
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே. 6

வைகறை அந்தணர் மாதவர் பெரியோர்
மலிபுனல் முழுகிநல் உளத்தன்பு பூண்டு,
மைகளத் துறுமிறை மாதேவ சம்போ
மாதவ கேசவ என்றிசை இசையே,
வைகின எங்கணும் மனந்தேய்ந்து தேய்ந்துன்
மலரடி தணிலுறும் வாழ்வெமக் கருளி,
உய்கைசெய் தருள்தர வீரசே கரனே
உயர்துற வறபள்ளி எழுந்தரு ளாயே. 7

புண்ணிய மறைசொலிப் புகழ்ந்துளம் உவந்தே
போற்றுதல் வாழ்த்துதல் புரிபவர் ஒருபால்,
அண்ணல்புத் தமுதிழி தமிழ்தரும் மறைகொண்
டணுகிநெஞ் சுருகிநின் றணிபவர் ஒருபால்,
எண்ணரும் வேதாந்த நூலுணர் தரவே
ஏக்கறும் மநத்தொடிங் கிருப்பவர் ஒருபால்,
தண்ணளி நிறைவீர சேகர சூழ்ந்தார்
தாதைநீ திருப்பள்ளி எழுந்தரு ளாயே 8

நற்றுணை யாய்நம சிவயவென் றிலகும்
நான்மறை மெய்ம்மறை நவில்பவர் குழுவும்
சொற்றமும் விருப்புமே செயிர்த்தழித் துணர்வாம்
திருவொடு மனத்தினைச் செறிப்பவர் குழுவும்,
பற்றறப் பரம்பொருள் தாமெனும் எணமும்
பாறநன் றேய்வுறும பரமயோ கியருமு,
சுற்றும் வாழ் கோயிலூர்க் குருவீர முநியே
துறவர சேபள்ளி எழுந்தரு ளாயே. 9

நன்றுறத் தீயவை நணுகிடா தொழிய
நாங்கள்நல் துறவிடை நழுவிடா துறவே,
ஒன்றியைம புலத்திடை உழல்மனம் நின்சீர்
உறுமலர் அடிதனில் உறங்கிட அதுநீ,
என்றுநல் மறைசொலும் இருந்தொடர் மொழிதான்
இலகிட நான்சிவம என்றுணர் தரவே,
வென்றிகொள் திருவீர சேகர தேவே
விமல னேபள்ளி எழுந்தரு ளாயே. 10

திருப் பள்ளி எழுச்சி முற்றுப் பெற்றது.

—: :—

திருக் களர்,

பரமாச்சார்ய ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக ஸ்வாமிகள் மீது

திரு எம் பாவை – திருப் பள்ளி எழுச்சி

என்னும் அருட் பா மாலை.

கோயி லூர் மடம்,

ஸ்ரீ மகா தேவ ஞாந தேசிக சுவாமிகள் அவர்கள் மாணுக்கர்,

திரி சிராப் பள்ளி, குன்றி மணிச் சாமி மடம்,

ஸ்ரீ அத்வைதாநந்த சுவாமிகள் அவர்கள் இயற்றியது.

---

விநாயகர் காப்பு; கலிப் பா.

பொன்னொ ளித்த புலிநகர்ப் புண்ணியன்
மன்னு மாமர பிற்றிரு மாதவன்
தன்ன ருட்குரு வீரனெம் பாவைதான்
வன்னி ஐங்கரன் வாய்ப்ப அருளுமால்.

திரு எம் பாவை.

1. உலகுக் கொருமுதல்வன் ஒக்குதிரு வீரன்
நலமலிந்த ஆரியனாய் நல்லோர் தவத்தால்
நிலவித் கொளியுதவும் நீள்கதிரோன் என்ன
வலமலிந்த தென்கழனி வந்தணைந்தான் நல்ல
இலவிதழாள் அன்னவனை எய்தி வணங்காள்
சலம்விழியின் நின்றொழுகச் சையைகிடந் தாளே
கலக்கிடும் காரிகையின் கைதவங்கள் விட்ட
குலமகளின் உள்ளக் குறிப்பென்னே எம்பாவாய்.

2. சிட்டர்பெறும் தேசிகனைச் சிந்திக்கும் சீருடையார்
மட்டிலார் கூடி மகிழ்ந்துதெரு வாயுற்றார்
கட்டம் தவிர்க்கும் கழனித் திருநெல்லைக்
கிட்டமுறத் தொண்டிங் கியற்றிநின்ற வீரேசன்
சுட்ட அரிதாகும் தோலா ஒளிதோன்ற
நிட்டை அளித்த நிமலன் திருக்களர்க்கே
இட்டப் படாதுறங்கல் ஏழனமென் றெண்ணிலையால்
விட்டெழுவாய் தூக்கமதை மென்குயிலே எம்பாவாய்.

3. முத்திதர வந்த முழுமுதலே வீரேசன்
பத்தர் பெருமை பகர்தலெளி தோவென்று
தித்திக்கப் பேசினாய் தேன்மொழிநீ தாடிறவாய்
சித்திமுதல் மெய்ம்மைத் திருவேய்ந்த மெய்யடியார்
எத்திறத்தா ளோவென்றே எண்ணி விடலாமோ
கைத்திறத்தாள் என்றே களிப்பத் துதிபுரிவாய்
சுத்தியுடை முக்கரணர் சொல்லித் துதியாரோ
சத்தியமே வேண்டும் சகியேலோர் எம்பாவாய்.

4. சித்தம் சிவன்பால் செலுத்தும் சிவயோகர்
முத்தம் சொரிகீர் முழங்குதல்போல் ஏத்துகின்றார்
பத்தும் புகுந்துதாம் பட்டதுயர் போதாதோ
இத்தனையும் கண்டெவனோ எய்யா திளமயிலே
நித்தம் துயின்றவமே நேரத்தைப் போக்குகின்றாய்
அத்தனைவீ ரேசனங்கள் ஆரியனை ஏத்துதற்கிங்
கெத்தனைபேர் உட்கசிந்து எய்துகின்றார் இன்னுமறங்
தொத்த நகையாய் உறங்கேலோர் எம்பாவாய்.

5. கல்லால் இருந்துமெய்ம்மைக் காட்சிமுநி வர்க்களித்தும்
வில்லார் விசயனொடு வெல்போர் புரிந்துநனி
பல்லோர் கழனிப் பதியமர்ந்தான் என்றெண்ணித்
தொல்லை வினையகலத் தோன்றலைவீ ரேசனையுள்

அல்லோடப் பாடிநின்றார் ஆரணங்கே தாடிறந்து
நல்லார் இவரில்லை என்று தெமையாண்ட
வல்லாளன் மெய்ஞ்ஞான வள்ளல் புகழ்பூண்டிங்
கெல்லாமாய் நின்றானென் றேத்தேலோர் எம்பாவாய்.

6. அக்காள் உனைநான் அடுத்தநாள் முன்னெழுந்து
தக்கானைத் தேசிகனைத் தான்பாட வாவென்ற
மிக்கான சொன்மீறி மீண்ட திசைபகராய்
இக்கான வல்லார் இசைபாட இப்புவியில்
அக்காகம் காக்காவென் றேயரற்ற வைகறையில்
கொக்கரக்கோ என்னுங்கோ ழிக்குரலும் கேட்டிலையோ
தக்கானம் வீரேச சற்குருவைப் பாடுதற்கு
வெட்கமதை வேல்விழியாய் வேண்டேலோர் எம்பாவாய்.

7. முன்னம் துருவாசர் மூர்த்திநடம் கண்டவிதம்
சொன்ன புராணச் சுருதிசெவி சாய்த்திலையால்
பின்னும் இறங்கிப் பெயர்வீர மாமுனியென்
றன்ன தலப்பணியோ டைந்திரத மேபுனைந்து
முன்னர் மறையவரோ டத்தலத்தார் தற்சூழச்
சின்மயமார் கற்பூர திவ்யவொளி யிற்கலந்த
கன்னல் மொழிக்காதைக் கட்டுரைகள் கேட்டிலையோ
இன்னம் துயிலல் இறும்பூதே எம்பாவாய்.

8. அண்ணா மலைவெள்ளி யங்கிரிச்சா மிம்முதலோர்
தண்ணார் உளமனைத்தும் தங்குமெங்கள் வீரேசப்
பண்ணவனைப் பண்ணாரும் பாவால் கசிந்துருகி
பெண்ணணங்கே பாடாது பேதமைகொண் டேதுயில்வாய்
தண்ணார் ஒளிமழுங்கிச் சந்திரனும் சாய்ந்துநின்றான்
விண்ணே இரவி வெளிவரவே அல்லகலக்
கண்ணோர் அடியார் கலந்தார் புகழியம்பத்
திண்ணார் கதவம் திறவேலோர் எம்பாவாய்.

9. வெய்யோன் உதிக்க விரிந்த இருண்மறைந் தும்
தையால்நினைது தணியாத் துயிறணியாய்
துய்யவீ ரேசனார் தொண்டர் இனங்கூடி
கையா தெழுந்து நறும்புனலின் உட்புகுந்து
மெய்யார வேகுளித்து மெய்க்குரவன் சீர்நினைந்து
செய்யதிரு நீற்றைச் சிவசிவவென் றேபூசி
ஐயா எனத்துதித்தல் ஆய்மயிலே கேட்டுமெனோ
உய்யவகை செய்திலையே ஒக்குமோ எம்பாவாய்.

10. செங்கழுநீர்ப் பூவணிந்து சிந்முத் திரைபிடித்துச்
சங்கம் முழங்கத் தலைத்தான் மலர்சூட்டிப்
பங்கப் படமலமும் பார்த்தருளும் வீரேசன்
தங்குதடை இன்றியருள் தன்கருணை வெள்ளமதில்
முங்கி முகமலர்ந்து மொய்த்தணிகொள் தொண்டரொடும்
தங்கி மனக்கவலை தானகலச் செம்மாந்தே
இங்கிருப்ப அன்னவரின் எங்கும் நிறைபுகழில்
அங்கம் குளிரப்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

11. மண்டலத்து மக்கள் வரம்பில் உயிர்பிறவும்
உண்டுடுத் தெங்கள்வீ ரேசர்புகழ் உச்சரிக்கக்
கொண்டலே சிட்டமுறும் கோதில் அடியவர்தம்
திண்டோள் திருநுதலில் சேர்நீ றெனச்சென்று
மண்டுதையும் சாகரநீ மன்னிக் குடித்தெழுந்து
விண்ட தறியாதார் வெற்றுளம்போ லேகறுத்து
விண்டவிழ்ந்து வெற்படைந்து வீரேசன் தண்ணளிபோல்
தொண்டரெலாம் மூழ்கத் துனைந்துபெய்வாய் எம்பாவாய்.

12. மங்கையர் எல்லாரும் மட்டறவே வந்துவந்து
செங்கதிரார் செல்வன் திசைவிளக்கும் முன்குளித்து
பங்கமறும் வீரேசன் பக்திப் புகழ்பாடி
எங்குமில்லார் இன்பம் இனிதுற்றார் நம்வினைகள்

பங்கம் அடையவெம் பாச இருடொலைய
துங்கக் குழையும் சுரிகுழலும் பூண்முலையும்
பொங்கி அசையமநம் பூரிப்ப அன்புமிக
அங்கம் குளிர அணிபுனலா டெம்பாவாய்.

13. என்னைத் தடுத்தாண்ட என்குருவின் நற்குருவே
தன்னைத் தரவல்ல தற்பரனே சிற்பரனே
உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலம்
பின்னைப் பெறுதற் கரிதாம் பெரும்பேறே
துன்னை உடையார்க் குகந்த பணிசெய்வோம்
சின்னம் தெரியத் திருநீ றணிந்திடுவோம்
அன்ன வகையே உமக்கேநாம் ஆட்படுவோம்
என்ன குறையும் இலமேலோர் எம்பாவாய்.

14. கண்ணாலே கண்டுமகா தேவன் கழல்பெற்ற
பெண்ணேநீ பெற்றபே றென்னென்று பேசுகேன்
தண்ணார் உகந்தலிங்கன் தாள்பரவும் முத்திரா
மன்னோர் சிதம்பரமாம் அன்னார்க் குடலாதி
முன்னே அளித்த முநிவீர சேகரனார்
தன்னேர் இலாதவடி சார்ந்தமகா தேவகுருப்
பொன்னார் திருப்பாதம் போற்றுதற்கா அன்னவரின்
இன்னார் அருட்புனல்சேர்ந் தாடேலோர் எம்பாவாய்.

15. பார்க்கும் பொருண்முழுதும் பாராப் பொருண்முழுதும்
பார்க்கும் அவனேகாண் பார்க்கில் பிறிதில்லை
ஏற்ப உரைப்பானும் ஏற்றுக்கொள் வானுமெனச்
சேர்ப்ப இருவருமே செப்பில் சொரூபமெனக்
கூர்த்த உபநிடதம் கூறும் சுவாநுபவம்
சீர்த்திமிகச் செப்பிச் சிறியோம் தெளியவொரு
வார்த்தைசொல்லும் வீரேசன் மன்னுமலர்த் தாள்பாட
ஆர்ப்படையும் தெண்ணீரில் ஆடேலோர் எம்பாவாய்.

16. எத்திக்கும் கண்டுவழி இன்னலுறும் மைந்தனுக்குப்
பத்திமனை வைத்தாடிப் பண்பறிந்தப் பால்வருதல்
எத்திறமோ அத்திறமாய் ஏனுமா ரோபமதைப்
புத்திபுரு டன்பொருந்தப் போக்கும் வழியுணர்த்தும்
நித்தபர மாநந்த நீடொளிநிர்ப் பந்தனருள்
வித்தகன வீரேசன் வைத்தபதம் வேய்குழலாய்
முத்துநவ ரத்திநமு கந்தெரியும் மூந்நீரில்
சித்தமவன் பாலே செலுத்தியா டெம்பாவாய்.

17. நித்த அநித்த நிலைகண் டவனடியைப்
பத்தியொடு பாடிநிற்கப் பன்னுவை ராகமுறச்
சத்தியசட் சம்பத்தி தாமடைய முத்திபெற
அத்திமுக னைத்தழுவும் அப்பாவே அன்னையொடு
வைத்தசடைக் கங்கைமுதல் மற்றெவையும் விட்டுநபு
கித்தரணி மாநுடனாய் எய்தியருள் வீரேசச்
சித்துருவைச் சார்ந்துதொழத் தெண்புனலில் வண்ட
அத்தங்கள் கொட்டிநின் றூடேலோர் எம்பாவாய்.

18. தென்பால் உகந்தான் திருச்சே அடிகாண்பான்
என்பாக்கை தேயமால் ஏனமாய் மண்கீண்டும்
பொன்பாய் முடிகாண்பான் போதன் உயர்ந்துமென்
றுன்பாச் சுழன்றனரால் துன்னுமகங் காரமதால்
இன்பார் இளங்கிளியே என்னதுயான் என்பவற்றும்
மென்பாதம் கணடிடவே மேலாம் திருக்களரீ
சன்பாரி சாதவந வீரேச சற்குருமுன்
அன்பாய் அடைந்துபுகழ் ஆதரிப்பாய் எம்பாவாய்.

19. மோகம் அகல முழுவிவே கம்முதிர
ஏக விடய இகபரங்கள் பொய்யாக
யோக சமதமங்கள் ஆறுமுற ஓங்குணர்வின்
தாகமுற முத்திநலம் தங்கப் பெரியரொடு

போகமுறு வோமிந்தப் பொய்யுடலம் கூட்டுகின்ற
சோகம் அறுவோம் துலங்குகுரு வீரேச
ஏகனடி பரவல் எய்துமேல் என்றைக்கும்
தேகம் எடுக்கத் தியங்காதே எம்பாவாய்.

20\. உய்ய உலகம் உவந்தான் அடிபோற்றி
மையல் அகற்றும் மரைச்சே அடிபோற்றி
ஐயாறும் ஐந்தும் அகன்ற அடிபோற்றி
துய்ய அடியார் துதிக்கும் அடிபோற்றி
வெய்ய மனம்குளிர மேவும் அடிபோற்றி
செய்ய திருக்களரில் சேர்ந்த அடிபோற்றி
வையம் புகழுகந்தான் மாமரபார் வீரேச
ஐயனடி போற்றிநீர் ஆடேலோர் எம்பாவாய்.

திரு எம் பாவை முற்றுப் பெற்றது.

---

## திருப் பள்ளி எழுச்சி.

1\. வாழியென் ஆரிய வழிமுதல் பொருளே
வறுத்துறும் வெம்பவம் அழிக்குநல் அமுதே,
காழியான் அழுகுரல் கேட்டன்று ஞானம்
கறந்துபால் ஊட்டிய காட்சியும் காட்டி,
கோழியல் வாழ்வருள் குருபரா செருக்கைக்
குலத்துளத் திருளறக் குலத்தெனக் கருள்,
ஆழியில் ஞாயிறும் அருணனும் வரவே
அகன்றதே இருள்பள்ளி எழுந்தரு ளாயே.

2\. சாக்கிரம் கனவுகள் ஆதிய பொருள்கள்
சாக்கியால் அறிவன சாட்சியை அறியாப்,
போக்கிய போகம்போக் தாவென மூன்றும்
போனவப் பொழுதிலப் பொன்னடி தோன்றும்,

கோக்கியுன் வினையுறத் தாக்கிய தமமும்
நுண்ணிய மதியுடன் வாசனை ஒழியப்
பாக்கியம் வந்துறும் எனப்பகர் வீர
பண்ணவ னேபள்ளி எழுந்தரு ளாயே.

3. ஒருபொருள் இடத்தினில் உற்றதோர் நாமம்
உருவம தடனிருப் பாநந்தம் ஒளியே,
பருவம தநுகண்டு பகர்வன ஐந்தில்
பார்த்திடு உருநாமம் பகர்வதும் பொய்யே,
மருளுற அரவுருப் பழுதையில் கண்டு
மருளற அரவுபொய் பழுதைமெய் எனல்போல்,
இருப்புடன் ஆநந்த ஒளிமெய்யாம் என்றே
இசைவீர திருப்பள்ளி எழுந்தரு ளாயே.

4. நற்குணம் நற்செய்கை நிறைந்தநல் அடியார்
நாற்புரம் வீரேச நணுகினர் உளத்தே,
துற்குணம் துர்ச்செயல் தோற்றிய மாயை
தொலைந்திடத் திருக்களர் தொல்பதி யதனில்,
நற்றடம் கண்ணியர் வைகறை செல்லின்
நாற்றினை நடமள்ளர் நயம்பள்ளுப் பாட,
செற்றிருள் கமலங்கள் விரிந்திடச் செய்யோன்
சேர்ந்தன னேபள்ளி எழுந்தரு ளாயே.

5. விண்ணவர் வேந்தனும் விரைந்தனன் ஒருபால்
விருப்புடன் பலதிசை வேந்தரும் ஒருபால்,
மண்ணுறும் அரசரும் மக்களும் ஒருபால்
மங்கல நான்முகன் மாதவன் ஒருபால்,
தண்மதி தவழ்சடைச் சங்கரன் ஒருபால்
தண்ணளி பெறவரும் தவத்தினர் ஒருபால்,
பண்ணிசை பாடலோ டாடலும் புரிந்தார்
பாவீர னேபள்ளி எழுந்தரு ளாயே.

6. விரிந்தநல் படமதில் விரிந்தசித் திரங்கள்
வேண்டுருக் கொடுபல விளக்கங்கண் டாலும்,
தெரிவுறப் படமதைத் தடவிய பொழுதில்
தெளிந்திது படமென்பை திகழுருக் காணய்,
அரிபிர மாதிய அளவறு பொருள்கள்
அறிவன்றிப் பிறிதிலை அகிலமும் அறிவே,
தெரிதியென் றருள்வீர சேகர ஞான
தேசிக னேபள்ளி எழுந்தரு ளாயே.

7. கதிரவன் நணுகினன் குணதிசை பறவை
கண்விழித் தொலித்தன கறவைபால் சுரந்த,
மதிமுகம் எழில்பெற மதியமும் மறைந்தான்
மாலயன் தேடிய மலரடி காண்பான்,
முதிர்வுறும் தவங்கொளும் முநிவர்கள் முனைந்தார்
முத்தியும் புத்தியும் வேண்டியே சூழ்ந்தார்,
விதிமுறை மறைமொழி விரும்பினர்க் கருளும்
வீரசே கரபள்ளி எழுந்தரு ளாயே.

8. தண்மதி அருக்கனே தாரகை முதல
தாமொளி பெறவருள் தயாபர குருவே,
விண்முதல் பூதங்கள் விளங்கிட அருளும்
வீரசே கரஞான வேந்தனே உனது,
மண்ணுறு திருவடி மாலயன் காண
மதியிலர் ஆகியே மயங்கினின் றனரே,
கண்ணெனக் கயல்பிறழ் கழனிசூழ் களரில்
காணயாம் திருப்பள்ளி எழுந்தரு ளாயே.

9. எல்லையில் பெரும்பவக் கடலிடைக் கிடந்தேன்
    ஏறவே நினைக்கும்போ திழுத்தது முதலை,
வல்வினை நீவீர சேகர ஞான
    வாள்விடுத் தேகரை ஏறுதற் கருளாய்,
எல்லுறும் அடியவர் எழுந்துவந் துனது
    எழிலடி தொழுதுநின் றிசையிசைப் புறவே,
வல்லிருள் அகலவும் வாழ்த்தினர் அடுத்தார்
    மாதவ னேபள்ளி எழுந்தரு ளாயே.

10. வீரசே கரஞான வேந்தனே நினது
    விரைமலர் அடியழி வில்லதைத் தரவே,
சீரணி பெறச்சென்னி சேர்ந்திருள் தொலையச்
    செய்தபெ ருந்தவக் குழுவினர் எல்லாம்,
ஆரண முடிவினில் அறைந்தநல் பொருளை
    அடியேமுக் கருளின அதிசயம் என்னென்,
றேரணி திருக்களர் இசைப்புறக் கேட்டோம்
    எமக்கருள் தரப்பள்ளி எழுந்தரு ளாயே.

வாழிவீ ரேசமுநி வாழிமகா தேவனருள்,
வாழி அவனடியார் வாழியவே—எழுலகும்,
அத்துவிதக் கொள்கை அவனியிலே என்றென்றும்,
நத்தியுற வாழி நனி.

திருப் பள்ளி எழுச்சி முற்றுப் பெற்றது.

உ

## திருக் களர், ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக ஸ்வாமிகள் மீது, திரு எம் பாவை – திருப் பள்ளி எழுச்சி என்னும் அருட் பா மாலை.

இஃது

திருப் பூ வணம், வேதாந்த மடத்தின் அதிபதி யாகிய உயர் தவத் திரு, காசிகாநந்த ஞாநாச்சாரிய சுவாமிகள் விருப்பத்தின்படி

ஆக்கியோன், சென்னை, அகத்திய குரு குலம், சாது நாராயண தேசிகர் நிலைய அதிபதியும், தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கத் தலைவரும் ஆகிய சுவாமி அருண கிரி நாதன்.

*விநாயகர் காப்பு; வெண்பா.*

*நல்வீர சேகரனும் ஞாநகுரு நாதன்மேல்,*
*பல்சீரார் எம்பாவை பாடுதற்குச்—சொல்லாரும்,*
*நாத வடிவாகி நாவகத்தே நின்றருளும்,*
*போதக் கணபதிதான் போந்து.*

### திரு எம் பாவை.

1. *பூதலத்தில் மக்கள் புனித அறம்விதைத்துப்*
*பாதகமாம் புல்லைப் பறித்தன்பு நீர்பாய்ச்சி*
*ஏதமிலா நல்லொழுக்கம் ஏற்றவுரம் ஆக்கிமுத்திச்*
*சாதனமாம் வேலியிட்டு தக்கதவக் காவலுமிட்*
*டீதல் பொருளின்பம் வீடென்னும் இந்நான்கும்*
*நாதனரு ளால்விளையும் ஞாநப் புதுவயலில்*
*ஓதும் தநவணிகர் ஒண்குடியில் தோன்றியநம்*
*ஆதவனும் வீரேச அண்ணலைப்போற் றெம்பாவாய்.*

2. முத்தநகை ஆரணங்கே முத்தமிழ்நல் நாடதனில்
சித்தர்கள் சூழும் சிவகங்கைச் சீமையினில்
வித்தின்றிச் செந்நெல் விளையும் புதுவயலில்
அத்தனும் தந்தை அருணா சலத்திற்கும்
சத்தியாம் முன்னைத் தவமார் உமையாட்கும்
சுத்தப் பிரம சொரூபமாம் வீரேசன்
புத்திரனாய் வந்துதித்துப் பொன்றாப் புகழடைந்த
வித்தகன்சீர் பாட விரைந்தெழுவாய் எம்பாவாய்.

3. தத்துவங்கள் தொன்னூறும் ஆறும் தனவணிகர்
ஒத்துவாழ் ஊராம் உயர்கோவில் ஊர்பிரமம்
சுத்தசாத் வீகமநம் தோன்றும் புதுவயலாம்
முத்திராம லிங்க முநிவர் குலம்விளங்க
நத்தீன்ற முத்தென்ன நங்கையுமை யாளீன்ற
முத்தனும் வீரேசன் மூவாப் புகழ்பாடி
நித்தமும் வைகறையில் நீராடி நீறணிந்து
சித்த மலமறவே சேவிப்பாய் எம்பாவாய்:

4. சங்கத் தமிழ்முழங்கும் தண்பாண்டி நாடதனில
கொங்குதேர் சோலைசெறி கோவிலூர் ஆதிநம்
செங்கதிரைப் போலத் திகழவைத்த செம்மலினைத்
திங்களைப்போல் ஈரெண் கலைதிகழும் தேசிகனை
அங்கைக் கனிபோல் அனைவருக்கும் மெய்யுணர்வைச்
சங்கையறத் தந்து சழக்கறுத்த மாவீர
சிங்கமெனும் வீரேசன் சீர்பாடி மார்கழியில்
அங்கம் குளிரநீர் ஆடேலோர் எம்பாவாய்,

5. சீவகா ருண்யம் சிவபத்தி வைராகம்
மேவரிய மெய்ஞ்ஞானம் இந்நான்கும் ஓர்வடிவாய்ப்
பூவுலகில் யாங்கள்செய் புண்ணியத்தால் வந்துதித்தே
கோவிலூர் ஆதிநக் கொற்றவனாய் வீற்றிருந்தே

ஆவி உடல்பொருளும் அர்ப்பணித்த மாணவரின்
ஓவாப் பவத்தை ஒழித்துத் திருக்களரில்
தேவாதி தேவாய்த் திகழ்வீர சேகரனை
நாவாரப் பாடி நலமடைவாய் எம்பாவாய்

6 தூயதமிழ் வையத் துறவிகளின் மாசகற்றித்
தீயநெறி மாற்றிச் சிவநெறியில் செல்வித்துக்
காயமனம் வாக்குக் கடவுட் குரித்தாக்கித்
தேயமெங்கும் சன்மார்க்கத் தெய்வநெறி யிற்செலுத்தி
மாயவுல கத்தின் மயக்கமற மாணவர்க்கு
ஆயவே தாந்தம் அநுதினமும் போதித்த
தாயனைய ஞானகுரு தத்துவவீ ரேசனைநீ
வாயினால் பாடி வணங்கிடவா எம்பாவாய்,

7. மருவார் குழலியர்காள் வாரீரோ நீவீர்
திருவாரும் மார்கழித் திங்கள்நீர் ஆடி
அருவாய் உருவாய் அருவுருவாய் மன்னிப்
பெருவாழ் வளிக்குமிறை பேரின்பம் ஈவான்
குருவாகி வந்தெங் குறைதீர்த்த கற்பத்
தருவாரும் வீரேச சற்குருவாம் தண்ணார்
அருள்சேர் திருக்களர் ஆண்டவனைப் பாடி
இருவே றுலகத்தும் இன்படைவோம் எம்பாவாய்.

8. ஞானமே செங்கோலாம் நாற்சா தனம்படையாம்
மோனஞ்சின் முத்திரையாம் முத்தியே ராச்சியமாம்
ஆனமேதார் ஐம்பொறிகள் ஆன்றமைந்த நல்லமைச்சாம்
ஞானம் தவம்தானம் நன்று நிலைபெறுக
வானம் கருணை மழைபொழிய ஆட்சிசெயும்
கோனும் குருவீர சேகரனும கொற்றவனைத்
தேனாரும் சோலை திருக்களர்வாழ் ஆண்டவனை
மானேவா சென்று வணங்கிடுவோம் எம்பாவாய்.

9. எஞ்ஞான்றும் எவ்விடத்தும் எப்பொருளும் தானாகி
அஞ்ஞாதம் ஆகி அணுவாய் மகத்தாகி
விஞ்ஞானி கட்கும் விளங்காத செம்பொருளாம்
மெய்ஞ்ஞான சோதியே மெய்வீர சேகரனும்
செஞ்ஞாயி றாயுதித்துச் சீவபரம் ஆமிவற்றின்
எஞ்ஞான முன்தோன்றா தெம்மனோ ரைமறைத்த
அஞ்ஞானம் தன்னை அறவொழித்த ஆரியனைச்
சிஞ்ஞாசை உண்டாகச் சேவிப்பாய் எம்பாவாய்.

10. மோக்ஷசாம் ராச்சியத்தை முற்றும் தனதாக்கிச்
சாக்ஷியாய்ச் சச்சிதா நந்த முடிபுனைந்து
காட்சிக் கெளிய கருணைவடி வாய்த்திகழ்ந்து
வீக்ஷண்யத் தாலன்பர் வேண்டியவெல் லாமருளித்
தீக்ஷண்ய புத்தியிலாச் சீடரையும் ஆண்டருளித்
தாழ்ச்சியிலா ஞானத் தனியரசு தானடத்தும்
மாட்சிமிகு மாவீர சேகரனும் மன்னவன்தன்
ஆட்சித் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

11. மண்ணுலகில் தோன்றி மறைந்து மறுபடியும்
விண்ணுலகும் தென்னுலகும் மீண்டும்போய் வந்துழன்றே
எண்ணரிய தாய்மாரும் யாமும் படுந்துயரைக்
கண்ணுதலே கண்டு கரந்து மழுமானைத்
தண்ணளியால் வந்துதித்துத் தானவரும் வானவரும்
நண்ணரிய முத்தியினை நாமடையச் செய்வித்த
அண்ணல் அருள்வீர சேகரனும் ஆண்டவனைப்
புண்ணியனைப் பாடிப் புனலாடாய் எம்பாவாய்.

12. வேதமொரு மூன்றினையும் வேதாந்த நூலினையும்
வேத வியாசனைப்போல் மென்தமிழில் தந்தருளும்
மாதவச்சி வானந்தர் மாமண்ட லேசுரமா
சோதியெனச் சொல்வீர சுப்பைய ஞானபரர்

கோதாம் பரசமய கோளரியென் றேபுகழும்
வேதாந்த பாஸ்கரனு மேவுபன்னூல் ஆசிரியர்
நாதனெங்கள் காசிகா நந்தரையாட் கொண்டருளும்
ஆதிகுரு வீரேசற் கார்நிகராம் எம்பாவாய்.

13. மூர்த்திதலம் தீர்த்தம் முறையாகச் சென்றுபல
தீர்த்தங்கள் ஆடியெங்கும் தெய்வவழி பாடுசெய்து
சேத்திரங்கள் எங்கும் திருமடங்கள் கோமடங்கள்
யாத்திரையா வந்தவர்கட் கன்னமிடும் சத்திரங்கள்
பூத்தொடுத்தீ சற்கணியப் பூமலரும் நந்தவநம்
சாத்திரங்கள் கற்பவர்க்குத் தக்கபட்டி மண்டபங்கள்
பூர்த்திசெய்து வைத்தபெரும் புண்ணியவீ ரேச்சுரனை
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்.

14. கோவிலூர் ஆண்டவர்தம் கோவில் சிவன்கோவில்
தேவர் உகந்தலிங்க தேசிகர்தம் சீர்க்கோவில்
பூவில் கருணை நிதிவிளங்கும் பொற்கோவில்
காவி மலரார் களத்தூர் இறைகோவில்
தாவாத பாரிசா தேசுரனர் தங்கோவில்
யாவுந்தெய் வீக அருள்விளங்க அன்பரெலாம்
சேவிக்கக் கும்பாபி சேகஞ்செய் வீரேசன்
பூவார் திருவடியைப் போற்றேலோர் எம்பாவாய்.

15. முயற்சியுடன் வந்தடைந்த முத்திவிருப் புள்ளோர்
பயிற்சிபெற வேதாந்தம் பட்டிமண்ட பத்தில்
அயர்ச்சியின்றிப் போதனைசெய் தல்லும் பகலும்
மயக்கறவே ஆறுமுறை வாசிட்டம் சொல்லி
முயற்கொப்பு கானனீர் மூன்றுலகும் என்று
துயர்க்கடலைத் தாண்டுவித்துத் தூயமுத்தி சேர்த்துச்
செயக்கொடியை நாட்டித் திகழும்வீ ரேசன்
செயற்கரிய சீர்பாடிச் சேவிப்பாய் எம்பாவாய்.

16\. சென்னை நகரில் திகழ்வீர சுப்பையர்
பன்னரிய ஏகாம் பரமார் சிவாநந்தர்
மன்னுதிருப் பூவணத்தில் வாழ்காசி காநந்தர்
அன்னியம் இல்லா தமருமண் ணாமலையார்
மின்னுமெழில் கோவிலூர் மேவு மகாதேவர்
உன்னரிய நாரா யணசாமி வேங்கடவர்
இன்னும் பலவடியார் ஏத்துகுரு வீரேசன்
பொன்னார் திருவடியைப் போற்றேலோர் எம்பாவாய்.

17\. தேவர் உலகோ திருமால்வை குந்தமோ
சேவேறும் ஈசன் திருக்கைலை யோவெனவே
யாவரும் போற்றும் அணிகோவில் ஊர்மடமும்
தேவிதிரு நெல்லையம்பாள் தெய்வத் திருத்தளியும்
மேவு களரீசர் விண்ணார் திருத்தளியும்
காவியங்கள் ஓவியமாக் காட்டும் திருப்பணிசெய்
தோவாப் புகழ்பெற் றொளிர்வீர சேகரனைப்
பாவினால் பாடிப் பரவேலோர் எம்பாவாய்.

18\. திருக்களர்வாழ் ஈசன் திருமுழுக்கும் சூட்டித்
தெருக்களெலாம் அன்பர் சிவனடியார் சூழத்
திருக்கைலை எம்பெருமான் சேவேறி வந்த
திருப்பவனி கூத்தர் திருச்சபைமுன் நிற்ப
உருக்கமுடன் மாதேவ மாதேவா என்று
திருக்கரங்கள் கூப்பியே தெய்வநடம் செய்தே
உருக்கரந்து பூரணமாய் ஓங்குசிவம் ஆகித்
திருக்களர்வாழ் ஆண்டவனைச் சேவிப்பாய் எம்பாவாய்.

19, முத்திபெற்ற வீரேச மூர்த்திதிகழ் சந்நிதியில்
முத்திவிருப் புள்ள முமுட்சுக்கள் வைகறையில்
நித்திரையை விட்டெழுந்து நீராடிப் பூசைசெய்து
பத்தியுடன் தோத்திரங்கள் பாரா யணம்பண்ணிச்

சுத்தியுடன் பூக்குடலை தோளிலிட்டுப் பூவனத்தில்
பத்திரமும் பூவும் பறித்துவந்து மாலைகட்டி
அத்தன்வீ ரேசற் கபிடேகம் செய்தணிந்து
நித்தியமும் பூசை நிகழ்த்தலைப்பார் எம்பாவாய்.

20. வித்தக ராம் வீரேசர் மேவுதிருச் சந்நிதியில்
சத்தறியும் வேட்கையுள சன்மார்க்கர் சூழ்ந்திருப்பத்
தத்துவவி சாரணையில் தான்தேர்ந்த சாதுக்கள்
உத்தி அநுபவங்கட் கொவ்வமேற் கோள்காட்டிச்
சுத்தப் பிரமமே தோன்றியழி யாப்பொருளாம்
மித்தை உலகமென வெற்றி முரசறைந்து
சித்தாந்தம் செய்தல் சிரவணம் செய்வோமேல்
சத்தியமாம் முத்தியினைச் சார்ந்திடுவோம் எம்பாவாய்.

21. திங்கண்மும் மாரிபெய்து தேசம் செழித்தோங்க
கங்கைபோல் பாலாறு காவிரிசெய் யாறுபெண்ணை
பொங்குதமிழ் வைகை பொருனை நதிபெருக
எங்குமுள நீர்நிலைகள் எல்லாம் புனல்நிரம்ப
தெங்குபலா வாழை திகழ்மாங் கனிகுலுங்க
சங்குதவழ் செய்கள் தழைத்தோங்கி நெல்விளைக
எங்கள்வீ ரேசன் இணையடிகள் வாழ்கவென
மங்கலநீர் ஆடி வணங்கிவாழ் எம்பாவாய்.

திரு எம் பாவை முற்றுப் பெற்றது.

### கணபதி காப்பு; வெண்பா.

தெள்ளியமெய்ஞ் ஞானம் திகழ்வீர சேகரன்மேல்,
பள்ளி எழுச்சிப்பண் பாடுதற்கென் - உள்ளத்தில்,
சொல்லும் பொருளும் தொடர்ந்துவரச் செய்தருள,
வல்ல கணபதிமுன் வா.

1. போற்றிநின் திருவடி போற்றிநின் புகழ்கள்
புனிதநின் திருவருள் போற்றியென் றேத்தி,
நாற்றிசை யோர்களும் வந்துநிற் கின்றார்
நாண்மலர் கொண்டுனைக் காண்பதற் காகச்,
சேற்றினில் சங்கினம் தவழுந்தண் வயல்சூழ்
திருக்களர் திகழுபொன் திருக்கோவில் தனிலே,
வீற்றிருந் தருள்செய்யும் வீரசே கரனே
மெய்த்தவ னேபள்ளி எழுந்தரு ளாயே.

2. மெய்யடி யார்களின் மேனியில் திகழும்
வெண்ணீற்றின் ஒளியென வெளுத்தது வானம்,
ஐயமும் திரிபும் அகன்றவர் உளம்போல்
அருணன்வந் துதித்தனன் அலர்ந்தன மலர்கள்,
செய்யெலாம் செந்நெல்கள் கன்னல்போல் உயரும்
திருக்களர் மேவிய வீரசே கரனே,
பையக்கண் திறந்தெமைப் பாதுகாத் தருள்வாய்
பரசிவ னேபள்ளி எழுந்தரு ளாயே.

3. மாவினைப் பூட்டிய மாரதம் இவர்ந்தே
மார்த்தாண்டன் குணதிசை வருவதை அறிந்தே,
கூவின சேவல்கள் குருகுகள் குயில்கள்
கோவில்கள் எங்கணும் முழங்கின சங்கம்,

காவினில் அரும்புகள் மலர்ந்துதேன் சொரியும்
கவின்மிகு திருக்களர் வீரசே கரனே,
ஆவினில் ஐந்துகந் தாடிடும் அரனே
ஆண்டவ னேபள்ளி எழுந்தரு ளாயே.

4. இன்பத் தமிழ்மறை ஓதுவர் ஓர்பால்
எழிசை யாழில் இசைப்பவர் ஓர்பால்,
துன்பறத் தூய்மலர் தூவுவர் ஓர்பால்
தொழுதுகண் ணீர்மாரி சொரிபவர் ஓர்பால்,
என்பையும் குளிர்விக்கும் இன்னருள் புரியும்
ஏரார் திருக்களர் வீரசே கரனே,
அன்பினுக் குறைவிடம் ஆங்குரு பரனே
அருட்கட லேபள்ளி எழுந்தரு ளாயே.

5. பாவலர் நாவலர் நின்புகழ் பாடி
பக்கலில் வந்துநிற் கின்றனர் தேடி,
ஆவல் உடனன்பர் அடியவர் கூடி
அஞ்சலி செய்கின்றார் அருமறை பாடி,
கோவிலூர் மேவிய குணப்பெரும் குன்றே
குறைதவிர்த் திடுங்காம தேனுவின் கன்றே,
தேவர்கள் தொழுந்திருக் களருறை வீர
சேகர னேபள்ளி எழுந்தரு ளாயே.

6. ஆதியும் அந்தமும் நடுவுமில் லாத
அத்வைத சத்துசித் தாநந்த வடிவே,
கோதில்லாப் பேரின்ப முத்தியின் முடிவே
கோவிலூர் ஆதீனக் குருசிகா மணியே,
நேதிநே தியெனத் தேகாதி அனைத்தும்
நீக்கிப் பரப்ர்மம் நீஎன்ற ஞானச்,
சோதியே திருக்களர் வீரசே கரனே
சுந்தர னேபள்ளி எழுந்தரு ளாயே.

7. வைகறை யாமத் தெழுந்துநீர் ஆடி
வந்தனர் மாதர்கள் பாவைப்பண் பாடி,
கைகளால் கோலங்கள் தீட்டிநின் கோலம்
காண்பதற் காகவே காத்திருக் கின்றார்,
ஐவகை ஆகிய கோசம் கடந்தே
ஆநந்த ஆன்மாவாம் பிரமமாய் என்றும்,
வைகும் திருக்களர் வீரசே கரனே
மாமுநி யேபள்ளி எழுந்தரு ளாயே.

8. முத்தேகம் ஆகிய முப்புரம் எரித்தாய்
மும்மல காரியம் முற்றும் ஒழித்தாய்,
தத்துவங் கண்முப்பத் தைந்தையும் கழித்தாய்
தற்பதப் பொருளதே தானாக நிலைத்தாய்,
முத்திநல் நிலமேழில் துரியம தாக
மொழியும் திருக்களர்ப் பதியினில் இன்ப,
நித்திரை செய்திடும் வீரசே கரனே
நின்மல னேபள்ளி எழுந்தரு ளாயே.

9. இருப்பும் விளக்கமும் இன்பமும் ஆகி
இலகிடும் ஆன்மாவை நாமரூ பங்கள்,
உருத்தெரி யாமல் மறைத்ததால் இந்த
உடலையே நான்நான்என் றுரைத்துழல் கின்றோம்,
திருத்தகு திருக்களர் வீரசே கரனே
தேகாதிப் பிரபஞ்ச நாமரூ பத்தின்,
உருத்தெரி யாமலே ஒழித்தருள் புரிவாய்
ஒண்பொரு ளேபள்ளி எழுந்தரு ளாயே.

10. மண்ணிலும் விண்ணிலும் வளிதீநீர் களிலும்
மதியிலும் ரவியிலும் வானுடுக் களிலும்,
கண்ணிலும் கருத்திலும் காண்பொருள் களிலும்
காணுதற் கரிதாகிக் ககனத்தில் சுழலும்,

எண்ணரி தாகிய அண்டகோ ளங்கள்
யாவினும் அநுசூதம் ஆகிநின் றியக்கும்,
அண்ணலாம் திருக்களர் வீரசே கரனே
ஆண்டவ னேபள்ளி எழுந்தரு ளாயே.

11. நான்மறை களுந்தேடி நாடரும் தெருளே
நான்கு மகாவாக்ய லட்சியப் பொருளே,
ஆன்மாவை மறைத்திடும் அஞ்ஞான இருளை
அறவொழித் திடுஞான அருட்பெரும் சுடரே,
கான்மாறி ஆடிய கற்பகத் தருவே
களருறை வீரசே கரஞான குருவே,
தேன்மாரி பொழியுநின் திருவருள் போற்றி
சிவகுரு வேபள்ளி எழுந்தரு ளாயே.

திருப் பள்ளி எழுச்சி முற்றிற்று.

---

உ

திருக் களர், ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக ஸ்வாமிகள் மீது
திரு எம் பாவை — திருப் பள்ளி எழுச்சி
என்னும் அருட் பா மாலை.

சிதம்பரம், கோ. சித. மடம், ஸ்ரீ நீல கண்ட சுவாமிகள்
மாணக்கர்,
மதுரை, ஸ்ரீ ஷண்முகாநந்தய்யா அவர்கள் இயற்றியது.

---

விநாயகர் காப்பு; வெண்பா.

மன்னும் திருக்களரில் வாழ்வீர சேகரற்கிங்
குன்னும் திருப்பாவை ஓதுதற்குப்—பன்னுபுகழ்,
அந்திநிறத் தாறுமுக அண்ணனுக்கு முன்றோன்றும்
தந்திமுகத் தண்ணல் சரண்.

1. சீரார் உபநிடதச் செம்பொருளாய் அண்டமெலாம்
நேரே உருவாக்கி நின்றிடவும் பொன்றிடவும்
பேரார் கருவாய்ப் பெரியருளத் துள்வெளியாய்க்
காரார் பொழிற்களரில் காணும் பரம்பொருளாய்
நாரார் அடியவரை நன்மையுறத் தன்னடியில்
சேரா ஒருபொருளைச் செப்புமொரு நற்குருவாய்ப்
பாரார் அருள்வீர சேகரனாம் பண்ணவனை
நீரார் முடிச்சிவனை நீபாடேல் எம்பாவாய்.

2. எல்லா உலகின்பும் ஈசவடி யின்பதன்முன்
நில்லா எனவுரைத்த நின்மலனாய் நேமமொடு
நல்லோர் தொழும்பரம நாயகனாய் நான்மறையும்
சொல்லால் வழுத்துமொரு தூயவருள் பாற்கடலாய்
நெல்லார் திருக்களரில் நித்தமுறை வித்தகனாய்
எல்லாரும் காணற் கெளியனாய்ச் சேர்வார்க்கு
வல்லே அருள்வீர சேகரனாம் மாதவனைச்
எல்லே இளங்கிளியே ஏத்திடுவாய் எம்பாவாய்.

3. பொன்னும் புவியும் புனைந்த புகழதுவும்
மன்னுபொருள் என்ன மதித்தலையும் மாண்பிலரை
மன்னும் பொருளல்ல மாண்பிலிகாள் அன்னவெலாம்
என்ன உரைத்தவரை ஏந்துகதிக் காளாக்கி
உன்னும் ஒருபிரமத் தோங்குமுப தேசமதைச்
சொன்ன குருவீர சேகரனாம் சுந்தரனைப்
பன்னும் கலைவளத்தால் பாடமரும் தண்களரில்
மின்னும் மயிற்குகனை வேண்டேலோர் எம்யாவாய்.

4. திருவார் அரசாய்ச் செகமளித்தே மன்னர்
உருவார் அடியில் உறவாகும் வாழ்வும்
தருவார் மகபதியாய்ச் சார்ந்ததனி வாழ்வும்
கருவார் பிறவிக் கடல்கடக்க என்றும்

மருவா எனவுரைத்து மாணும் துறவே
பெருவாழ் வளிக்குமெனப் பேசும் குருவாய்
பருவார் நகிற்கலையாள் பாடும் பரனாய்
வருவீர சேகரனை வாழ்த்தேலோர் எம்பாவாய்.

5. வானும் வளியதுவும் வன்னியுடன் நீரதுவும்
மானும் புவியும் வழங்கும் இருசுடரும்
தேனும் பணியுமொரு தீந்தமிழும் ஆகவெலாம்
ஈனும் பொருளாய் எழிலார் சுகவடிவாய்
யானும் பிரம இரும்பொருளும் ஒன்றெனச்சற்
றேனும் மயக்கமிலா தீந்தபர தேசிகனாய்க்
கோனாய்ப் பசுவாய்க் குலவுநம் வீரேச
பானுவினைத் தென்களரில் பாடேலோர் எம்பாவாய்.

6. காணும் பொருளதனைக் காட்சியதன் தோற்றமெனக்
காணும் உணர்வதுவே கண்ணியமெய்ஞ் ஞானமெனக்
கோணும் உளமுடையார் கொண்ட பலவுருவும்
தாணு எனும்பிரம சத்தெனவும் சாற்றியருள்
வேணும் உருவும் அருவும உருவருவாய்ப்
பூணும் கலைபலவும் பூண்ட களரதனில்
மாணும் அறிவுருவாய் வாழ்வீர சேகரனைச்
சேணும் கடந்தவனைச் சென்றுதொழேல் எம்பாவாய்.

7. பொருந்துமிடம் ஒன்றாய்ப பொருந்திடுமேல் பற்றுப்
பொருந்துமென எண்ணிப் பொருந்தாராய் எங்கும்
திருந்து துறவால் திரிந்துபலி ஏற்போர்
செறிந்து வணங்குமடிச் சீர்வீர மன்னை
வருந்தும் உளத்தால் வருவார் தமக்கு
விருந்து நெறியை விளக்குமொரு கண்ணை
மருந்துமணி மந்திரமு மாயவனை இன்றே
புரிந்து திருக்களரில் போற்றேலோர் எம்பாவாய்.

8. பெண்ணில் பொருளில் பெருமகவில் பித்துடையோர்
கண்ணில் கலவாக் கழல்வீர சேகரனை
எண்ணித் திகழும் எழிலாரும் தென்களரில்
நண்ணித் திருக்கரத்தே நாடும் பலியதனை
ஒண்ணித் திலநகையார் ஊட்ட உவந்துண்ணும்
மண்ணிற் கினியாரை வாழ்விக்கும் மாதவனை
விண்ணிற் சுரியாரும் வேண்டும் விழுப்பொருளைக்
கண்ணின் மணியானைக் காணேலோர் எம்பாவாய்.

9. எல்லா மொழிப்பொருளும் ஏதமிலா நற்குருவால்
கல்லா அவையின்னெறி கண்டுலவும் மேதையரும்
வில்லார் வியன்ஞானம் எய்திலரேல் அன்னோரைச்
சொல்லார் உபதேசம் சொல்லப் பணிந்திடுதல்
நில்லா உலகதனை நின்று நிலவும்எனும்
புல்லறிவோர் தம்மைப் புல்லிப் பணிதலெனும்
நல்லோர் தொழுங்களரில் நம்வீர சேகரனைப்
பல்லோர்க் கருள்வானைப் பாடேலோர் எம்பாவாய்.

10. போதம் புகன்றிடுவான் பொய்ப்பிறவி போக்கிடுவான்
ஏதம் சிறிதுமிலான் எர்ஞானம் பேறுடையான்
நாதத் துருவுடையான் நண்ணுபுகழ்ச் சீருடையான்
சோதிக் களரில் சுகவடிவாய் நின்றிடுவான்
வேதத் தலையுருவான் விண்ணவரும் வேண்டடியான்
சீதத் துளமுடையான் சீரடியார் உள்ளுடையான்
கோதில் மறைதேர் குருவீர சேகரனைப்
போதில் இருப்பவனைப் போற்றேலோர் எம்பாவாய்.

11. சாந்தோக் கியம்பகரும் தத்துவமாம் செம்மொழியைப்
போந்தார்க் களித்தவரைப் போற்றும் கருணையனைப்
பூந்தா மரையோன் புகலும் கழலவனை
மாந்தர்க் குறுதுணையை மன்னும் பரம்பொருளைத்

தேர்ந்தார்ச் செழுங்கழனி சீர்மரபில் சேர்ந்தவனை
வேந்தாய் எதிகட்கும் மேலாகும் வேதியனை
யார்ந்தேர்ந் திடுங்களரில் எம்வீர சேகரனைத்
தீந்தேன் சுவையானைத் தேறேலோர் எம்பாவாய்.

12, தானே முழுதுமாம் தத்துவமாய் நின்ருனை
வானோர் பெருமானை வண்ஞானப் பேரொளியை
ஊனே உயிர்க்கருளும் ஒப்புயர்வில் லாதவனை
யாஞகி எற்கருளும் ஈசனுரு வாங்குருவைத்
தேனே எனப்பகரும் தீந்தமிழால் ஒங்குபுகழ்க்
காஞர் திருக்களரில் காண்வீர சேகரனை
மானேர் விழியுடையாய் மாணும் குணமுடையாய்
பானேர் மொழியுடையாய் பாடேலோர் எம்பாவாய்.

13. தலையா எழுத்தெவைக்கும் சாருமக ரத்தின்
பலவாம் உயிரனைத்தும் பார்த்தியக்கும் கோனை
நிலையாப் பொருளெவையும் நின்றலவும் என்னும்
மலைவால் கடற்பிறவி மன்னுமடி யாருக்
கலையா திறம்புனையை ஆன்ருேர்க் கருளும்
தொலையாப் பொருளாய்த் துறந்தோர்க் கெளிதாய்
உலையா அறிபொருளாய் உள்பொருளாய் ஓங்கும்
மலையாய்வீ ரேசனைநீ வாழ்த்தேலோர் எம்பாவாய்.

14. தன்னை அறிந்து தனக்கிடமாம் கோவிலையும்
துன்னும் தனதுருவாய்ச் சோதிப் பிரமமதாய்ப்
பின்னை அறிந்தவனே பேருக் கதியடையும்
என்ன உரைத்த எழில்வீர சேகரனை
மன்னைச் செழுஞ்சுடரை மன்ருடும் மாதவனைப்
பன்னும் சுவையார் பழந்தமிழின் வாயனையான்
என்னும் செருக்கிழந்திங் கேந்தும் புகழ்க்கடலைக்
கன்னித் தமிழ்க் களரில் காணேலோர் எம்பாவாய்.

15. எந்தப் பொருளும் எவ்வா றிலங்கிடினும்
அந்தப் பொருளில் அறிவுருவைக் காண்பதுவே
சந்தக் குறளின் தனித்தபொருள் என்னவருள்
எந்தை செயவீர சேகரனை எத்துகின்ற
சிந்தைக் கினிய தெருண்ட உளத்தடியார்
பந்தத் தனையழியப் பார்க்குமருட் கண்ணனை
வந்தித் திருந்துநிதம் மாள்பிறவித் துன்பதனைச்
சிந்தித் தவனடியின் சீர்புகழ்வாய் எம்பாவாய்.

16. ஆரா இயற்கையதாம் ஆசையெனும் தீப்பிணியைப்
பேரார் விராகப் பெருங்குணத்து நல்லமுதால்
தீரா மகிழ்ந்து திகழ்ஞானத் தாற்றுறந்தோர்
வாரா நெறியுடையோர் மண்டலத்தை எந்நாளும்
கூரார் வடிவேலைக் கூறும் திருவுடையோர்
நாரார் மநத்தனெனும் நம்வீர சேகரனைச்
சீரார் திருக்களரில் செல்வத் திருத்தளியில்
பாரா நினைந்துநிதம் பாடேலோர் எம்பாவாய்.

17. கூற்றம் குதித்தலொடு கூடுபயம் போக்கலையும்
நோற்றல் அளிக்குமென நொந்துதவம் ஆற்றினரும்
ஏற்ற மிகவணங்கும் எம்வீர சேகரனைச்
சீற்றம் சிறிதும் செகியாச் சிவக்கொழுந்தை
தோற்றம் மிகுமுலகின் தூயதிருக் காரணனைக்
காற்றும் கலவாக் கதிர்நுழையாக் காவதனில்
தூற்று மணங்கமழும் தூய திருக்களரில்
கீற்று மதிநுதலாய் கீர்த்திப்பாய் எம்பாவாய்.

18. வலியில் நிலையார் வலிந்தணியும் வேடம்
புலியினதள் பெற்றம் புனைந்ததுவாம் என்று
கலியில் துறவைக் கணித்த குறளின்
சிலையில் எழுத்ததனில் சிந்தையிலா என்னை

மலிபுன் பவக்கடலில் மாளாமல் எற்றும்
கலையில் பெருவீர கர்த்தாவை நாளும்
நலிவில் சுகக்கடலை நண்ணவரும் பொருளைத்
தலைமைத் திருக்களரில் தாழேலோர் எம்பாவாய்.

19. மையார் இருவினையால் மாண்டுபிறக் கும்மவரை
நய்யாமல் காக்கும் நரனுருவாய் வந்தருளிச்
செய்யா மொழியால் திருத்துறவில் சேர்த்துமநம்
பொய்யாத் திருவேடம் பூணவருள் செய்தவரைக்
கையால் பலியேற்கும் கள்ளமிலா வாழ்வதனில்
வையாத் தவமதனல் வான்கதியில் வைப்பவனைச்
செய்யார் திருக்களரில் சேர்வீர சேகரனை
நெய்யார் கருங்குழலாய் நீபுகழ்வாய் எம்பாவாய்.

20. கோளில் பொறியில் குணமிலவாம் எண்குணத்து
வேளில் பொலியும் விறல்வீர சேகரன்றன்
தாளில் வணங்காத் தலைகளெலாம் என்றுரைத்த
சூழுறவு தேர்ந்து தோன்றல்வீ ரேசனடி
நாளும் தலைவணங்கும் நல்லோர் நடுவணுறும்
கோளைக் கடைப்பிடித்துக் கோதகன்ற செந்தமிழால்
வாளில் பொலிவிழியாய் வான்மருந்தொப் பாமொழியாய்
தோளிலமை காட்டிடுவாய் சொற்றிடுவாய் எம்பாவாய்.

திரு எம் பாவை முற்றிற்று.

1. போற்றிநல் மாதவர் புகன்றிடும் பொருளே
புங்கவர் தொழவரும் புரையறும் இறையே,
மாற்றறும் மனமதும் மாண்டநன் மணியே
மந்திரத் துட்பொருள் ஆமொரு மலையே,
தோற்றமில் தினமணி யாயொளிர் ஒளியே
துவந்துவம் அகன்றிடும் துங்கநல் துணையே,
மேற்றிகழ் திருக்களர் வீரசே கரனே
மேதைய னேபள்ளி எழுந்தரு ளாயே.

2. மாதவன் மலரவன் மகபதி முதலோர்
மந்திரக் கடைதனில் வந்துநின் றனரால்,
ஆதவன் சோதியின் அணுகினன் முந்நீர்
அந்தணர் தங்கடன் ஆற்றுதற் கானார்,
ஓதநல் தடமதில் ஒண்மரை மலர்கள்
ஒளியொடு மலர்ந்தன ஒலித்தபல் வியங்கள்,
ஏதமில் திருக்களர் வீரசே கரனே
இறையவ னேபள்ளி எழுந்தரு ளாயே.

3. கோலநல் குருபர குலக்குணக் குகையே
குற்றமில் நற்றவக் குறைவிலா நிறைவே,
காலமும் தேசமும் கடந்தவான் வெளியே
கலைமறை முழுதுணர் கற்பகக் கனியே,
சீலமும் ஞானமும் செறிந்தநல் திருவே
சிவநெறி அருள்பர தேசிகோத் தமனே,
மேலமர் களர்வளர் வீரசே கரனே
வேலவ னேபள்ளி எழுந்தரு ளாயே.

4. வாரமர் வனமுலை வாணகை யவரை
மடிதனத் துடன்மனை மனமதில் கருதாப்,
பேரமர் பெரியரும் பேணுசற் குருவே
பிறப்பிறப் பெனுந்துயர் பிரிந்தசிற் பரமே,

காரமர் பொழிற்களர் கலந்தகற் பகமே
கதியருள் கனைகழல் கண்ணினுண் மணியே,
சீரமர் மறைபுகழ் வீரசே கரனே
சிற்பர னேபள்ளி எழுந்தரு ளாயே,

5. தந்தையும் தாயுமாய்த் தனித்தநல் சிவமே
தமியனுக் கருடனைத் தந்துயிர்க் குயிராய்,
மூந்துறு முதலதாய் முளைத்தவங் குரமே
முப்பெரும் இறைவராய் முடிந்தமுப் பொருளே,
அந்தமில் இன்பதை அளித்தடி யவர்க்கே
அனைத்துல கெங்கணும் அமர்ந்தபூ ரணமே,
சிந்திய மும்மல வீரசே கரனே
சித்துரு வேபள்ளி எழுந்தரு ளாயே.

6. ஒன்றெனப் பரமதை உரைத்ததன் உருவே
உண்மையின் உருவென அருளியிவ் வுலகை,
மன்றினில் நடமுறு மதியணி உருவாய்
மதியென அருளிய மாமறைக் கொளுந்தே,
சென்றபல் பவமதில் செய்தநல் தவத்தால்
சிறியனை அடியுறச் செய்தசற் குருவே,
இன்றெனக் கெளிவரு வீரசே கரனே
இமயவ னேபள்ளி எழுந்தரு ளாயே.

7. தாயினும் அருண்மிகச் சார்ந்தசற் குணனே
சங்கர னேமறை தந்தவே தியனே,
நாயினும் கடையனை நயந்துநல் கதியை
நல்கிய பிரமமாம் ஞானநல் ஒளியே
பாயிருள் நீங்கிடப் பரவுவின் மணியே
பழுதறு திருக்களர் உறைபவ இறையே,
நீயெனைப் பணிகொள வீரசே கரனே
நின்மல னேபள்ளி எழுந்தரு ளாயே.

8. நீந்தரும் பவக்கடல் நீந்துதற் கடியார்
நினைந்தடி பரவிட நிகழ்ந்தநல் புணையே,
வாய்ந்தசற் சிற்கன வளரொளி மதியே
வந்தனைக் குரியவண் மாணுநல் இன்பே,
சாந்தியும் தாந்தியும் தாங்குநல் பெரியோர்
சார்ந்திடற் குரியநின் சந்தவா னிடமே,
வாய்ந்தநல் தண்ணளி வீரசே கரனே
வண்கள ராய்பள்ளி எழுந்தரு ளாயே.

9. தோற்றுறும் உலகெலாம் சொப்பனத் தியல்பாய்த்
தோற்றுறும் எனவருள் சுத்தநிர்க் குணனே,
சீற்றமில் முனிவரும் சிந்தையில் அமைத்தே
சென்றுவக் கித்திடும் தீரநல் அறிவால்,
மாற்றரும் பவக்கடல் மாற்றுமந் தணனே
மதியினுக் கறிவரும் மாட்சிகொள் பெரியோய்,
ஏற்றவர்க் கிதமருள் வீரசே கரனே
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

10. அன்புரு வாய்வரும் இன்பநல் அமுதே
அடியவர்க் கருடர அமர்ந்தசற் குருவே,
துன்புறும் உலகியல் துறந்தநல் துறவோர்
தொழுமடி யுறவருள் சோகமந் திரமே,
தென்றமிழ்க் கலையொடு செழுமறைக் கலையும்
திகழ்தர அடியவர்க் கீந்ததே சிகனே,
இன்புறு திருக்களர் வீரசே கரனே
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

திருப் பள்ளி எழுச்சி முற்றுப் பெற்றது.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் | பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | பிரஹ்மண | பிரஹ்மணே | 35 | 10 | கற்பகமாத் | கற்பகமாங் |
| 2 | 3 | சம்ஸ்கிரு | சம்ஸ்கிருத | ,, | 13 | கற்றதனும் | கற்றதனல் |
| ,, | 21 | உபாநா | உபாசநா | ,, | 20 | மிவிர் | நீவிர் |
| 3 | 10 | தனக்ரு | தனக்கு | ,, | ,, | குறைதீரப் | குறைத்துப் |
| ,, | 15 | கவிப்பா | கவிப்பா | 36 | 2 | மிகக் குடித்து | மிக இடித்து |
| ,, | 19 | இருக்கின றது | இருக்கின்றது | ,, | 3 | கட்கருனே | கட்கருளே |
| ,, | 20 | உபாசணேத். | உபாசனேத் | 38 | 4 | எம்பாவாய் | எம்பாவாய் |
| 6 | 14 | பாடும | பாடும் | ,, | 21 | மின்னேயுறழ் | மின்னேர் |
| ,, | 17 | சிதமபர | சிதம்பர | ,, | 24 | பொங்கொளியாய் | பொங்கொளியால் |
| 7 | 14 | தெள் | தென் | 39 | 6 | டேழாதே | டெழாதே |
| 8 | 9 | சங்க | சங்கர | 40 | 2 | சுரமர்மீ | காமர்மீ |
| 2 | 2 | சிரிங்க | சிருங்க | ,, | 20 | நம்மை | நன்மை |
| 3 | 8 | உண்டால் | உண்டல் | 45 | 16 | எழுந்தளு | எழுந்தரு |
| ,, | 9 | மருந்தெனும் | மருந்தெனினும் | 46 | 3 | வீரகேர | வீரசேகர |
| 4 | 8 | பவைஷ | பாவைஷ | ,, | 15 | விண்ணேர்கள் | விண்ணேர் |
| 8 | 12 | நள்றே | நன்றே | 47 | 24 | மாடாலயமும் | மடாலயமும் |
| ,, | 15 | மறைசுள் | மறைகள் | 48 | 8 | பரமார்த்தலே | பரமார்த்தநிலே |
| ,, | 19 | எமுந்தரு | எழுந்தரு | 49 | 1 | வீரோசன் | வீரேசன் |
| 12 | 10 | டுனதடி | டுதனதடி | ,, | 2 | பூம்பாத | பூம்பாதம் |
| 13 | 4 | பரமாம் | பரமமாம் | ,, | 4 | யாகக் | யாக் |
| 19 | 2 | சுயர் | சுயம் | 50 | 18 | நெஞ்சும்நழுவியுனேநேர் | என்ற வீரேசன் |
| 21 | 5 | பெறுவோர்க்குச் | பெறுவோர்க்குப் | ,, | 21 | பெற்றுமா | பெற்று றுமா |
| 25 | 13 | ஈறுதவ | ஏறுதவ | 51 | 10 | ஆடேலோா | ஆடேலோர் |
| 27 | 1 | தொலேத்துக் | தொலேத்துத் | 52 | 12 | சாத்தாய் | சத்தாய் |
| 31 | 19 | எமுர்தரு | எழுந்தரு | ,, | 21 | அறிவோக்குத் | அறிவோர்க்குத் |
| 34 | 23 | எழுந்தருளிளாயே | எழுந்தரு ளாயே | 53 | 10 | மாாகழிநீர்ஆடலோர் | மார்கழிநீர்ஆடே |
| | | | | 56 | 1 | திரு பள்ளி | திருப் பள்ளி [லோர் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 58 | 1 | மாரகழியில் | மார்கழியில் |
| ,, | 2 | போதனில் | போததனில் |
| ,, | 3 | நீர்முழ்கி | நீர்மூழ்கி |
| ,, | 9 | முன்றும் | மூன்றும் |
| 59 | 23 | ஆத்தா | அத்தா |
| ,, | 24 | எம்பாய் | எம்பாவாய் |
| 60 | 1 | சொல்வம் | செல்வம் |
| ,, | 15 | மயக்கறுக்கு | மயக்கறுக்கும் |
| ,, | 16 | என்பாவாய் | எம்பாவாய் |
| ,, | 17 | தெய் நா | தெய்வ நா· |
| 61 | 5 | ப வறங்கள் | பல வறங்கள் |
| ,, | 11 | வேன | வென |
| ,, | 14 | கின்ஞய் | கின்ருய் |
| 62 | 14 | பாமாநந்தம் | பரமாநந்தம் |
| ,, | 18 | நற்றதவஞய் | நற்றவஞய் |
| ,, | 24 | முழ்காய் | மூழ்காய் |
| ,, | ,, | எம்பாவய் | எம்பாவாய் |
| 63 | 2 | வெதளை | வெதனை |
| ,, | 7 | லுவைத்த | லுதைத்த |
| ,, | 15 | கேகரனை | சேகரனை |
| ,, | 19 | முடி | மூடி |
| ,, | 22 | ஓதுமடி | ஓதுமடி |
| 64 | 3 | மென | மென் |
| ,, | ,, | உனமதனைக் | உளமதனைக் |
| ,, | 9 | வெனி | வெளி |
| ,, | 11 | வேளுய்க் | வேருய்க் |
| ,, | 14 | ஒட்டவரும் | ஓட்டவரும் |
| ,, | ,, | வீரேசத | வீரேசத் |
| ,, | 16 | பெண்ணங்கே | பெண்ணணங்கே |
| 65 | 2 | முகிவரன்ஞன் | முகிவரன்ருன் |
| ,, | 4 | வேதந்த | வேதாந்த |
| ,, | 12 | வீரகேசஞர் | வீரசேகரஞர் |
| 66 | 2 | அதினில் | அதனில் |
| ,, | 15 | மூகியே | முகியே |
| 67 | 11 | சரணநீர் | சாணநீர் |
| ,, | 22 | தணிலுறும் | தனிலுறும் |
| 68 | 11 | சொற்றமும் | செற்றமும் |
| ,, | 14 | ரேய்வுறும | ரேய்வுறும் |
| ,, | ,, | யோகியரும | யோகியரும் |
| ,, | 19 | ஒன்றியைம | ஒன்றியைம் |
| ,, | 22 | சிவம | சிவம் |
| 3 | 24 | பெண்ணங்கே | பெண்ணணங்கே |
| 12 | 9 | தொன்ஞறும் | தொண்ஞறும் |
| ,, | 12 | முததிராம | முத்திராம |
| ,, | 17 | நாடதனில | நாடதனில் |
| ,, | 18 | ஆதிநம் | ஆதீநம் |
| ,, | 28 | ஆதிநக் | ஆதீநக் |
| 13 | 26 | சேகரஞம | சேகரஞம் |
| 22 | 15 | மாதவனைச் | மாதவனை |
| ,, | 18 | மதித்தலையும | மதித்தலையும் |
| ,, | 27 | வாழவும் | வாழ்வும் |
| 25 | 17 | புனையை | புணையை |
| 26 | 6 | பந்தத்தனை | பந்தர்தனை |

श्री काशिकानन्द ज्ञानाचार्य स्वामिकल्, तिरुप्पूवणम् ।



ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய ஸ்வாமிகள், திருப்பூவணம்.